


# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com




CHENNAI Volume- 3 Issue:127 22-11-2025 சனிக்கிழமை Free E- Paper

● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

22.11.2025 கார்த்திகை 6
சனிக்கிழமை

சூரிய உதயம் 6.15

திதி:
இன்று மாலை 4.24 வரை துவிதியை பின்பு திரிதியை.

நட்சத்திரம்:
இன்று மாலை 4.49 வரை கேட்டை பின்பு மூலம்

யோகம் :
இன்று காலை 11.29 வரை சுகர்மம் பின்பு திருதி.

கரணம் :
இன்று அதிகாலை 3.31 வரை பாலவம் பின்பு மாலை 4.24 வரை கௌலவம் பின்பு தைதுலம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.14 வரை யோகம் சரியில்லை பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று மாலை 4.49 வரை பரணி பின்பு கார்த்திகை.

நல்ல நேரம்
காலை 7.45 – 8.45.
மாலை 4.45 – 5.45.

இராகு காலம்
காலை 9.00 – 10.30.

எமகண்டம்
பிற்பகல் 1.30 – 3.00.

குளிகை
காலை 6.00 – 7.30

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
செல்: 8189908040

## வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் ஏன்?



**பூஜ், நவ.22:** எல்லை பாதுகாப்புப் படையின் 61வது நிறுவன தினத்தை முன்னிட்டு குஜராத்தின் பூஜ் நகரில் நடைபெற்ற விழாவில் பங்கேற்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆற்றிய உரை: நாட்டின் எல்லையை பாதுகாப்பதில் எல்லைப் பாதுகாப்புப் படையினர் அர்ப்பணிப்புணர்வுடன் செயல்படுவதைக் கண்டு நாட்டின் உள்துறை அமைச்சராக பெருமைப்படுகிறேன். 60 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள எல்லைப் பாதுகாப்புப் படைக்கு வாழ்த்துகள். நாட்டின் எல்லையில் எல்லைப் பாதுகாப்புப் படை இருக்கும் வரை, எதிரியால் ஒரு அங்குலம் கூட முன்னேற முடியாது என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை இந்த 60 ஆண்டுகளில் எல்லைப் பாதுகாப்புப் படை அளித்துள்ளது.

இந்தியாவுக்குள் ஊடுருவலைத் தடுப்பது நாட்டின் பாதுகாப்புக்கு மட்டுமல்ல, நாட்டின் ஜனநாயக அமைப்பு மாசுபடுவதைத் தடுப்பதற்கும் அவசியம். எனவே, நமது நாட்டில் இருக்கும் அனைத்து ஊடுருவல்காரர்களையும் நாங்கள் அடையாளம் காண்போம், அவர்களை வெளியேற்றுவோம் என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இது எங்கள் உறுதிமொழி. தேர்தல் ஆணையம் மேற்கொள்ளும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்பது நாட்டையும் நமது ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்கான ஒரு செயல்முறை.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக, சில அரசியல் கட்சிகள் ஊடுருவல்காரர்களைப் பாதுகாக்கும் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளன. இவ்வாறு அமித் ஷா பேசினார்.

## தென் ஆப்பிரிக்காவில் பிரதமர் மோடி...!



ஜி20 உச்சிமாநாட்டில் பங்கேற்க பிரதமர் மோடி நேற்று தென் ஆப்பிரிக்கா சென்றுள்ளார்.
தனி விமானம் மூலம் ஜோகனர்ஸ்பர்க் நகர் சென்ற பிரதமர் மோடிக்கு தென் ஆப்பிரிக்க அரசு சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜி20 உச்சி மாநாட்டின் 3 அமர்வுகளிலும் பங்கேற்கும் பிரதமர் மோடி காலநிலை மாற்றம், எரிசக்தி உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து உரையாற்ற உள்ளார்.இந்த உச்சி மாநாட்டிற்குப்பின் இந்தியா – பிரேசில் – தென் ஆப்பிரிக்கா தலைவர்களின் கூட்டு கூட்டத்திலும் பிரதமர் மோடி பங்கேற்க உள்ளார். முன்னதாக, ஜி20 உச்சி மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், சீன அதிபர் ஜி ஜின்பிங் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் பங்கேற்கவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.

# கவர்னர்களுக்கு காலக்கெடு நிர்ணயிக்கும் வரை ஓயமாட்டோம்

## முதலமைச்சர் ஸ்டாலின் சூளுரை

**சென்னை, நவ.22:** மாநில உரிமைகளையும், உண்மையான கூட்டாட்சியையும் நிலைநாட்டும் நமது போராட்டம் தொடரும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

“சட்டமுன்வடிவுகள் மீது முடிவெடுக்க ஆளுநர்களுக்குக் காலக்கெடு விதிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படும் வரை நாம் ஓயமாட்டோம்!

குடியரசுத் தலைவரின் கேள்விகளுக்கு உச்சநீதிமன்றம் அளித்துள்ள விளக்கங்கள் ஆளுநருக்கு எதிராகத் தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் பெற்ற 8 ஏப்ரல் 2025 தீர்ப்பின் மீது எந்தத் தாக்கத்தையும் செலுத்தாது. சொல்லப் போனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான் ஆட்சியைச் செலுத்த வேண்டும், மாநிலத்தில் இரண்டு அதிகார மையங்கள் இருக்க முடியாது.

அரசியலமைப்புச் சட்டத்தின் சட்டகத்துக்குட்பட்டே அரசியலமைப்புப் பதவியில் இருப்போர் செயல்பட வேண்டுமே ஒழிய, அரசியலமைப்பை மீறிச் செயல்படலாகாது!

சட்டமுன்வரைவுக்கு ஒப்புதல் மறுப்பது / (தமிழ்நாடு ஆளுநர் செய்தது போல) காலவரையின்றி ஒப்புதல் வழங்காமல் நிறுத்தி வைப்பது எனும் நான்காவது விருப்பத் தேர்வு ஆளுநருக்கு இல்லை.

மசோதாக்களின் மீது முடிவெடுக்காமல் காலவரையின்றி ஆளுநர் தாமதம் செய்ய இயலாது. அப்படி, எந்த விளக்கமும் இல்லாமல் நீண்டகாலம் இழுத்தடித்தால், மாநிலங்கள் நீதிமன்றங்களை அணுகலாம். ஆளுநர்கள் வேண்டுமென்றே தாமதிப்பதற்கு எதிராக வழக்கு தொடுத்து, கேள்விக்குட்படுத்தி நியாயம் பெறலாம் என்பனவற்றைத் தனது விளக்கத்தில் உச்சநீதிமன்ற அமர்வு மீண்டுமொருமுறை உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும் புனித சேவியர் கல்லூரி, அகமதாபாத் v. குஜராத் அரசு (1974) 1 SCC 717 வழக்கின் தீர்ப்பில் (பத்தி 109), 9 நீதிபதிகள் கொண்ட அமர்வானது, "நீதிமன்றங்கள் தெரிவிக்கும் கருத்துகள் என்பவை அரசு தலைமை வழக்கறிஞர்கள் தெரிவிக்கும் கருத்துகளைப் போன்றவை என்பதைக் கடந்து அவற்றுக்கென எந்த மதிப்பும் இல்லை எனத் தெளிவாகக் கூறியுள்ளது.

காலவரையின்றிக் காலம் தாழ்த்தலாம், சட்டமுன்வடிவுகளுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் மறுக்கலாம் எனும் தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் கூற்றை உச்சநீதிமன்றத்தின் நேற்றைய கருத்து மீண்டுமொருமுறை நிராகரித்துள்ளது.

தமிழ்நாடு ஆளுநர் உட்பட மாநில அரசுகளுடன் மல்லுக்கட்டும் அனைத்து ஆளுநர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் வழியில் செயல்பட வேண்டும் என்பதையும், மக்களின் விருப்பத்தைச் சட்டமியற்றி நிறைவேற்றும்போது, வேண்டுமென்றே ஒப்புதல் அளிக்காமல் காலத்தைக் கடத்தினால் நீதிமன்றங்களில் அதற்குப் பதில் சொல்லியாக வேண்டுமென்பதையும் நமது சட்டப் போராட்டத்தின் மூலம் கட்டாயமாக்கியுள்ளோம்!

அரசியல்சட்டப்பிரிவு 361-க்குப் பின்னால் ஆளுநர்கள் ஒளிந்துகொள்ள முடியாது என்பதையும் உறுதிப்படுத்தி உள்ளோம். அரசியல் சட்டத்தால் அமையப்பெற்ற எந்தப் பதவியும் அச்சட்டத்துக்கு அப்பாற்பட்டதில்லை என நான் திடமாக நம்புகிறேன். உயர்ந்த அரசியலமைப்புப் பதவிகளில் இருப்போரே அரசியலமைப்புச் சட்டத்தை மீறி நடந்தாலும், நீதிமன்றங்கள்தான் ஒரே நம்பிக்கை. ஆகவே, நீதிமன்றங்களின் கதவு தீர்வுபெறத் திறந்தே இருக்க வேண்டும். அது தனது கதவுகளை அடைத்தால், நமது அரசியலமைப்பின்படியான மக்களாட்சியில் சட்டத்தின் ஆட்சியைச் சிறுமைப்படுத்திவிடும்; அரசியல் உள்நோக்கத்தோடு செயல்படும் ஆளுநர்கள் அரசியலமைப்புச் சட்டத்துக்குப் புறம்பாக நடந்துகொள்வதை ஊக்குவிக்கும்.தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்தைச் சட்டங்களின் மூலம் நிறைவேற்ற, அரசியலமைப்புச் சட்டத்துக்குட்பட்டு அரசியலமைப்புக் கருவிகள் செயல்படுவதை உறுதிசெய்யத் தொடர்ந்து உழைப்போம்! எங்கள் வாக்கைக் காப்பாற்றுவோம்! என்று கூறியுள்ளார்.

# குடும்பத்துடன் ஜனாதிபதி திருப்பதியில் சாமி தரிசனம்



**திருப்பதி, நவ.22:** திருச்சானூர் பத்மாவதி தாயார் கோவிலில் வருடாந்திர கார்த்திகை பிரம்மோற்சவ விழா கோலாகலமாக நடந்து வருகிறது.

விழாவில் பங்கேற்று தரிசனம் செய்வதற்காக ஜனாதிபதி திரவுபதி முர்மு தனி விமானத்தில் புறப்பட்டு நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் ரேணிகுண்டா வந்திறங்கினார். அவருடன் தனது மகள் இதி ஸ்ரீ முர்மு மற்றும் குடும்ப உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

விமான நிலையத்தில் ஜனாதிபதிக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து ஜனாதிபதி திரவுபதி முர்முவை ஆந்திர மாநில மந்திரி வங்கலப்புடி அனிதா, திருப்பதி மாவட்ட கலெக்டர் வெங்கடேஸ்வர், போலீஸ் ஐ.ஜி.ராஜகுமாரி, திருப்பதி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுப்பாராயுடு, திருப்பதி தொகுதி எம்.பி. குருமூர்த்தி, ஸ்ரீகாளஹஸ்தி தொகுதி எம்.எல்.ஏ. பொஜ்ஜல.சுதீர்ரெட்டி ஆகியோர் பூங்கொத்துக் கொடுத்து வரவேற்றனர்.

அதன்பிறகு ஜனாதிபதி ரேணிகுண்டா விமான நிலையத்தில் இருந்து காரில் புறப்பட்டு பலத்த பாதுகாப்போடு திருப்பதி வழியாக திருச்சானூருக்கு சென்றார். அங்கு, பத்மாவதி தாயார் கோவிலில் ஜனாதிபதி திரவுபதி முர்மு சாமி தரிசனம் செய்தார். அவருக்கு அதிகாரிகள் லட்டு, தீர்த்தப்பிரசாதம் வழங்கினர்.

அதன்பிறகு ஜனாதிபதி திரவுபதி முர்மு திருச்சானூரில் இருந்து காரில் புறப்பட்டு திருமலையை அடைந்தார். அங்கு, திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பி.ஆர்.நாயுடு, கூடுதல் அதிகாரி வெங்கையா சவுத்ரி ஆகியோர் பூங்கொத்து வழங்கி வரவேற்றனர். இதையடுத்து ஜனாதிபதி, திருமலையில் உள்ள பத்மாவதி விருந்தினர் மாளிகைக்கு சென்று ஓய்வெடுத்தார்.

நேற்று காலை 9.30 மணி அளவில் திருப்பதி மலையில் வராஹ சாமியை தரிசனம் செய்தார். அங்கு ஜனாதிபதிக்கு தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பி.ஆர்.நாயுடு, தலைமை நிர்வாக அதிகாரி அணில் குமார் சிங்கால், கூடுதல் தலைமை நிர்வாக அதிகாரி வெங்கைய்ய சவுத்ரி வரவேற்பு அளித்து திருப்பதி கோவிலுக்குள் அழைத்துச் சென்றனர்.

# துபாய் ‘ஏர் ஷோ’வில் இந்தியாவின் தேஜாஸ் போர் விமானம் வெடித்துச் சிதறி விபத்து - விமானி உயிரிழப்பு

**புதுடெல்லி:, நவ.22:** துபாயில் உள்ள அல் மக்டோம் சர்வதேச விமான நிலையத்தில் கடந்த 17-ம் தேதி விமான கண்காட்சி 2025 தொடங்கியது. விமான கண்காட்சியின் கடைசி நாளான இன்று (நவ.21) இந்திய விமானப் படையின் தேஜாஸ் விமானத்தின் சாகச நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த கண்காட்சியைக் காண ஏராளமானோர் கூடி இருந்தனர்.



இந்நிலையில், தேஜாஸ் விமானம் பறக்கத் தொடங்கிய சிறிது நேரத்திலேயே மைதானத்தில் கீழே விழுந்து வெடித்துச் சிதறியதாக கலீஜ் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. உள்ளூர் நேரப்படி இன்று பிற்பகல் 2.15 மணி அளவில் இந்த விபத்து நேரிட்டுள்ளது. இந்த விபத்தில் விமானி உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த விபத்தை அடுத்து, விமான கண்காட்சி நிறுத்தப்பட்டது.

இந்த விபத்தை உறுதிப்படுத்தியுள்ள இந்திய விமானப் படை, இது குறித்து விசாரணை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இந்திய விமானப் படை தனது எக்ஸ் பக்கத்தில், ‘துபாய் விமான கண்காட்சியில் இன்று நடைபெற்ற வான் கண்காட்சியின்போது இந்திய விமானப் படையின் தேஜாஸ் விமானம் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் விமானி உயிரிழந்தார்.

உயிரிழப்புக்கு இந்திய விமானப் படை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. இந்த துயரமான நேரத்தில் உயிரிழந்த விமானியின் குடும்பத்தினருடன் இந்திய விமானப் படை உறுதியாக நிற்கிறது. விபத்துக்கான காரணத்தைக் கண்டறிய விசாரணை நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய விமானப் படையின் தேஜாஸ் லகு ரக போர் விமானம் முதன்முறையாக கடந்த ஆண்டு மார்ச் 12-ம் தேதி ஜெய்சல்மாரில் நடைபெற்ற ஒரு பயிற்சிப் பயணத்தின்போது விபத்துக்குள்ளானது. இந்நிலையில், தற்போது துபாயில் விபத்துக்குள்ளாகி உள்ளது. விமானம் விபத்துக்குள்ளானதன் வீடியா காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி உள்ளன. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஜெட் விமானமான தேஜாஸ், தனது முதல் விமானத்தை கடந்த 2001, ஜனவரி 4-ம் தேதி இயக்கியது. ஒற்றை எஞ்சின் கொண்ட இந்த உள்நாட்டுப் போர் விமானத்துக்கு அப்போதைய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் ‘தேஜாஸ்’ என பெயரிட்டார்.






# திருக்குறள் குறள்-447

**இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்**



கடிந்து அறிவுரைக் கூறவல்ல பெரியாரின் துணை கொண்டு நடப்பவரை கெடுக்கும் ஆற்றல் உள்ளவர் எவர் இருக்கின்றனர்.

## சிந்திக்க ஒரு நொடி



எவ்வளவு தான்
அறிவு இருந்தாலும்
அது பொறுமைக்கு
ஈடாகாது.....

எவ்வளவுதான் பணம்
இருந்தாலும் அது
அன்பான குணத்திற்கு
ஈடாகாது.....

**உஷா முத்துராமன்**

## ‘திராவிடம் 2.0 - ஏன்? எதற்கு?’ நூல் வெளியீட்டு விழா




தமிழ் கேள்வி’ ஆசிரியர், ஊடகவியலாளர் செந்தில்வேல் எழுதிய ‘திராவிடம் 2.0 - ஏன்? எதற்கு?’ நூலை துணை முதல்வர் உதயநிதி வெளியிட்டார். அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி, எம்எல்ஏக்கள் வேலு, செல்வப்பெருந்தகை உள்பட பலர் பங்கேற்றனர்.

## நீடித்த நீர் மேலாண்மை 34வது குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் வேலூர் மாவட்ட இளம் விஞ்ஞானிகளாக 14 மாணவ மாணவிகள் தேர்வு!




**வேலூர்,நவ.22:** தமிழ்நாடு அறிவியல் இயக்கம், இந்திய கணித அறிவியல் நிறுவனம், மாவட்ட பள்ளிக்கல்வித்துறையுடன் இணைந்து நீடித்த நீர் மேலாண்மை என்ற தலைப்பில் 34வது குழந்தைகள் அறிவியல் மாநாட்டை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை காட்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 20ம் தேதி நடத்தியது.

## 41 வது பாரதியார் தின குழு விளையாட்டு போட்டி




திருவண்ணாமலை மாவட்டத்தில் மாநில அளவிலான 41 வது பாரதியார் தின குழு விளையாட்டு போட்டிகளை அமைச்சர்கள் எ.வ.வேலு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் தொடங்கி வைத்து பேசினர்.

## ஆதிகும்பேஸ்வரர் கோவில் ராஜகோபுரம் மின்விளக்குகளால் அலங்கரிப்பு



கும்பகோணம் ஆதிகும்பேஸ்வரர் கோவில் ராஜகோபுரம் தேசியக் கொடியின் 3 வண்ணங்களில் ஒளிரும் வகையில் மின்விளக்குகள் அமைக்கப்பட்டு சோதனை நடத்தப்பட்டது.

## மயிலாடுதுறை அபிநயா பரத நாட்டிய குழுவின் துலா உற்சவ 11-ஆம் ஆண்டு நாட்டியாஞ்சலி



**மயிலாடுதுறை , நவ , 22:** மயிலாடுதுறையில் கடைமுக தீர்த்தவாரி உற்சவத்தை முன்னிட்டு இரவிலும் களைகட்டியது காவிரி துலாக்கட்டம். துலா உற்சவத்தை முன்னிட்டு நடைபெற்ற நாட்டியாஞ்சலி நிகழ்ச்சியை மழையிலும் குடை பிடித்தவாறு நின்று ஏராளமான பொது மக்கள் கண்டு ரசித்தனர். மயிலாடுதுறையில் காவிரி ஆற்றை மையப்படுத்தி ஐப்பசி மாதம் 30 நாட்களும் நடைபெறும் காவிரி துலா உற்சவத்தின் சிகர விழாவான கடை முக தீர்த்தவாரி மதியம் நடைபெற்றது.

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியை எ.வ.வே.கம்பனை பொன்னாடை போர்த்தி வரவேற்றார்



திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வருகை தந்த பள்ளி கல்வித்துறை மாண்புமிகு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களை டாக்டர் எ.வ.வே. கம்பன் அவர்கள் பொன்னாடை போர்த்தி வரவேற்றார்.
**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## தமிழ் உரிமை இயக்கத்தினர் முற்றுகைப் போராட்டம்



புதுச்சேரி மின் பேருந்துகளில் தமிழ் பெயர் இல்லாதாதல் தமிழ் உரிமை இயக்கத்தினர் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## எம்ஆர்பி செவிலியர்கள் பணி நிரந்தரம் கோரி தர்ணா



ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகம் முன் எம்ஆர்பி செவிலியர்கள் பணி நிரந்தரம் கோரி தர்ணா செய்தனர்.

## மீனவர் தினம் கொண்டாடிய தமிழ்நாடு மீனவர் பேரவையினர்



ராமேசுவரம் நடுக்கடலில் கட்டுமர மீனவர்களுக்கு இனிப்புகள், வேட்டிகளை வழங்கி மீனவர் தினம் கொண்டாடிய தமிழ்நாடு மீனவர் பேரவையினர்.

## திட்டக்குடி சட்டமன்ற தொகுதியில் அமைச்சர் சி.வெ.கணேசன் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து நலத்திட்ட உதவிகளை வழங்கினர்



**திட்டக்குடி.நவ:22:** கடலூர் மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட அரங்கூர், மலையனூர்,செவ்வேரி,புல்லூர் தொண்டாங்குறிச்சி சிறுகரம்பலூர் ஆகிய கிராமங்களில் மக்கள் குறைதீர்க்கும் முகாம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

## ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஞானரத யாத்திரை



பெங்களூருவுக்கு சொக்கநாதபெருமானுடன் தருமபுரம் ஆதீனம் 27-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஞானரத யாத்திரை புறப்பட்டார்.

## உலக மீனவர் தினம் கேக் வெட்டி கொண்டாட்டம்




நாகர்கோவில் பரதர் தெருவில் உலக மீனவர் தினம் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

## அணைக்கட்டு வட்டாட்சியருக்கு சைக்கிள் ஓட்டி காண்பித்த தேர்வர்கள் !



**வேலூர் ,நவ.22 :** வேலூர் மாவட்டத்தில் கிராம உதவியாளர் பணியிடங்களுக்கு ஆட்கள் தேர்வு செய்யப்பட்ட வருகிறது. இந்நிலையில் அணைக்கட்டு தாலுகாவில் எட்டு வருவாய் கிராம உதவியாளர் பணியிடங்களுக்கு 722 பேர் விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களுக்கு கடந்த இரண்டாம் தேதி எழுத்து தேர்வு நடந்தது. வரும் 27ஆம் தேதி வரை நாள் ஒன்றுக்கு 25 பேருக்கு வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் பல்வேறு தேர்வுகள் நடத்தப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சைக்கிள் ஓட்டி காண்பிக்கும் தேர்வு நடந்து வருகின்றது. இதில் தேர்வர்கள் சைக்கிளை ஓட்டி வட்டாட்சியருக்கு காண்பித்தனர்.

இந்த சைக்கிள் ஓட்டும் தேர்வர்களை தேர்வு செய்யும் பணியில் அணைக்கட்டு வட்டாட்சியர் சுகுமாரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## மரக்கன்றுகள் நடும் பணி



திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி ஒன்றியம் அம்பலூர் ஊராட்சியில் பல்வேறு வகையான மரக்கன்றுகள் நடும் பணியை ஊராட்சிமன்ற தலைவர் A.P.முருகேசன் துவக்கி வைத்தார். இதில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஹேமச்சந்திரன் குருராஜன், ஊராட்சி செயலாளர் மற்றும் வார்டு உறுப்பினர்கள்,பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்

## மொசுக்கரை பகுதியில் உள்ள கோயிலில் குத்துவிளக்கு பூஜை



கொடுமுடி வட்டம், வெள்ளோட்டம்பரப்பு பேரூராட்சி, மொசுக்கரை பகுதியில் உள்ள கோயிலில் குத்துவிளக்கு பூஜை நடந்தது. பாஜக எம்எல்ஏ சரஸ்வதி பங்கேற்றார்.

## அரசுக் கல்லூரிகளுக்கு புதிய கூடுதல் கட்டடங்கள்

**சென்னை, நவ.22:**

உயர்கல்வித் துறை சார்பில் கடலூர், விழுப்புரம், திருப்பத்தூர், அரியலூர், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ரூ. 59.93 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார். மேலும், 190 உதவிப் பேராசிரியர்கள் உள்ளிட்டோருக்கு பணி நியமன ஆணைகளையும் முதலமைச்சர் வழங்கினார். திறன்மிகு மையங்களாக மேம்படும் 44 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## பொள்ளாச்சி பாலியல் வழக்கு குற்றவாளி மேல்முறையீடு

**சென்னை, நவ. 22:**

பொள்ளாச்சி கும்பல் பாலியல் வழக்கில் விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை எதிர்த்து, குற்றவாளி திருநாவுக்கரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு அளித்துள்ளார்.இந்த வழக்கில் திருநாவுக்கரசு, சபரிராஜன், சதீஷ் உள்ளிட்ட ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர். கோவை நீதிமன்றம் கடந்த மே 13 அன்று ஒன்பது பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. தீர்ப்பு வெளியான 60 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்ய வேண்டிய நிலையில், தாமதமாக மனு தாக்கல் செய்வது குறித்து உயர்நீதிமன்றத்தில் தனி மனு அளித்துள்ளார் திருநாவுக்கரசு.

## எஸ்ஐஆர் பணிக்கு கூடுதல் அதிகாரிகள்

**சென்னை, நவ.22:**

தேர்தல் ஆணையம் உத்தரவின் படி 25 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு கூடுத லாக உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகள் நிய மனம் செய்யப்பட்டுள்ள னர். வட்டாட்சியர், சிறப்பு வட்டாட்சியர், வட்டார வளர் ச்சி அலுவலர் நிலையில் உள்ள அதிகாரிகள் இந்த பதவிகளுக்கு நியமிக்கப் பட்டுள்ளனர்.

## நவ.22 தமிழகத்தின் 11 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

**சென்னை, நவ.22:**

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: அரபிக் கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவிழந்து, தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சியாக நீடிக்கிறது. தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, நாளை தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். இது மேற்கு- வடமேற்கு திசையில் நகர்ந்து, நவ.24-ம் தேதி வாக்கில், தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, அதற்கடுத்த 48 மணி நேரத்தில், வடமேற்கு திசையில் தொடர்ந்து நகர்ந்து. தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் மேலும் வலுப்பெறக்கூடும்.

இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (நவ.22) ஒரு சில இடங்களிலும், நவ.23-ம் தேதி தென் தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், வட தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், நவ.24ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நவ.25 முதல் 27-ம் தேதி வரை தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் இன்று (நவ.22) கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, ராமநாதபுரம், புதுக்கோட்டை, கடலூர், டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. நவ.23-ம் தேதி மேற்கூறிய மாவட்டங்கள் மற்றும் சிவகங்கை, மதுரை, விருதுநகர் மாவட்டங்களிலும், நவ.24-ம் தேதி கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், புதுக்கோட்டை, டெல்டா மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

## "விஜய் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்" - அப்பாவு





**திருநெல்வேலி, நவ.22:**

"விஜய் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார். கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்கள் தொடர்பான விரிவான அறிக்கை அளித்துள்ள நிலையில், அவற்றுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டும்" என்று தமிழக சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் இன்று அவர் கூறியது: "இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி சட்டப் பேரவையில் நிறைவேற்றிய மசோதா குறித்து எவ்வளவு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அந்தளவுக்கு ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும். 2 ஆண்டு காலமாக மசோதாவை ஆளுநர் நிலுவையில் வைத்து வந்துள்ளார்.

கிடப்பில் போடப்படும் மசோதாவை நிறைவேற்ற கால நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் ஆளுநர் விருப்பு வெறுப்பு இல்லாமல் செயல்பட வேண்டும் என்றுதான் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் விளக்கத்தையே நீதிமன்றம் கொடுத்துள்ளது. வழக்குக்கு தீர்ப்பு கொடுக்கவில்லை.

அந்த வழக்கில் தடை, தவறு என எதையும் நீதிமன்றம் சொல்லவும் இல்லை. காலக்கெடு கொடுப்பதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்பதையே நீதிமன்றம் சொல்லி உள்ளது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அதனை செய்து கொடுங்கள் என்றுதான் சொல்லி உள்ளார்கள்.;

கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு கொடுக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை மத்திய அரசு நிராகரித்துள்ளது. ஆனால், அதனை நிராகரிக்கவில்லை என பாஜக சொல்லி வருகிறது. மத்திய அமைச்சர் நிராகரித்ததாக சொல்கிறார். ஆனால் தமிழக பாஜகவினர் அதனை நிராகரிக்கவில்லை,திருப்பித்தான் அனுப்பப்பட்டுள்ளது என சொல்லிவருகிறார்கள். யார் சொல்வதை நம்புவது?

தமிழக அரசால் கொடுக்கப்பட்ட மெட்ரோ திட்ட டி. பி. ஆர்-ல் பல இடங்கள் பாதிக்கப்படும் எனவும், அளவீடுகள் குறைவாக உள்ளது என்பதையும் சுட்டி காட்டித்தான் திருப்பி அனுப்பி உள்ளதாக பாஜகவினர் கூறிவருகிறார்கள். இலவசமாக மெட்ரோ திட்டத்தை மத்திய அரசு தரவில்லை. 50 சதவீத பங்கை மட்டும்தான் அவர்கள் தருகிறார்கள்.

சென்னை 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு 6 ஆண்டுகள் எதனையும் செய்யாமல் இருந்த சூழலில்தான், தமிழக அரசு 6-ல் 5 பங்கு நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. ஆனால் ஒரு பங்கு தொகையை மட்டும் கொடுத்துவிட்டு அனைத்தையும் தாங்கள் கொடுத்ததாக சொல்லி வருகிறார்கள்.

அதற்குள்ள வட்டி தொகையை மத்திய அரசு கட்டுமா? மத்திய அரசு தமிழக அரசை சிரமப்படுத்தினால் என்ன செய்ய முடியும். பாஜக ஆட்சி செய்யாத மாநிலங்களில் அனைத்து திட்டங்களையும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. விஜய் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளார். அவர் மீண்டும் பிரச்சாரத்திற்கு செல்கிறார் என்பதை சொல்லி அவரை நெருக்கடிக்கு உள்ளாக்க வேண்டாம்" என்று தெரிவித்தார்.

## அமைச்சர் ஐ.பெரியசாமி மகள் வீட்டில் ஜிஎஸ்டி நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் சோதனை



**திண்டுக்கல், நவ.22:**

திண்டுக்கல்லில் உள்ள ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமியின் மகள் இந்திராவின் வீட்டில் வரி ஏய்ப்பு தொடர்பாக ஜிஎஸ்டி நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

திண்டுக்கல் ஆர்.எம். காலனி வள்ளலார் தெருவில் அமைச்சர் ஐ.பெரியசாமியின் மகள் இந்திரா வீடு உள்ளது. இங்கு இன்று மதியம் இரண்டு மணியளவில் இரண்டு காரில் வந்த ஜிஎஸ்டி நுண்ணறிவு பிரிவு (DGGI) அதிகாரிகள் நான்கு பேர், திடீர் சோதனை மேற்கொண்டனர்.

கடந்த ஆகஸ்ட் 17 ம் தேதி திண்டுக்கல்லில் உள்ள அமைச்சர் ஐ.பெரியசாமியின் வீடு. அவரது மகன் இ.பெ. செந்தில்குமார் எம்எல்ஏ., வீடு மற்றும் அவரது மகள் இந்திரா வீடு, இந்திராவுக்கு சொந்தமான வத்தலக்குண்டு அருகேயுள்ள மில்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

அன்று அமைச்சர், அவரது மகன் வீடுகளில் சோதனை முடிந்தாலும் அமைச்சரின் மகள், அவரது மில்களில் சோதனை நீண்டநேரம் நடந்தது.

இந்த சோதனைகளின்போது மில்களில் வரி ஏய்ப்பு நடந்தது தெரியவந்தது. இந்நிலையில், வரி ஏய்ப்பு தொடர்பாக விரிவான விசாரணை நடத்த, இன்று வெள்ளிக்கிழமை மதியம் 2 மணியளவில் ஜிஎஸ்டி நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் நான்கு பேர், அமைச்சர் ஐ.பெரியசாமி மகள் இந்திரா வீட்டுக்கு இரண்டு கார்களில் வந்து திடீர் சோதனை மேற்கொண்டனர். சோதனை நடைபெறுவது குறித்து தகவல் அறிந்த திமுகவினர் அவரது வீட்டின் முன்பு திரண்டனர். போலீஸ் பாதுகாப்புடன் சோதனை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

## கட்சிகளின் ரோடு ஷோக்களுக்கான வழிகாட்டு விதிமுறைகள்: உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல்

**சென்னை, நவ.22:**

அரசியல் கட்சிகளின் ரோடு ஷோக்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக வகுக்கப்பட்டுள்ள வரைவு வழிகாட்டு விதிமுறைகளை சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்தது.

அரசியல் பொதுக்கூட்டங்கள் மற்றும் ரோடு ஷோக்களில் பங்கேற்கும் மக்களின் பாதுகாப்புக்கு சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியினரே பொறுப்பு என தமிழக அரசு வரைவு வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ளது.

அரசியல் கட்சிகள் பொதுக்கூட்டங்கள் மற்றும் ரோடு ஷோக்களுக்கு வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக அரசு இன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

அதில் பொதுக்கூட்டங்களை நடத்துவதற்கு, திட்டமிடுவதற்கு, முறைப்படுத்தவும், கண்காணிக்கவும் இந்த வழிகாட்டு நெறிமுறைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அரசு குறிப்பிட்டுள்ளது.

5 ஆயிரம் பேருக்கு மேல் திரள்வார்கள் என்று எதிர்பார்க்கக் கூடிய பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், ரோடு ஷோக்கள், ஆர்ப்பாட்டம், போராட்டம், கலாச்சார மற்றும் மத நிகழ்வுகளுக்கு இந்த விதிகள் பொருந்தும். வழிபாட்டு தளங்களில் நடைபெறும் மத ரீதியான கூட்டங்களுக்கு இந்த வழிக்காட்டு நெறிமுறைகள் பொருந்தாது.

நடத்தை விதிகள் அமலில் இருக்கும் தேர்தல் நேரங்களில் தேர்தல் ஆணையம் வெளியிடும் விதிகள் மட்டுமே அமலில் இருக்கும். இருப்பினும், கூட்டக் கட்டுப்பாடு, குடிநீர், கழிவறை உள்ளிட்ட அத்தியாவசிய வசதிகளை வழங்க செய்யும் இந்த விதிகளை அமல்படுத்துவது ஏற்பாட்டாளர்களின் பொறுப்பு ஆகும். 5 ஆயிரத்திற்கும் குறைவாக மக்கள் திரளும் கூட்டங்களுக்கு இது பொருந்தாது. ஆனால் தற்போதைய நடைமுறைகளை பின்பற்றி அனுமதி பெற வேண்டும் என்ற விதிகள் தொடரும்.

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், ரோடு ஷோக்கள், ஆர்ப்பாட்டம், போராட்டம் ஆகியவை நடைபெற உள்ள இடங்களை காவல் துறை அதிகாரிகள், தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுடன் கலந்தாலோசித்து மாவட்ட ஆட்சியர் முடிவெடுத்து அறிவிப்பார்.

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், ரோடு ஷோக்கள், ஆர்ப்பாட்டம், போராட்டம் நடத்தப்படும் முன் என்ன தேதி, நேரம், எதற்காக நடத்தப்படுகிறது, எவ்வளவு மக்கள் பங்கேற்பார்கள், எத்தனை வாகனங்கள் வரும், பங்கேற்கும் முக்கிய தலைவர்களின் விவரங்களை குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டும்.

ரோடு ஷோக்களை பொருத்தவரை பங்கேற்கும் முக்கிய தலைவர்கள் பிரச்சாரத்தை துவங்கும் இடம் மற்றும் முடிக்கும் இடங்களையும், பொதுக்கூட்டங்கள் நடைபெறும் இடங்களையும் குறிப்பிட்டு தெரிவிக்க வேண்டும். தலைமை விருந்தினர்கள் வருகை தரும் நேரம் மற்றும் புறப்படும் நேரத்தையும் விண்ணபத்தில் குறிப்பிட வேண்டும். இது மாதிரியான நிகழ்வுகளில் மக்கள் எவ்வளவு பேர் பங்கேற்க முடியும் என்பதை பொதுப்பணித்துறை பொறியாளர் சம்பந்தப்பட்ட பகுதியை ஆய்வு செய்து சான்றிதழ் அளிக்க வேண்டும். அதற்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் பொதுப்பணித்துறையிடம் விண்ணப்பிக்க வேண்டும்

தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் பொதுக் கூட்டம் மற்றும் ரோடு ஷோக்கள் நடத்த சம்பந்தப்பட்ட துறைகளின் அனுமதியை பெற வேண்டும். நிகழ்ச்சிகளுக்கு 10 நாட்களுக்கு முன் அனுமதி கேட்டு விண்ணப்பிக்க வேண்டும்.

50 ஆயிரம் பேருக்கு மேல் திரள்வார்கள் என எதிர்பார்க்க கூடிய கட்சி மாநாடுகள் போன்ற நிகழ்வுகளுக்கு 30 நாட்களுக்கு முன் அனுமதி கேட்டு விண்ணப்பிக்க வேண்டும். திடீரென ஏற்பாடு செய்யப்பட கூடிய ஆர்ப்பாட்டம், போராட்டங்களை பொருத்தவரை மாவட்டங்களுக்கு மாவட்ட ஆட்சியரும், சென்னைக்கு மாநகர காவல் ஆணையரும் முடிவெடுக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களில் முதலுதவி, ஆம்புலன்ஸ் வசதி, உள்ளிட்ட மருத்துவ வசதிகள் ஏற்பாடு செய்த விவரங்களை தெரிவிக்க வேண்டும். அதிமுக, தவெக, தேசிய மக்கள் சக்தி கட்சிகளுக்கு வரைவு வழிகாட்டு விதிகள் நகல்களை வழங்க தமிழக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனையடுத்து வழக்கு விசாரணையை நவம்பர் 27 ம் தேதிக்கு தள்ளிவைத்தது தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### காய்கறி பிஞ்சுகளின் பயன்கள்!

வாழைப் பிஞ்சு: வயிற்றுப் புண்ணை ஆற்றும். ரத்த மூலம் குணமாகும்.

முருங்கைப் பிஞ்சு: தோலுடன் உண்டு வந்தால் எலும்புருக்கி நோய் தீரும்.

வெண்டைப் பிஞ்சு: உடல் உஷ்ணம் குறையும். ஆண்மைக் குறைவு, கண் எரிச்சல் குணமாகும். வெண்டைப் பிஞ்சு கஷாயம் மேகவெட்டை குணமாக்கும்.

வெள்ளரிப்பிஞ்சு: பசியைத் தூண்டும். உணவை செரிக்கச் செய்யும். நாவறட்சி போக்கும். உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும்.

பலாப்பிஞ்சு: உடலுக்கு வலுவையும் மினுமினுப்பையும் தரும். நரம்புகள் பலம் பெறும்.

### இரும்புச்சத்துகளைத் தடுக்கும் உணவுகள்!

உடல் முழுவதும் ஆக்ஸிஜனை எடுத்துச் செல்லும் ரத்தச் சிவப்பணுக்களில் காணப்படும் புரதமான ஹீமோகுளோபினை உருவாக்க உடலுக்கு இரும்புச்சத்துகள் தேவை. உடலில் இரும்புச்சத்து குறைபாடு ஏற்பட்டால் அது ரத்தச் சோகைக்கு வழிவகுக்கும்.

பழங்கள், காய்கறிகள், உலர்ந்த பீன்ஸ், கொட்டைகள், தானியப் பொருள்களில் இரும்புச்சத்துகள் நிறைந்துள்ளன. மாத்திரைகளிலும்கூட இந்த ஊட்டச்சத்தைப் பெறலாம். இரும்புச்சத்துகளைத் தடுக்கும் உணவுகள் எவை என்பதை அறிவோம். இரும்புச்சத்துகள் நிறைந்த உணவுக்கு ஒரு மணி நேரத்துக்கு முன்போ, பின்போ இந்த உணவுகளைத் தவிர்க்க முயற்சிக்கவும்.

கால்சியம் உள்ளதால் பால் இரும்பு உறிஞ்சுதலைத் தடுக்கும் ஒரு தடுப்பானாகவும் செயல்படும். சீஸ்1 அவுன்ஸ் அளவுக்கு அதிகமாகப் பரிமாறுவது இரும்புச் சத்து உறிஞ்சுதலைத் தடுக்க வாய்ப்புள்ளது. தயிர், சார்டின்கள், பதிவு செய்யப்பட்ட சால்மன், டோஃபு, ப்ரோக்கோலி, அத்திப்பழம், டர்னிப் கீரைகள், ருபார்ப் உள்ளிட்ட கால்சியம் அதிகமுள்ள பிற உணவுகளும் இரும்புச்சத்து உறிஞ்சுதலைத் தடுக்கும்.



பாஸ்விடின் உள்ளதால், முட்டைகள் இரும்பு உறிஞ்சுதலைத் தடுக்கும். இவை இரும்புமூலக்கூறுகளை ஒன்றாகப் பிணைத்து, உணவுகளில் இருந்து இரும்புச் சத்து உறிஞ்சுவதைத் தடுக்கும் புரதக் கலவையாகும். வேகவைத்த முட்டையானது இரும்புச் சத்து உறிஞ்சுதலை 28 சதவீதம் வரை குறைக்கும்.

தேயிலையில் ஆக்சலேட்டுகள் அதிகமுள்ளன. நிறைய தேநீர் குடித்தால், இரும்புச்சத்துகள் கிடைக்காமல் போகலாம். ஆக்சலேட்டுகள் நிறைந்த பிற உணவுகளில் கீரை, காலே, பீட்ரூட், பருப்புகள், கொட்டைகள், சாக்லேட், கோதுமை தவிடு, ருபார்ப், ஸ்ட்ராபெர்ரிகள், ஆர்கனோ, துளசி, வோக்கோசு போன்ற மூலிகைகள் அடங்கும்.

பாலிஃபீனால்கள், பீனாலிக் சேர்மங்கள் உள்ளதால், கோகோ, காபி ஆகிய இரண்டும் உடலில் இரும்புச் சத்து உறிஞ்சுதலைத் தடுக்கும். பாலிஃபீனால் நிறைந்த பிற உணவுகளில் ஆப்பிள், மிளகுக்கீரை, சில வகை மூலிகைத் தேநீர், மசாலா, வால்நட், பிளாக்பெர்ரி, ராஸ்பெர்ரி, புளூபெர்ரி உள்ளிட்டவை அடங்கும்.

இதயத்துக்கு ஆரோக்கியமான வால்நட்ஸ் இரும்புச் சத்துகள் நிறைந்த உணவுகளில் இருந்து உடல் உறிஞ்சும் இரும்புச் சத்தின் அளவைக் குறைக்கும். வால்நட்ஸில் பைட்டேட்டுகள் உள்ளன. சோயா புரதம், நார்ச் சத்துகள் காணப்படும் சேர்மங்கள், குறைந்த அளவிலான பைடேட்டுகள் உடலின் உணவில் இருந்து இரும்புச் சத்து உறிஞ்சும் திறனில் வலுவான தடுப்பு விளைவைக் கொண்டுள்ளன. பாதாம், எள், உலர்ந்த பீன்ஸ், பயறு, பட்டாணி, தானியங்கள், முழு தானியங்கள் ஆகியவை பைட்டேட்டுகளின் பிற ஆதாரங்களில் அடங்கும்.

# ரூ.89.70 கோடி மதிப்பீட்டில் 584 குடியிருப்புகள் - பயனாளிகளுக்கு ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார் உதயநிதி ஸ்டாலின்



**சென்னை, நவ.22:**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ரூ.89.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 584 குடியிருப்புகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு குடியிருப்பு ஒதுக்கீட்டு ஆணைகளை துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று வழங்கினார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;-

"முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்நாட்டில் குடிசை பகுதிகளே இருக்கக்கூடாது என்ற தொலைநோக்குப் பார்வையோடு 1970 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன் முறையாக குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கி ஏழை எளிய மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டித் தந்தார்.

அவரது வழியில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு முதல்-அமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு குடிசை மாற்று வாரியம் என்பதை தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியமாக உயர்த்தியதோடு, அனைத்து குடியிருப்பு வளாகங்களிலும், சாலை, குடிநீர், கழிவு நீரேற்று வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டி வழங்கி வருகின்றார்.

எழும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வேம்புலி அம்மன் கோவில் திட்டப்பகுதியில் 1976 ஆம் ஆண்டு 295 சதுர அடியில் தரை மற்றும் 3 தளங்களுடன் கட்டப்பட்ட 144 குடியிருப்புகள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தது. தமிழ்நாடு முதல்-அமைச்சர் உத்தரவின்படி, மறுகட்டுமான திட்டத்தின் கீழ் வேம்புலியம்மன் கோவில் தெரு திட்டப்பகுதியில் தூண் மற்றும் 9 தளங்களுடன் 32 கோடியே 63 லட்சம் ரூபாய் செலவில் 188 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டன.

தமிழ்நாடு துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று (21.11.2025) சென்னை ஹாரிங்டன் சாலை வேம்புலி அம்மன் திட்டப் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் வேம்புலி அம்மன் கோவில் மற்றும் சீனிவாசபுரம் பகுதி-1 ஆகிய திட்டப் பகுதிகளில் மொத்தம் ரூ.89.70 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 584 அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்து பயனாளிகளுக்கு குடியிருப்பிற்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுநாள் வரை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 166 திட்டப் பகுதிகளில் 6363.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 55,831 அடுக்குமாடி குடியிருப்புகள் வீடற்ற ஏழை எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து, துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பி.ஆர்.என். கார்டன் திட்டப் பகுதியில் 85.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 501 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணியினையும், சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனை சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் 132 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 776 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## தேஜஸ் விமான விபத்தில் விமானி உயிரிழப்பு: செல்வப்பெருந்தகை இரங்கல்

**சென்னை, நவ.22:**

ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் விமான கண்காட்சி நடைபெற்று வருகிறது. இந்த நிகழ்ச்சியில் இந்தியாவின் தயாரிப்பான தேஜஸ் ரக போர் விமானமும் இடம்பெற்றுள்ளது. இந்த விமானம் இன்று மதியம் 2.10 மணியளவில் வானில் சாகசத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது வானில் இருந்து கீழே விழுந்து வெடித்து சிதறியது. இந்த விபத்தில் விமானி உயிரிழந்தார்.

இந்நிலையில், தேஜஸ் விமான விபத்தில் விமானி உயிரிழந்த சம்பவத்திற்கு தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், துபாயில் போர் விமானக் கண்காட்சியில் சாகத்தில் ஈடுபட்ட தேஜஸ் விமானம் விபத்துக்குள்ளாகி விமானி உயிரிழந்திருப்பது வேதனையளிக்கிறது. விபத்துக்குள்ளான விமானியின் குடும்பத்திற்கும், அவரது நண்பர்களுக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெண் உதவியாளரிடம் பாலியல் அத்துமீறல்: ஓய்வு பெற்ற நீதிபதி மீது வழக்குப் பதிவு

**சென்னை, நவ.22:**

சென்னை செனாய் நகரில் 74 வயதுடைய ஓய்வுபெற்ற மாவட்ட நுகர்வோர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் தனியாக வசிக்கிறார். முதுமை காரணமாக அவருக்கு தேவையான உதவிகளை உடனிருந்து கவனிக்கும் வகையில் மடிப்பாக்கத்தில் வசிக்கும் 43 வயதுடைய பெண் உதவியாளர் ஒருவர் பணியமர்த் தப்பட்டார். ஓய்வு பெற்ற நீதிபதியை அந்தப்பெண் உடனிருந்து கவனித்து வந்தார். கடந்த செப்டம்பர் மாதம் ஓய்வுபெற்ற நீதிபதி,அந்த பெண்ணை காரில் வெளியே அழைத்துச்சென்றுதேவையான உடை உள்ளிட்ட பொருட்களை வாங்கிக் கொடுத்துள்ளார். பின்னர், இருவரும் வீடுதிரும்பினர்.

இரவு நீண்ட நேரம் ஆகிவிட்டதால் பணிப் பெண்ணை அன்று இரவு தனது வீட்டிலேயே தங்கும்படி ஓய்வு நீதிபதி கேட்டுக்கொண்டார். அந்த பெண்ணும் அங்கேயே தங்கினார். நள்ளிரவில் அந்த பெண்ணிடம் ஓய்வு நீதிபதி தவறாக நடக்க முயன்றுள்ளார். அதிர்ச்சி, அடைந்த பெண், அவரது ஆசைக்கு இணைங்க மறுத்ததோடு வீட்டை விட்டு உடனடியாக வெளியேறி உள்ளார். மறுநாள் இது தொடர்பாக டி.பி சத்திரம் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தார் போலீஸார் இருவரையும் தனித்தனியாக அழைத்து விசாரித்தனர்.

இதில், ஓய்வு பெற்ற நீதிபதி, உதவியாளராக வந்த பெண்ணிடம் எல்லை மீற முயன்றது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, அவர் மீது 2 பிரிவுகளின் கீழ் போலீஸார் வழக்கு பதிவு செய்தனர்.

புகார் அளித்த பெண், ஏற்கெனவே சென்னையில் உள்ளதுணை ஆணையர் ஒருவர் மீதுபுகார் தெரிவித்து, அவர் இடமாற்றம் செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தங்கத்தை வாடகைக்கு விடும் பணக்காரர்கள்

**மும்பை, நவ.22:**

பணக்காரர் கள் முதலீட்டுக்காக தாங்கள் சேமித்து வைத்துள்ள தங்கக் கட்டிகளை வாடகைக்கு விடுவதாக தகவல் வெளியாகி உள்ளது.

சமீப காலமாக தங்கத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் நகைக்கடை உரிமையாளர்கள் மற்றும் நகை உற்பத்தியாளர்கள் வெளிநாட்டிலிருந்து தங்கத்தை இறக்குமதி செய்வதற்கு பதில், பழைய நகைகள் அல்லது உள்ளூர் சந்தையிலிருந்து கிடைக்கும் தங்கக் கட்டிகளை வாங்க ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்நிலையில், பணக்காரர்கள் சேமிப்புக்காக தாங்கள் வாங்கி வைத்துள்ள தங்கக் கட்டிகளை நகைக்கடைக்காரர்களுக்கு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விட்டு பணம் சம்பாதிக்கின்றனர்.

இதுகுறித்து, தங்கம் மொத்த விற்பனையில் ஈடுபட்டுள்ள இணையதளமான சேப்கோல்டு நிறுவனத்தின் தலைவர் கவுரவ் மாத்தூர் கூறும்போது, "சமீப காலமாக பணக்கார முதலீட்டாளர்களிடமிருந்துஎங்களுக்குநிறையதொலைபேசி அழைப்புகள் வருகின்றன. என்னிடம் 2 மில்லியன் டாலர் (ரூ.17.7 கோடி) மதிப்பிலான தங்கக் கட்டி உள்ளது, அதை வாடகைக்கு விட முடியுமா என ஒருவர் கேட்டார். இதுபோல மற்றொருவர் என்னிடம் 1 மில்லியன் டாலர் தங்கம் உள்ளது அதை வாடகைக்கு விட உதவுவீர்களா என கேட்டார். இந்த ஆண்டில் எங்கள் நிறுவனத்தின் மூலம் வாடகைக்கு விடப்பட்ட தங்கத்தின் மதிப்பு 2 மில்லியன் டாலரிலிருந்து 40 மில்லியன் டாலராக (ரூ.354 கோடி) அதிகரித்துள்ளது" என்றார்.

## விஜய் பிரச்சாரத்திற்கு அனுமதி மறுப்பு ஏன்? காவல்துறை விளக்கம்




**சேலம், நவ.22:**

சேலத்தில் விஜய் பிரச்சாரத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கான காரணம் குறித்து காவல்துறை சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

தவெக தலைவர் விஜய் கடந்த செப்டம்பர் 13-ம் தேதி திருச்சியிலிருந்து தனது தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கினார். ஆனால், எதிர்பாராத விதமாக செப்டம்பர் 27-ம் தேதி கரூரில் விஜய் பிரச்சாரத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலால் ஏற்பட்ட அசம்பாவிதத்தால் அவரது பிரச்சாரப் பயணத்தில் பிரேக் விழுந்தது. இந்த நிலையில் டிசம்பர் 4-ந் தேதி சேலத்திலிருந்து மீண்டும் தனது பிரச்சாரப் பயணத்தைத் தொடர ஆயத்தமானார் விஜய். இதைத் தொடர்ந்து த.வெ.க. தலைவர் விஜய் பிரசாரம் செய்ய அனுமதி கேட்டு நிர்வாகிகள் சார்பில் சேலம் போலீஸ் கமிஷனரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மனுவை நிராகரித்து சேலம் காவல்துறை த.வெ.க.வினருக்கு விளக்க கடிதம் அளித்துள்ளது. அதில், டிசம்பர் 4-ந்தேதி வெளி மாவட்டங்களில் பாதுகாப்பு பணிக்காக செல்வதால் பாதுகாப்பு அளிப்பதில் சிரமம் ஏற்படும். விஜய் பிரசார நிகழ்ச்சியில் எவ்வளவு பேர் பங்கேற்பார்கள் என்ற தகவல் மனுவில் இல்லை. வெளி மாவட்டங்களில் இருந்து எத்தனை பேர் கலந்து கொள்வார்கள் என்ற தகவலும் இல்லை. குறைகளை நிவர்த்தி செய்து மனு அளித்தால் பரிசீலிக்கப்படும். அடுத்த முறை மனு அளிக்கும்போது 4 வாரங்களுக்கு முன்னர் மனு அளிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சென்னை ராயப்பேட்டை எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் தீ



**சென்னை, நவ.22:**

ராயப்பேட்டை எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் நடந்த தீ விபத்தில் பல லட்சம் மதிப்பிலான பொருட்கள் எரிந்து சாம்பலானது.

ராயப்பேட்டை ஒயிட்ஸ் சாலையில் "எக்ஸ்பிரஸ் அவென்யூ வணிக வளாகம் அமைந்துள்ளது. இங்கு ஏற்கனவே கடந்த 2023ம் ஆண்டு இங்குள்ள உணவகத்தில் தீபிடித்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அப்போது எக்ஸ்பிரஸ் மாலில் இருந்த அனைவரும் வெளியேற்றப்பட்டு தீ அணைக்கப்பட்டது.

கடந்த 2 மாதம் முன்பு, செப்டம்பர் மாதம் 23 ந்தேதி எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலின் 4வது ஸ்கிரீனில், லிப்ட் விபத்தில் என்ஜினியர் ராஜேஷ் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இந்த எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் உள்ள லிஃப்டில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. லிப்டில் மின்கசிவு காரணமாக தீவிபத்து ஏற்பட்டதால் பொதுமக்கள் பதறியடித்து ஓடினர். தீவிபத்து காரணமாக கடும் புகைமூட்டம் ஏற்பட்டதால் மாலுக்கு சென்றவர்கள் சிதறி ஓடினர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புத்துறையினர் விரைந்து நடவடிக்கை எடுத்தனர். மாலில் இருந்த அனைவரும் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். மால் முழுவதும் சூழ்ந்துள்ள புகை மூட்டத்தை இயந்திரங்கள் மூலம் வெளியேற்றும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. மாலில் உள்ள 4 வழிகள் மூலமாகவும் புகையை வெளியேற்றப்படும் பணி நிறைவடைய 4 மணி நேரம் ஆகும் என கூறப்பட்டுள்ளது. இந்த தீ விபத்தில் பல லட்சம் மதிப்பிலான பொருட்கள் தேசம் அடைந்ததாக கூறப்படுகிறது. எந்த அசம்பாவிதமும் நடைபெறுவில்லை. இந்த விபத்து தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஒளி வேகத்தில் ஒரு மணல் துணுக்கு! விழுந்தால் என்னவாகும்? ஊரே காலியாம்!



கண்ணுக்குத் தெரியாத, ஒரு சின்ன மணல் துணுக்கு, இந்த பிரபஞ்சத்தின் அதிகபட்ச வேகமான 'ஒளி வேகத்தில்' (Light Speed) வந்து பூமியைத் தாக்கினால் என்ன ஆகும்? "மணல்தானே, அதுவும் சின்ன துணுக்குதானே... ஒரு சின்ன பள்ளம் விழும், அவ்வளவுதான்" என்று நினைக்கிறீர்களா? இல்லை! அதன் விளைவு, நமது கற்பனைக்கும் அப்பாற்பட்ட பயங்கரமாக இருக்கும். ஏனென்றால், இங்கு ஆபத்தானது அந்த மணல் அல்ல; அதன் வேகம்... அப்படி என்ன நடக்கும் என்று பார்க்கலாம் வாங்க.

இந்தப் பேரழிவின் ரகசியம் முழுவதும் ஐன்ஸ்டீனின் நிறை-ஆற்றல் சமன்பாட்டில் ($E=mc^2$) ஒளிந்துள்ளது. ஐன்ஸ்டீன் என்ன சொல்கிறார் என்றால், "நிறையும், ஆற்றலும் ஒன்றே". ஒருபொருளின் வேகம் அதிகமாக அதிகமாக, அதன் நிறை (Mass) கிட்டத்தட்ட முடிவிலியை (Infinity) நெருங்குகிறது.

சாதாரண வேகத்தில், ஒரு கிராம் மணல் ஒரு கிராம் மணல்தான். ஆனால், அது ஒளி வேகத்தில் (வினாடிக்கு சுமார் 3 லட்சம் கிலோமீட்டர்) வரும்போது, அதன் இயக்கம் காரணமாக ஏற்படும் சக்தியின் அளவு கற்பனை செய்ய முடியாத அளவுக்கு மிகப் பெரியதாக மாறிவிடும். அந்தச் சின்ன மணல் துணுக்கு, ஒரு மிகப்பெரிய அணுகுண்டு போலச் செயல்படும்.

விபத்து நடந்தால் என்னவாகும்?

அந்தச் சின்ன மணல் துணுக்கு, நமது பூமியின் வளிமண்டலத்தைத் தொடும் முதல் நொடியே எல்லாமே முடிந்துவிடும்.

அந்தச் சிறிய துகள், வளிமண்டலத்துடன் உரசிய வேகத்திலேயே, பூமியிலுள்ள மிகப் பெரிய அணு குண்டுகள் வெடித்தால் ஏற்படும் சக்திக்குச் சமமான ஆற்றலை, ஒரு சேர வெளியிடும்.

தாக்கும் இடத்தில் பல கிலோமீட்டர் சுற்றளவில் உடனடியாகக் கொழுந்து விட்டெரியும். அதுவரை இருந்த அத்தனை பொருட்களும் ஆவியாகிப் போய், ஒரு பிரம்மாண்டமான பள்ளத்தை ஏற்படுத்தும்.

இந்த அதிபயங்கர ஆற்றல் பூமிக்குள் பாய்வதால், பல மடங்கு சக்தி வாய்ந்த பூகம்பம் ஏற்படும். இது கடலில் தாக்கினால், உலகை மூழ்கடிக்கும் அளவுக்குச் சுனாமிகள் கிளம்பும்.

தாக்கத்தால் கிளம்பும் புகை, தூசு மற்றும் சாம்பல் ஆகியவை உலகம் முழுவதும் பரவி, பல வருடங்களுக்குச் சூரிய ஒளியைப் பூமியில் விழ விடாமல் தடுக்கும். இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டு, ஒட்டுமொத்த மனித நாகரிகமே ஆபத்தில் சிக்கும்.

எனவே, எதையும் சாதாரணமாக நினைக்காதீர்கள். ஒரு சின்ன மணல் துணுக்குகூட, பிரபஞ்சத்தின் விதிகளைப் பயன்படுத்தி, இவ்வளவு பெரிய அழிவை ஏற்படுத்த முடியும். ஆனால், கவலைப்படாதீர்கள், பிரபஞ்ச விதிகள், நிறை உள்ள எந்தப் பொருளையும் ஒளி வேகத்தில் செல்ல அனுமதிக்காது.

## நினைந்தூட்டும் தாய்



சன்னலைத் திறந்து திரைசீலையை விலக்கின நொடியில், எதிர்த்த வீட்டுச் சுற்றுச் சுவர் ஓரம், அவள் கண்ட காட்சி சாருலதாவுக்கு ஒரு இனம் புரியாத நெகிழ்ச்சியைக் கொடுத்தது. ஆழ்ந்த பழுப்பு நிறத்தில் இரண்டும்; இளம் பழுப்பு நிறத்தில் இரண்டுமாக;நான்கு நாய் குட்டிகள்.

மாலை வெயிலில் கடல் நுரையென அவைகளின் உடல் முடி,'மெத்து மெத்தென' வெல்வெட் துணிபோல், பளபளப்பாக மினுங்கிய குட்டிகளை கையில் எடுத்து கொஞ்ச ஆவல் மீதூர , வேகமாக இறங்கி ஓடி வந்தவளை, அருணன், ஏறிட்டுப் பார்த்து, 'மெதுவாகப் போ. எதற்கு இத்தனை வேகம்?' என்று சொல்லி அவள் கையைப் பிடித்து மெல்ல நடத்தினான். இல்லை; அருண்! அந்த குட்டிகள் என்னைக் கூப்பிடுவது போல் இருக்கிறது' என்று பதற்றமான குரலில் சொன்னவளின், உடல் நடுங்குவதை அருணன் உணர்ந்தான். இதற்குள்ளாகவே சாருலத, தன்னை அவன் அணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டு, வீதியைக் கடக்க முற்பட்டவளை இடது பக்கமாய் வந்த காரோட்டி வசவு மழை பொழிந்ததும், வலது பக்கமாய் சைக்கிளில் வந்த விடலை பையன்,' அக்கா! பார்த்து வர மாட்டீங்களா?' என்றதும், அவள் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை.
எதிர்த்த வீட்டு சுற்றுச்சுவர் பக்கம் போய், அந்த குட்டிகளுக்கு இடையே சௌகரியமாக உட்கார்ந்து கொண்டு; இரு கைகளையும் விரித்து, 'வாங்கடா!' என்று கூப்பிட்டாள்.
மெல்லிய குரலில் குழந்தைகள் ரகசியம் பேசுவது போல், அவைகள் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டிருந்தன.
திடீரென ஒரு முடிவுக்கு வந்தது போல் ஒருசேர அவைகள், பாய்ந்து வந்து அவள் மடியில் படுத்து கொஞ்சி விளையாட ஆரம்பித்தன. எதிர்த்த வீட்டு கதவு திறந்து, வெளியே வந்த முதியவர், ' ஒரு மாதம் முன் எங்கிருந்தோ வந்த நாய் பின்புற அவுட் ஹௌஸில் தங்கியிருந்தது.
மழை நாள் ஒன்றில் நான்கு குட்டிகளையும் ஈன்றுவிட்டு இங்கேயே தான் சுற்றிக் கொண்டு இருந்தது.நேற்றுக்காலை கார்ப்பரேஷன்காரன் அதை பிடிச்சுட்டு போக; இதுகள் போட்ட குரைத்தல் சத்தம் தாளாமல் விரட்டி விட்டேன். (13) திரும்ப இங்கேயே வந்து பதுங்கி கொண்டுவிட; இவைகளின் ரோதனை தாங்க முடியாமல்; இப்போதுதான் கார்ப்பரேஷனுக்கு ஃபோன் பண்ணிட்டு வரேன். அதற்கெல்லாம் எந்த ஒரு அவசியமும் இல்லை; சார். நான் கொண்டு போய் என் வீட்டில் வளர்த்துக் கொள்கிறேன்.
பெற்ற குழந்தையை பறி கொடுத்துவிட்டு அவதியுறும் எனக்கு; நல்ல துணையாகவும், காயம் பட்ட மனதிற்கு அரு மருந்தாகவும் இருக்கும்.' என்றாள்
அருகில் வந்த அருணனிடம் ஒரு குட்டியைக் கொடுத்தவள், இன்னுமொரு குட்டியை அவள் தூக்கிக் கொள்ள, மற்ற இரு குட்டிகளும்,முன்னும் பின்னுமாக அவர்களோடு ஓடி வந்தன.வீதியில் கார்ப்பரேஷன் வண்டியின் ஹார்ன் சத்தம் கேட்டதும் , குட்டிகள் உரத்த குரலில் பயந்து குரைத்தன.
அவைகளை தம் கை வருவதால் ஆறுதல் படுத்திய படி, இவர்கள் தம் வீட்டு வளாகத்தில் நுழைந்தனர்.
வாசல் வெராண்டாவில் குட்டிகளோடு அருணன் அமர; சாருலதா உள்ளே போய் வட்டிலில் பால் சோறு கலந்து எடுத்து வந்து, அருணன் கையில் கொடுத்தாள்.குட்டிகள் அவனை ஆசையுடன் பார்த்து அவன் அனுமதிக்காக, வாலைக் குழைத்து ஆட்டம் காட்ட; அவன் வட்டிலை கீழே வைத்து'ம்!' என்று குரல் கொடுக்க; குட்டிகள் ஆர்வமுடன் பசியாறின.
அளவில்லா வாஞ்சையுடன் சாருலதா நாய்குட்டிகளை அணைத்தவாறு அருணனை, நன்றியுடன் பார்த்தாள்.



- சசிகலா விஸ்வநாதன்

## மையெழுதா மெய்யழகி

ரயில்வே தடுப்பை தாண்டி நடந்தான் மாரிமுத்து. பரபரப்பாக இருந்த சாலையின் இரு பக்கத்திலும் சிறு சிறு கடைகள் இருந்தன. சுற்று முற்றும் பார்த்தான். சற்று தூரத்தில் பூக்கடையை இருந்தது. பூக்கடையை நோக்கி நடந்தான்.

துடப்பத்தால் இடத்தைப் பெருக்கிக்கொண்டிருந்தாள் அஞ்சலை. சிறு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துத் தெளித்தால். மேஜையை சரிசெய்து அதன் மீது ஈரத் துணியைப் பரப்பி, கட்டித் தயாராக வைத்திருந்த மல்லி, முல்லை, கனகாம்பரம், ரோஜா, சம்பங்கியென வகை வகையான பூக்களை அடுக்கி வைத்துவிட்டு, வத்தியை ஏற்றக் குனிந்து தீப்பெட்டி எடுக்கும்போது, மாரிமுத்து கடையின் முன் நின்றான்
“வாங்க... எந்தப் பூ வேனுங்க..” என்றாள்

அஞ்சலையின் கலையான முகத்தைப் பார்த்ததும் “ரோஜா மாலை வேனும்” என மாரிமுத்து அவளின் முகம் பார்த்துச் சொன்னபோது, அவனது பார்வை அஞ்சலையின் ஒட்டுமொத்த முகத்தையும் நகலெடுத்துக் கொண்டது.

கருத்து முடி, வட்டமான முகம், நீண்ட மூக்கு, ஒழுங்காகச் சீராகக் கட்டியிருந்த சேலை, வகிடெடுத்து வாரியிருந்த தலைமுடி. நெற்றியில் பொட்டு இல்லை. கழுத்தில் ஒட்டியிருந்த கவரிங் செயின். இவற்றையெல்லாம் கவனித்தவன், பூவை அவளிடமிருந்து வாங்கும்போது, குனிந்து கொண்டே அவளின் கால் விரலையும் பார்த்தான். அவள் விரல்களில் மெட்டி இல்லை.

“கொஞ்ச இருங்க... இதோ வந்துடறன்.” என வேக வேகமாக அருகில் இருந்த கீற்றுக் கொட்டகைக்குள் நுழைந்து, பூ மாலைகளை வாரி எடுத்து வந்து கம்பியில் மாட்டினாள்.

“நேத்து கட்டணதா?” என்றான்
“ இல்லங்க.. காலையில கட்டுனது” என்றவள் , ஒரு ரோஜா மலையை எடுத்து “இது எடுத்துக்கோங்க” என நீட்ட

“எனக்குப் புதுசா ஒன்னு கட்டித்தரீங்களா” என கேட்டான்.

‘கட்டிட்டு, இப்பதான் கடையைப் பெருக்கினன், நீங்க வந்து நின்னீங்க” என மழலை முகத்தோடு அஞ்சலை சொல்ல,

மறுப்பு ஏதும் சொல்லாமல், மௌனமாய் அவள் சிரிப்பினில் கலந்தவனாய் “சரிம்மா சொல்லு... எவ்வளவு” என்றான்,

“காலையில நீங்கதான் முதல் போனி .... நூறு ரூபாய். கொடுங்க,....” என மாரிமுத்துவின் முகம் பார்த்துச் சொன்னால் அஞ்சலை.

தொங்கிக்கொண்டிருந்த ரோஜா மலையை நெகிழிப் பையயில் திணித்து மாரிமுத்துவிடும் நீட்டினால் அஞ்சலை.

சட்டைப் பையிலிருந்து 100 ரூபாய் நோட்டை எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டு “இந்தாங்க.. ரெண்டு உதிரி ரோஜா கொஞ்சம் போடுங்க” எனச் சத்தம் இல்லாமல் மென்மையாகக் கேட்டான்.

அஞ்சலை சிரித்துக்கொண்டே கை நிறையப் பூக்களை வாரி நெகிழிப் பையுக்குள் போட்டாள்.

“வரங்க” என அவ்விடத்தை விட்டுக் கிளம்பினான் மாரிமுத்து.
மடிந்திருந்த நூறு ரூபாய் நோட்டைக் கையில் எடுத்து, அதைச் சுருட்டி கல்லாப்பெட்டியை ஒரு சுழட்டு சுழற்றி, நட்டம் முறித்து உள்ளே போட்டுவிட்டு நிமிர்ந்தால்,

“முழம் பூ எவ்வளவும்மா..”என நடுத்தர வயது பெண்மணி கேட்க, அன்று மாலைக்குள் கட்டிவைத்த பூ மாலை, உதிரி பூக்கள் அனைத்தும் விற்றுத் தீர்ந்தது.

கடையை ஏறக் கட்டிவிட்டு, பொருட்களைப் பாதுகாப்பாக எடுத்து வைத்து விட்டு, சாப்பாட்டுப் பாத்திரத்தை மஞ்சள் பையில் போட்டுக்கொண்டு, பேருந்துக்காகக் காத்திருந்தாள் அஞ்சலை.

மற்ற நாட்களைவிட இன்று அஞ்சலையின் முகம் சிரித்த முகமாய் மலர்ந்திருந்தது. பேருந்து விட்டு இறங்கி நடந்தாள். காலையில் போனி பண்ண அந்த முகம் அஞ்சலையின் கண் முன் நிழல் படமாய் தோன்றியது.

மறுநாள் லேசானத் தூறள். ஒழுகும் கீற்றுக்கொட்டையின் கீழ் இனம்புரியா எதிர்பார்போடு அஞ்சலை பூக்களைக் காட்டிக் கொண்டிருந்தாள்.

“பத்து ரூபாய்க்கு ரோஜா கொடுங்க” என மாரிமுத்து கேட்டதும் நிமிர்ந்து பார்த்தவளின் முகம் நிலவுபோல் ஜொலித்தது. கைநிறைய ரோஜாப் பூக்களை வாரிக் கொடுத்த அஞ்சலை “உங்க கை ராசியான கை,” என மாரிமுத்துவின் முகம் பார்த்துச் சொல்ல சிரித்த முகத்தோடு “என் அம்மா போட்டோவுக்கு... தினமும் நீங்களே கொடுங்க” என்றான்.





- கயப்பக்கம் இரா.இரமேஷ்

## வாழ்ந்தே தீருவோம்


# நகரும் நிழல்கள்

அத்தியாயம் -29



■முனைவர்
க. அன்பழகன் (ஹரணி)
கரந்தை.தஞ்சாவூர்

## கடவுள் இருக்கிறார்...



கடவுள் இருக்கிறார் என்பதை நிருபிக்க முடியாது. உணர்ந்து கொள்ள முடியும். அதற்கான சந்தர்ப்பங்கள் அதை உணரவைக்கும். மாதவன் தனியாகத்தான் கிளம்பி வந்தார். சிவராமன் கிடைத்தான். இப்போது இந்தப் பெண் என்று சொல்லாமல் சொல்வதுபோல ஏனோ உணர்ந்தார். வள்ளியம்மையை ஒருமுறை ஆழமாகப் பார்த்தார்.

வாம்மா என்றபடி உள்ளே அழைத்துப்போனார் மாதவன் வள்ளியம்மையை.

நீ என்ன படிச்சிருக்கே? என்றார்.

சொன்னாள்.

இந்த வேலை உனக்குச் செய்ய வருமா? என்றார்.

வரணும் சார். எனக்கு இப்போ இருக்கிற சூழ்நிலையில ஒரு வேலை முக்கியம் சார். அஃது எந்த வேலையா இருந்தாலும் பரவாயில்லை சார். என்னோட நிலைமை அப்படி. எனக்கு சென்னை புதுசு சார். எல்லாமே புதுசு சார். எல்லாத்தையும் கத்துக்கற நிலையிலதான் இருக்கேன்.. என்றவள் சட்டென்று கண்களில் நீர் துளிர்க்கவிட்டாள். மாதவன் அதைக் கவனித்தார்.

மன்னிச்சுக்கம்மா.. கலங்காதே.. செய். உனக்கேத்த வேலையை நான் ஏற்பாடு பண்ணறேன். அதுக்கு நீ ஒத்துழைக்கணும் என்றார்.

நிச்சயமா சார்.. உங்களைப் பார்த்துட்டுதான் இங்க வேலை கேட்டேன். என்னோட அப்பா மாதிரி நினைச்சு என்றாள்.

உனக்கு அப்பா இல்லியா?

எல்லாம் இருக்காங்க சார்.. இப்போ எதுவும் கேக்காதீங்க சார்.. நான் என்ன செய்யணும் சொல்லுங்க சார் என்றாள்.

இப்போதைக்கு உள்ளே பாத்திரங்களை விளக்கி வைக்கறத எடுத்து அடுக்கி வை. தண்ணீர் கீழே சிந்துனா சாக்குப் போட்டு துடைச்சு வை. எல்லா வேலையும் முடிஞ்சிடுச்சுன்னா அடுப்படிப் பக்கம் தரையை அப்பப்போ கூட்டிச் சுத்தமா வச்சுக்கணும். யாரும் எடுக்கலேன்னா நீ போய் எந்த டேபிளோ அதுல உள்ள எச்சில் இலையை சட்டுனு எடுத்துட்டு டேபிளைத் துடைச்சிட்டு சாப்பிட வர்றவங்களக் காத்திருக்க வைக்காம செய்யணும்.. அவ்வளவுதான்..

சரி சார் என்றபடி உடனடியாக வேலையில் இறங்கினாள் வள்ளியம்மை.

மாலையில் வேலை முடிந்தது. வள்ளியம்மை கை, கால்களைக் கழுவிக்கொண்டு வந்தாள். சூடாகக் காபி கொடுத்தார்கள் சாப்பிட்டாள். கூடவே மாதவனும் அமர்ந்து காபி சாப்பிட்டார். உரிமையாளர் சொன்னார்.. வந்த அன்னிக்கே அருமையா வேலை பார்க்கறம்மா.. இதுமாதிரி நிக்காம வேலை பாரு என்றார். கொஞ்சம் பணம் எடுத்து கையில் தந்தார்.. இதைச் செலவுக்கு வச்சுக்க.. வாரச் சம்பளத்துல கழிச்சுக்குவேன்..

வள்ளியம்மை மாதவனைப் பார்த்தாள். வாங்கிக்கம்மா என்றார் மாதவன். வாங்கிக்கொண்டாள்.

இருவரும் ஹோட்டலை விட்டு வெளியே வந்தார்கள்.

பேசிக்கிட்டே நடந்து போகலாமா வள்ளியம்மை என்றார் மாதவன்.

போலாம் சார்..

இந்தச் சார் எல்லாம் வேண்டாம். அப்பா மாதிரின்னு சொன்னேல்ல.. அப்பான்னே கூப்பிடு..

உடனே சரிப்பா என்ற வள்ளியம்மையை மகிழ்ச்சியோடு பார்த்தார்.

நடந்தார்கள். பக்கத்தில் ஒரு சிவன் கோயில் இருந்தது. வா.. உள்ளே போயிட்டு போகலாம் என்று உள்ளே போனார்கள். சாமி கும்பிட்டார்கள். வெளிப் பிரகாரத்தில் ஓர் ஓரமாய் உட்கார்ந்தார்கள்.

உன்னைப் பத்தி சொல்லேன் என்றார் மாதவன்.

ஒரு கணம் யோசித்தவள் சட்டென்று உடைந்து அழுதாள். அவள் அழட்டும் என்று காத்திருந்தார்.

- தொடரும்

# ஏழு கோவில்களில் ஏழு நிலைகளில் - ஐயப்பனின் திருஉருவம்!

ஸ்வாமி ஐயப்பன் எழுந்தருளிய கோவில்களும் அவர் காட்சியளிக்கும் நிலைகளும் பற்றி காண்போமா?

1. ஆரியங்காவில் மணந்த நிலையில் இளைஞராக பகவான் இருக்கிறார்.

ஆரியங்காவு எனும் சிற்றூரில் அமைந்துள்ள இக்கோவிலில் புஷ்கலை என்னும் பெண்ணைத் திருமணம் செய்தவராகக் காட்சி தருகிறார் ஐயப்பன். இங்கு சடங்குகளும் பூசைகளும் தமிழ்நாட்டுக் கோவில் முறையில் நடைபெறுவது சிறப்பு. பரசுராமரால் உருவாக்கப்பட்டத் தலங்களில் இதுவும் ஒன்று என்ற நம்பிக்கை உள்ளது.

2. அச்சங்கோவிலில் வனராஜனாக கொலுவிருக்கிறார்.

அச்சன்கோவிலில் அமைந்த சாஸ்தாவின் சிலை மிகப்பழமை வாய்ந்தது. இங்கே ஆரியங்காவு அமர்ந்த நிலையில் இருபுறமும் பூர்ணா, புஷ்கலை எனும் தேவியர் மலர் தூவ கையில் அமுதமும், கருப்பனின் காந்தமலை வாளும் ஏந்தி காட்சி அளிக்கிறார். கல்யாண சாஸ்தா என்று அழைக்கப்படும் இவரை வழிபட திருமணத்தடைகள் நீங்கும்.

3. குளத்துப்புழை க்ஷேத்திரத்தில் குழந்தை ரூபத்தில் காட்சி தருகிறார்.

குளத்துப்புழை என்னும் இடத்தில் கல்லடை ஆற்றின் கரையோரம் அமைந்துள்ளது ஸ்ரீ பால சாஸ்தா கோவில். இங்கு ஐயப்பன் குழந்தையாக காட்சி தருவதை உறுதிப்படுத்தும் விதமாக இக்கோவிலின் வாசல் சிறு குழந்தைகள் நுழையும் அளவிற்கே உள்ளது. இது ஐயப்பனின் அறுபடை வீடுகளில் ஒன்றாக திகழ்கிறது.

4. பந்தளத்தில் ஐயப்பன் யுவராஜனாக குடும்ப நிலையில் வீற்றிருக்கிறார்.



பந்தளம் என்னும் இடத்தில் அரண்மனை வளாகத்தில் அமைந்துள்ள இக்கோவிலில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் மகரவிளக்கின்போது ஐயப்பனுக்கு அணிவிக்கவேண்டிய திருவாபரணங்கள் எடுத்துச்செல்வது சிறப்பு. கோவிலின் கருவறையில் புலியுடன் நிற்பதுபோல் காட்சி தருகிறார் மணிகண்டன். யுவராஜனாக வளர்ந்த பந்தள அரண்மனையில் அவர் படித்து பயன்படுத்திய ஓலைகள் உள்ளதாக கூறப்படுகிறது.

5. சபரிமலை வனத்தில் நித்தியபிரம்மச்சாரி நிலையில் தவமிருக்கிறார்.

வரலாற்றின்படி தேவர்கள் புலிகளாக மாறி வர, புலி மீது பவனி வந்த மணிகண்டன் பந்தள மன்னனாக மறுத்து சுவாமி ஐயப்பனாக 18 படிகள் அமைத்து, தவக்கோலத்தில் காட்சி செய்ய தேர்ந்தெடுத்த மலைதான் சபரிமலை. ஐயப்பன் என்ற சொல்லுக்கு "நான் உனக்குள் இருக்கிறேன்" என்பதுதான் பொருள்.

6. பொன்னம்பல மேட்டில் சூட்சும நிலையில் ஜோதியாக அருள் பாலிக்கிறார்.

மகரவிளக்கு என்பது சபரிமலை பொன்னம்பலமேட்டில் "புனித ஜோதி" ஏற்றப்படும் சடங்கு ஆகும். மலையின் உச்சியில் சுடர் ஏற்றுவது சபரிமலை புனித யாத்திரையின் இறுதிக் கட்டத்தைக் குறிக்கிறது. ஒரு அதிசய நிகழ்வாகக் கருதப்பட்ட மகரவிளக்கின் உண்மை பின்னணி நிரூபிக்கப்பட்டாலும் ஐயப்பனை மகரவிளக்கின் சுடரிலே சூட்சும நிலையில் தரிசிக்கவே பக்தர்கள் விரும்புகின்றனர்.

7. எருமேலியில் வேட்டையாடும் வேட்டைக்காரர் நிலையில் இருக்கிறார் ஐயப்பன்.

ஐயப்பன் அரக்கி மஹிஷியை இந்த இடத்தில்தான் வதம் செய்ததாக புராணங்கள் சொல்கின்றன. மஹிஷ் என்றால் எருமை . மலையாளத்தில் எருமா என்று பொருள். எருமேலி என்பது எருமகொல்லி என்ற சொல்லில் இருந்த வந்ததாகும். மணிமாலா நதிக்கரையில் உள்ளது எருமேலி நகரம். புகழ்பெற்ற எருமேலி பேட்டத்துள்ளல் சடங்கானது இங்குள்ள வல்லியம்பலம் மற்றும் கொச்சம்பலம் எனும் இரு கோவில்களின் அருகே துவங்குகிறது. ஐயன் ஐயப்பனை பரிபூரணமாக வணங்குவோம்; நித்தம் நித்தம் அவன் அருளைப் பெறுவோம்! ஓம் ஸ்வாமியே சரணம் ஐயப்பா!



ப.கோபிபச்சமுத்து
பாரதியார் நகர்,
கிருஷ்ணகிரி - 1

# தினம் ஒரு தலைவர்கள் என்.சங்கரய்யா வரலாறு

என். சங்கரய்யா (15 ஜூலை 1921 - 15 நவம்பர் 2023) ஒரு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அரசியல்வாதி மற்றும் சுதந்திர ஆர்வலர் ஆவார்.

ஆரம்ப ஆண்டுகளில் மெட்ரிகுலேஷன் படிப்பிற்குப் பிறகு, சங்கரய்யா 1937 ஆம் ஆண்டு தொடங்கி மதுரை அமெரிக்கன் கல்லூரியில் வரலாற்றைப் பயின்றார் . மெட்ராஸ் மாணவர்கள் அமைப்பின் நிறுவனர்களில் ஒருவராகவும், மதுரை மாணவர் சங்கத்தின் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த நேரத்தில் அவர் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்கத் தொடங்கினார். அவர் முதன்முதலில் 1941 ஆம் ஆண்டு தனது இறுதி ஆண்டு படிப்பில் கைது செய்யப்பட்டார்.

அரசியல்

அவரது அரசியல் வாழ்க்கை ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்தது, அதில் கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகள் சிறைவாசமும் அடங்கும். ஆகஸ்ட் 1947 இல் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முந்தைய நாள் விடுவிக்கப்பட்ட பல கம்யூனிஸ்டுகளில் ஒருவரான சங்கரய்யா, முதல் பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்ட் வேட்பாளர்களுக்காக பிரச்சாரம் செய்தார்.

ஏப்ரல் 11, 1964 அன்று நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கவுன்சில் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்த 32 தேசிய கவுன்சில் உறுப்பினர்களில் இவரும் ஒருவர். கட்சித் தலைவர் எஸ்.ஏ. டாங்கே மற்றும் அவரது ஆதரவாளர்கள் "ஒற்றுமைக்கு எதிரான மற்றும் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு கொள்கைகள்" என்று குற்றம் சாட்டி, எதிர்ப்புத் தெரிவித்து அவர் வெளிநடப்பு செய்தார். பின்னர் அவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) இன் நிறுவன உறுப்பினர்களில் ஒருவரானார் . அவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) இன் மத்திய குழு உறுப்பினராக இருந்தார் . அவர் அகில இந்திய கிசான் சபாவின் தலைமையில் ஒரு பகுதியாக இருந்தார் . அவர் 1995 முதல் 2002 வரை சிபிஐ(எம்) தமிழ்நாடு மாநில செயலாளராக இருந்தார்.

சங்கரய்யா 1967 ஆம் ஆண்டு மதுரை மேற்குத் தொகுதியிலிருந்தும் , 1977 மற்றும் 1980 ஆம் ஆண்டுகளில் மதுரை கிழக்குத் தொகுதியிலிருந்தும் இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1962 மற்றும் 1957 தேர்தல்களில் மதுரை கிழக்குத் தொகுதியிலிருந்து போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் இறப்பு

சங்கரய்யா நவமணியை மணந்தார். அவரது இரண்டு மகன்களான சந்திரசேகர் மற்றும் நரசிம்மன் ஆகியோர் கட்சித் தலைவர்கள். ஜூலை 2021 இல் அவருக்கு 100 வயதாகிறது.

சங்கரய்யா சென்னையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் நவம்பர் 15, 2023 அன்று தனது 102வது வயதில் காலமானார். காய்ச்சல் மற்றும் சுவாசப் பிரச்சனைகளுக்காக சிகிச்சை பெற்று வந்தார்.

அவரது மூத்த சகோதரரின் மகன் ஆர். செல்வராஜ் தமிழ்நாட்டின் திரைப்படத் துறையில் ஒரு திரைக்கதை எழுத்தாளர் ஆவார் .



### தோழர்களின் 'இரும்பு மனிதர்' என்.சங்கரய்யா - உத்வேக அரசியல் வாழ்வின்

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் என். சங்கரய்யா
சுதந்திரப் போராட்ட வீரரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவருமான என்.சங்கரய்யா உடல்நலக் குறைவால் காலமானார். அவருக்கு வயது 102. தமிழகத்துக்கு ஆற்றிய தொண்டினைப் போற்றும் விதமாக அவருக்கு அரசு மரியாதையுடன் பிரியாவிடை அளிக்கப்படும் என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார். கட்சியில் 'இரும்பு மனிதர்' என்று அழைக்கப்பட்ட என். சங்கரய்யாவின் உத்வேக அரசியல் வாழ்வின் 10 குறிப்புகள்...

1. மாணவப் பருவத்திலேயே பொதுவாழ்வுக்கு வந்தவர் என்.சங்கரய்யா. 1922 ஜூலை 15-ல் கோவில்பட்டியில் பிறந்தவர். இயற்பெயர் பிரதாப சந்திரன். அவரது பாட்டனார் எல்.சங்கரய்யா தன் பெயரைத்தான் வைக்க வேண்டும் என்று அடம்பிடித்து வீட்டில் உண்ணாவிரதம் இருக்க, பள்ளியில் படித்துக்கொண்டிருந்த பிரதாப சந்திரனின் பெயர் சங்கரய்யாவானது!

2.

அமெரிக்கன் கல்லூரி மாணவராக இருந்தபோது, மதுரையில் நடைபெற்ற ஆலயப் பிரவேசப் போராட்டம் பெரும் உத்வேகம் தந்தது. சுயமரியாதை இயக்கம் மீது பெரும் மரியாதை வைத்திருந்த சங்கரய்யா, 1938-ல் இந்தித் திணிப்புக்கு எதிராக திராவிட இயக்கம் நடத்திய போராட்டத்தில் பங்கேற்று ராஜாஜிக்குக் கறுப்புக்கொடி காட்டியவர். 1941-ல் போராட்டக் கனல் மதுரையையும் பற்றியது. பி.ஏ. இறுதித் தேர்வு எழுத 15 நாட்களே இருந்த நிலையில் போராட்டத்தில் கலந்துகொண்ட சங்கரய்யா கைதானார். படிப்பே நின்றுவிட்டது. மகனை வழக்கறிஞராக்க வேண்டும் என்ற தந்தையின் ஆசையும் நிராசையானது.

3.'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தின்போது நெல்லையில் பல்வேறு கல்லூரி மாணவர்களைத் திரட்டி ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிப் பேரணி நடத்தினார். தடியடியில் காயமடைந்து பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டார். சிறைக்குள் இருந்த காலத்தில் காங்கிரஸார் பலரை கம்யூனிஸ்ட்களாக்கிவிட்டார்!

4. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாவட்டச் செயலாளராக 1943-ல் பொறுப்பேற்றார். கட்சியை வளர்க்கப் பல உத்திகளைக் கையாண்டார். மக்கள் நடமாட்டமுள்ள இடத்தில் கரகாட்டக் கலைஞர் பொன்னுத்தேவரை ஆடவைப்பார். கூட்டம் சேர்த்ததும் கட்சிக் கொள்கைகளை விளக்கிப் பேசுவது அவற்றில் ஒரு உத்தி. கலை, இலக்கியத்தில் மிக அதிக ஆர்வம் கொண்ட சங்கரய்யாதான், முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அமைக்க வேண்டும் என்ற யோசனையைச் சொன்னவர்!

5. கம்யூனிஸ்ட் தோழர் பொன்னுச்சாமியின் மகள் நவமணியைத் திருமணம் (1947 செப்டம்பர் 18) செய்துகொண்டார். நவமணியின் சகோதரரும் சகோதரியும் கம்யூனிஸ்ட் இயக்க நாடகத்தில் நடித்தவர்கள். நவமணி கிறிஸ்தவர் என்பதால், குடும்பத்தில் சிலர் எதிர்த்தாலும் உறுதியாக நின்றார். தனது அரசியல் வாழ்க்கையில், தன் பிள்ளை, பேரக் குழந்தைகள் உட்பட நூற்றுக்கணக்கானோருக்கு சீர்திருத்த, சாதி மறுப்புப் திருமணங்களை நடத்திவைத்திருக்கிறார்.

6 .மூன்று ஆண்டுகள் (1948-51) தலைமறைவுக் காலம். இந்தியாவில் எங்கெங்கெல்லாம் அவர் தலைமறைவாக இருந்தார் என்று பட்டியல் போட்டால் நீளும். சலவைத் தொழிலாளி வீட்டில் அழுக்கு மூட்டைகளுக்கு நடுவில் மாதக்கணக்கில் பதுங்கியிருந்திருக்கிறார். தோல் நோய்கள் ஏற்பட்டாலும் மருத்துவரிடம்கூட போக முடியாத நிலை. பின்னாளில் எதற்கும் கலங்காதவராக நிற்க இந்தப் பயணமும் ஒரு காரணம்!

7. ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தபோது 'ஜனசக்தி' பொறுப்பாசிரியராக இருந்திருக்கிறார். 1963-ல் மார்க்சிஸ்ட் கட்சி சார்பில் 'தீக்கதிர்' தொடங்கப்பட்டபோது, அதில் கட்டுரைகள் எழுதிவந்த அவர், 1966-ல் அது மார்க்சிஸ்ட் கட்சியின் அதிகாரபூர்வ இதழாக அறிவிக்கப்பட்டபோது அதன் ஆசிரியரானார்!

8. முதன்முறையாக 1957 தேர்தலில் மதுரை கிழக்குத் தொகுதி தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். 1962-லும் தோல்வி. 1967-ல் மதுரை மேற்குத் தொகுதியில் முதன்முறையாக வெற்றிபெற்றார். அடுத்தடுத்து நடந்த 1977, 1980 தேர்தல்களிலும் (மதுரை கிழக்கு) அவர் வென்றார்.

9. சாதிக் கலவரங்கள், மதக் கலவரங்களின்போது அமைதியை உருவாக்க களப் பணியாற்றினார். 1998-ல் கோவையில் மதநல்லிணக்கப் பேரணியை (1998) நடத்தினார். மதவாத சக்திகளுக்கு எதிராக கம்யூனிஸ்ட்களும், தேச பக்தர்களும் கடமையாற்ற அழைத்தார். 1997-ல் மதுரையில் முதல்வர் கருணாநிதி தலைமையில் நடந்த தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் தீவிர நிலச் சீர்திருத்தமே தீர்வு என்று முழங்கினார்!

10. கட்சியில் 'இரும்பு மனிதர்' என்ற பெயர் சங்கரய்யாவுக்கு உண்டு. ஆனால், சங்கரய்யாவைக் கலங்கவைக்கும் பாடலும் உண்டு. டி.மணவாளன் எழுதிய 'விடுதலைப் போரினில் வீழ்ந்த மலரே, தோழா' பாடலைக் கேட்டால் கட்சித் தோழர்களின் தியாகத்தை நினைத்து அழுதுவிடுவார். அவரது கொள்கைப்பிடிப்பு, எளிய வாழ்க்கை, பண்பான நடத்தை ஆகியவற்றால் இன்றைக்கும் என்றைக்கும் எண்ணற்ற இளையோரை வசீகரிப்பவர் சங்கரய்யா.

# 100 மில்லியன் பார்வையாளர்களை கடந்த டியூட் படத்தின் Oorum Blood





கீர்த்தீஸ்வரன் இயக்கத்தில் பிரதீப் ரங்கநாதன் நடித்துள்ள படம் டியூட்.

இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைத்துள்ளார்.

இயக்குநர் சுதா கொங்கராவிடம் உதவி இயக்குநராக பணியாற்றிய கீர்த்தீஸ்வரன் இயக்கத்தில் பிரதீப் ரங்கநாதன் நடித்துள்ள படம் 'டியூட்'. இப்படத்தில் பிரதீப் ரங்கநாதனுக்கு ஜோடியாக பிரேமலு புகழ் மமிதா பைஜு நடித்துள்ளார்.

இப்படத்தில் சரத்குமார், ரோகினி, ஹ்ரிதுஹரூன், டிராவிட் மற்றும் பலர் நடித்துள்ளனர். சாய் அபயங்கர் இசையமைத்துள்ள இப்படத்தை மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது.

இப்படம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கடந்த 17-ந்தேதி வெளியாகி பெரிய அளவில் ரூ.100 கோடிக்கு மேல் வசூலை அள்ளியது.

இந்நிலையில் இந்த படத்தில் இடம் பெற்ற இடம்பெற்ற "Oorum Blood" பாடல் 100 மில்லியன் பார்வைகளை கடந்துள்ளதாக தெரிவித்த இசையமைப்பாளர் சாய் அபயங்கர், நன்றி தெரிவிக்கும் விதமாக லவ் யூ மக்களே எனவும் கூறியுள்ளார்.

இசையமைப்பாளர் சாய் அபயங்கர், சூர்யா நடிக்கும் கருப்பு உள்பட பல படங்களில் இசையக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



பேபி சாராவாக இருந்தவர் தற்போது ஹீரோயினாக தொடங்கி இறுக்கினார். ரன்வீர் சிங் ஜோடியாக அவர் ஹிந்தியில் அறிமுகம் ஆகி இருக்கிறார். சாரா அர்ஜுன் அழகிய லேட்டஸ்ட் போட்டோஷூட் இதோ.

# மிடில் கிளாஸ்- திரைவிமர்சனம்




சென்னையில் தனது மனைவி விஜயலட்சுமி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் வாழ்ந்து வருகிறார் முனிஷ்காந்த். மிடில் கிளாஸ் வாழ்க்கையை வாழ்ந்து வரும் இவர்களுக்கு வெவ்வேறு கனவுகளும் இருக்கிறது. ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கும் முனிஷ்காந்த் குறைந்த சம்பளத்தில் குடும்பத்தை நடத்தி வருகிறார். ஆனால், முனிஷ்காந்திற்கு சொந்த ஊரில் நிலம் வாங்கி செட்டிலாக வேண்டும் என்பது கனவு.

ஆனால், விஜயலட்சுமிக்கு சென்னையிலேயே சொந்தமாக வீடு வாங்கி இங்கேயே செட்டில் ஆக வேண்டும் என்பது கனவு. இதற்கிடையே, ஊரில் பெரிய ஆளாக இருந்த முனிஷ்காந்தின் தந்தையின் சொத்து மூலம் ஒரு கோடி ரூபாய்க்கான காசோலை கிடைக்கிறது. அதற்குள், நமக்கு வரப்போகிறது என்று இருவரும் தாம் தூம் என்று கடன் வாங்கி செலவு செய்கிறார்கள்.

இந்தநிலையில், காசோலை தொலைந்துவிடுகிறது. இறுதியில் காசோலை கிடைத்ததா? தங்களது வாழ்க்கையே மாறப்போகிறது என்ற கனவில் மிதந்த இவர்களின் மிடில் கிளாஸ் வாழ்க்கை மாறியதா என்பது படத்தின் மீதிக்கதை...

### நடிகர்கள்

மிடில் கிளாஸ் நாயகனாக வரும் முனிஷ்காந்த் கதாபாத்திரத்திற்கு கச்சிதமாக பொருந்தி இருக்கிறார். ஒரு குடும்பத் தலைவனாக, மிடில் கிளாஸ் அப்பாவாக தனது நடிப்பை தத்ரூபமாக வெளிப்படுத்தி இருக்கிறார். மிடில் கிளாஸ் குடும்ப தலைவி கதாப்பாத்திரத்தில் விஜயலட்சுமி அசத்தி இருக்கிறார். இவர்களை தாண்டி கோடாங்கி வடிவேல், குரேஷி, காளி வெங்கட், ராதா ரவி, வேல ராமமூர்த்தி ஆகியோரும் கதாப்பாத்திற்கு ஏற்ப சிறந்த நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

### இயக்கம்

ஒரு மிடில் கிளாஸ் வாழ்க்கையை தத்ரூபமாக படமாக எடுத்துள்ளார் இயக்குநர் கிஷோர் முத்துராமலிங்கம். சொந்த ஊரிலிருந்து சென்னை வந்து, மாத சம்பளத்தை மட்டுமே வைத்து ஒரு குடும்பத்தை நடத்தும் ஒரு சராசரி தம்பதி படும்பாடை அழகான காட்சிகள் மூலம் எடுத்துரைத்துள்ளார். படத்தில் சில ஏற்றம் இறக்கங்கள் இருந்தாலும் எந்த ஒரு தொய்வும் இல்லாமல் படம் நகர்கிறது.

### இசை

பிரணவ் முனிராஜ் இசையில் பாடல்கள் கேட்பதற்கு நன்றாக இருந்தது.

### ஒளிப்பதிவு

ஒளிப்பதிவாளர் சுதர்சன் சீனிவாசனின் ஒளிப்பதிவு படத்திற்கு பலம். முழு உழைப்பையும் கொடுத்திருக்கிறார்.



மலையாள சினிமாவில் வலம் வந்த அஞ்சு குரியன் தமிழில் சென்னை 2 சிங்கப்பூர் என்ற படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானார்.

அதன் பின் ஜூலை காற்றில், இஃக்லு, சில நேரங்களில் சில மனிதர்கள், சிங்கிள் ஷங்கரும் ஸ்மார்ட்ஃபோன் சிம்ரனும் உள்ளிட்ட பல படங்களில் நடித்து தனக்கென ஒரு இடத்தை தமிழ் சினிமாவில் பிடித்து கொண்டார்.

அஞ்சு குரியன் அவ்வப்போது இன்ஸ்டா தளத்தில் போட்டோவை வெளியிடுவதை வழக்கமாக வைத்துள்ளார்.

அந்த வகையில், தற்போது மாடர்ன் லுக்கில் அஞ்சு வலம் வரும் அசத்தல் ஸ்டில்ஸ்.

# சூர்யா ரசிகர்களுக்கு வெளியான ஹாப்பி நியூஸ்...





கடந்த 2014-ம் ஆண்டு லிங்குசாமி இயக்கத்தில் நடிகர் சூர்யா நடித்து வெளியான படம் 'அஞ்சான்'. இப்படத்தில் சமந்தா, வித்யுத் ஜம்வால், சூரி, மனோஜ் பாஜ்பாய் உள்ளிட்ட பலரும் நடித்து உள்ளனர். யுவன் இப்படத்திற்கு இசையமைத்து இருந்தார். இப்படத்தில் வரும் வசனங்கள் தற்போதும் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

இந்த நிலையில், 'அஞ்சான்' படம் வருகிற 28-ந்தேதி முதல் திரையரங்குகளில் மீண்டும் வெளியாக உள்ளது. தற்போது ரீ எடிட் செய்து தயாராகி உள்ள 'அஞ்சான்' படத்தின் ப்ரிவ்யூ ஷோ நடந்தது. இந்த ப்ரிவ்யூ ஷோவில் சூர்யாவின் தந்தையும், நடிகருமான சிவகுமார் கலந்து கொண்டார். அவருடன் இயக்குநர் சரணும் ரீ எடிட் செய்த படத்தை பார்த்துள்ளார்.

இதையடுத்து இயக்குநர் லிங்குசாமியை இருவரும் பாராட்டியுள்ளார். இதனால் சூர்யாவின் ரசிகர்கள் உற்சாக மிகுதியில் உள்ளனர்.

# கஞ்சா வழக்கில் சிம்பு பட இணை தயாரிப்பாளர் கைது



கைதான சர்புதீனிடம் இருந்து ரூ.27 லட்சம் ரொக்க பணமும், ஒரு சொகுசு காரும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

போதை விருந்தில் சினிமா பிரபலங்களும் பங்கேற்றார்களா? என்ற கோணத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னை கஞ்சா வழக்கில் சர்புதீன், சீனிவாசன், சரத் என்ற 3 பேரை போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீசார் கைது செய்துள்ளனர்.

இதில் கைதான சர்புதீன் நடிகர் சிம்புவின் 'ஈஸ்வரன்' பட இணை தயாரிப்பாளராக இருந்துள்ளார்.

எல்டாமஸ் சாலையில் உள்ள சர்புதீன் வீட்டில் ஒவ்வொரு வாரமும் போதை விருந்து நடந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும் கைதான சர்புதீனிடம் இருந்து ரூ.27 லட்சம் ரொக்க பணமும், ஒரு சொகுசு காரும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட ரூ.27 லட்சம் குறித்து போலீசார் விசாரணை நடத்தியதில், ஒரு கட்சியின் தேர்தல் வியூக நிறுவனத்துடன் சர்புதீன் தொடர்பில் இருப்பதும், அந்நிறுவனத்தின் பணம் தான் என சர்புதீன் தெரிவித்த போலீசார் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

மேலும் சர்புதீன் நடத்திய போதை விருந்தில் சினிமா பிரபலங்களும் பங்கேற்றார்களா? என்ற கோணத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## டிரைவர்கள் தேவை

சென்னை, பெங்களூர் மற்றும் திருப்பூர் லைனில் ஓட்டுவதற்கு டிரைவர்கள் தேவை.

ஹெவி லைசென்ஸ் மற்றும் பேட்ஜ் வைத்திருக்க வேண்டும்

தினசரி பேட்டா மற்றும் திறமைக்கேற்ற நல்ல சம்பளம்.

**ACCOUNTANT**
Tally knowledge must

**OFFICE STAFF**
+2 or Degree

SKT கார்டன், S.பெரியபாளையம், ஊத்துக்குளி ரோடு, திருப்பூர்.

**93676-77779**

## WANTED

- Arc-Welder-
- Compressor Air Tank-6
- Gas-Welder Compressor
- Air Driyer-5
- Service-Engineer-
- Compressor-7
- Helper-3
- Compressor Fitter-2

**Jayam Equipments**
Ganapathy,
Coimbatore-06

**9944642406**

## WANTED

We are Looking For

**BUSINESS PARTNERS**
(MALE / FEMALE)
in Coimbatore
Real Estate Marketing

Call

**98945 72840**

Call- 9438610756, 9337501889

News Portal Website Development



Only Rs. 499/-

Just 499 www.just499.com

## ஆட்கள் தேவை

- எலிவேட்டர் இன்ஸ்டாலேஷன் டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் அசெம்பிளி டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் ட்ரெபிள் சூட்டிங் டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் குவாலிட்டி இன்ஸ்பெக்டர்ஸ்
- எலிவேட்டர் சே:ப்டி ஆபிசர்ஸ்
- எலிவேட்டர் NPD டெக்னீசியன்ஸ்
- கிரிம்பிங் டெக்னீசியன்ஸ்
- சோல்டரிங் டெக்னீசியன்ஸ்
- HINDI SPEAKING DATA ENTRY FRESHER WITH MS-OFFICE KNOWLEDGE
- எலிவேட்டர் இன்ஸ்டாலேஷன் காண்ட்ராக்ட்டர்ஸ்

Candidates with Elevator field Experience & Knowledge are Welcome

jeeva.v@eliteelevators.com
Cell: 8925998689
Elite Elevators

## MACHINE REPAIR TECHNICIAN WANTED

Construction Company in **CALICUT, Kerala** requires Technicians for Bar Bending and Bar Cutting Machine, Mini Lift, Mixer Machine repairing with proven experience in repairing construction machinery.

**GOOD SALARY**
Accommodation Available

**85938 12049**

## Make Money Without Investment Through Mobile



Just 20 min/per day
Any Time
Earn upto Rs. 1000/per mobile

**Call : 9337501889**

## மகேந்திரா வேர்ல்ட் சிட்டி அருகில்

விகாஸ் மந்திரா பள்ளி அடுத்து DTCP & RERA அங்கீகாரம் பெற்ற புதிய லேஅவுட் மனைகள்

**1200 - 2400 சதுர அடி**

அனுக்ரஹா
தொடர்புக்கு: **90477 34343**

## ஸ்ரீபெரும்புதூர் அருகில் உள்ள

கம்பெனிக்கு
**50 Staff**
தங்குவதற்கு Building வாடகைக்கு தேவை

**97899 85835 / 79046 02553**

## LAND FOR SALE

COIMBATORE PEELAMEDU
GV RESIDENCY 4.25 cents,
RAMANATHAPURAM KRISHNA COLONY
5.50 and 8 and 11Cents
RAMANATHAPURAM NEAR JUNCTION
1.10Acre & 4Acre
Broker Excuse
Contact: R.Sasikumar
**81242 63136**

## New House for Sale

@ EB Colony, Veerapandi Pirivu
2BHK House
2.7 cent - North Facing
1000 sq.ft

**9751041250**

## வள்ளியூர் NH அருகில்

வீட்டுமனை 5 செண்ட் ரூ.2 லட்சம்
வீட்டுமனை 4 செண்ட் ரூ.4 லட்சம்

வள்ளியூர் பூங்கா நகர்
5 செண்ட் ரூ.45 லட்சம்

**9940 20 7778**

## OMR GOLDEN CITY ALERT!

**THIRUPORUR**
Sold Out in 2019 - Limited Resale Plots Now Open!
Starts : Rs.13 Lacs
90% Bank Loan
**Call: 9962 888 888**

## Commercial Building for Rent

**THIRUNINDRAVUR**
Main Road 3000Sft, 2nd Floor Suit for Gym Etc.

**REDHILLS - ORR**
Main Road 2500Sft, Ground Floor (Via Redhills to Thiruvallur) Suits for Showroom, Restaurant.

**98412 38854**

## கட்டிடம் விற்பனைக்கு

பொள்ளாச்சி நகரில் பிரபல இன்ஜியரிங் கல்லூரி அருகில் 13 அறைகளுடன் (ALL BATH ATTACHED) கூடிய புதிய கட்டிடம் விற்பனைக்கு மாத வாடகை வருமானம் ரூ.50,000

CONTACT
**98420 14702**

## குடோன் வாடகைக்கு

நீலாம்பூர் கதிர் காலேஜ் ரோட்டில்
500,1000,1600,2600 சதுரடி (EB 50HP)
குடோன் வாடகைக்கு

**98941 09560**

## 2 BHK FIRST FLOOR FOR RENT

DVD COLONY, KOTTAR
MARBLE FLOOR
24 HOUR WATER
**9840741033**

## ADVERTISE WITH US



CONTACT US
9438610756

## JOB VACANCY

- Nurse (ICU/NICU/OT/Casualty/Labour/Ward)
- Lab Technician
- AC Technician
- Accountant
- Reception - Billing
- House Keeping
- Ward Boy

**AMRIT MEDICAL CENTRE**
No. 73/28, Dr. Alagappa Road, Purasawalkam, Chennai - 600 084.
Call : +91 7695957120
calling time 11.00 am to 5 pm

## ஆட்கள் தேவை

திருவள்ளூர் மாவட்டம் தண்ணீர்குளம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ட்சுரல் ஸ்டீல் தொழிற்சாலைக்கு PEB / கன்வென்ஷனல் ஃபேப்ரிகேஷன், நன்கு வேலை தெரிந்த ஆட்கள் தேவை.

1. ஒப்பந்ததாரர்கள் (CONTRACTORS)
2. வெல்டர்ஸ் மற்றும் கேஸ்கட்டர்ஸ்
3. கிரேன் ஆப்ரேட்டர்கள்

தங்குமிடம் ESI / PF வசதிகள் உள்ளன.

Ct: 93800 72095 / 98416 46097

## WANTED EXECUTIVES

Age Limit 40 Years
For Chennai, Tiruvallur, Chengalpattu
Attractive Salary Package, PF, ESI & Bonus with Allowances

999® BRAND

**+91 893 999 7476**
Email: 999lungies@kasz.in

## அன்ஜுமன் இ-ஹிமாயத்-இ-இஸ்லாம்

**ஆட்கள் தேவை**

துப்புரவு பணியாளர்
தோட்டக்காரர், தச்சர்
சமையல்காரர்
உதவி சமையல்காரர்
சமையலறை உதவியாளர்

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் நேரில் அணுகவும். 15, 16 & 17.09.2025 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை

16, பி.என்.ரெட்டி சாலை, தி.நகர், சென்னை - 17.
E-Mail : hr@anjhimayath.com




விடிகாலை எழுப்பும்
அலாரம்... கூவும் சேவல்,
பால்காரரின் கூக்குரல்...
வண்டிகளின் இரைச்சல்....
செய்தித்தாள் வீசும்
பையன்.... இடியாப்ப
வியாபாரி...
தொலைக்காட்சி...

காது பக்கம் வந்து
ரீங்காரமிட்டு கடிக்கும்
கொசு....

இது எதுவும் அக்காலத்தில்
இல்லாமற் போன
காரணம்தான் கும்பகர்ணன்
ஆறுமாதம்
இடைவிடாது
உறங்கியிறுக்கக்
கூடும் !



எம்.பி.
தினேஷ்.
கோவை

### தேவை !

சந்திராயனை பற்றி
தெரிந்திருக்கவில்லை...
இந்திய பாகிஸ்தான் எல்லை
பிரச்சினை பற்றியும் தெரிய
வாய்ப்பில்லை...

தான் ஓட்டு போட்டு
பதவியில் அமர்த்திய தன்
தொகுதி எம்.எல்.ஏ ,..எம்.
பிக் களின் பெயரைக் கூட
சுத்தமாக தெரியாது....

ரேஷனில், அரிசி
பருப்பு, கோதுமை
மண்ணெண்ணெய்,
கிடைக்குதா என்பதுதான்
தற்போது பாமர மக்களின்
அறியவேண்டிய
அத்தியாவசிய தேவை....

எம்.பி.தினேஷ்.
கோவை

### தமிழா விழி! தமிழே வழி.!

தமிழா கொஞ்சம் விழி
என்றேன்.. விழிக்கச்
சொன்னால் முழிக்கின்றான்!

தமிழே நமக்கு வழி
என்றேன்.. தடமே அறியாமல்
வழிகின்றான்!

ஒற்றுமை நமது
உயிரென்றேன்..
ஒன்றுபடாமலே
பிரிகின்றான்.!

முத்தமிழ் காப்பதே
மரபென்றேன்..
முயற்சி செய்யாமலே
இருக்கின்றான்!

கற்றிடு பேசிடு.. தமிழ்
என்றேன்.. பிறர் மொழியிலே
பேசினால் என்செய்வேன்?

உரிமைக்கு குரல்
கொடு என்றவுடன்.. ஓடி
ஒளிந்தவன்!.. இன்னும்
தேடுகின்றேன்!


தமிழ்வழி படித்தலே
உயர்வென்றேன்..
தன்மொழி மறந்துதான்
போகின்றானே..

தமிழர்கள் பண்பாடு
காத்திடவே.. குரல்தர
தமிழன் ஏன் கேளாது
செல்கின்றானே!

விடிந்தும் தூங்கினான்
என்தமிழன்..
இவன்
விடுதலை
அடைவது
எக்காலமோ?



வே.கல்யாண்
குமார்.



உன் வெள்ளை தாவணியை
ஏனடி கடன் கொடுத்தாய்?
எம்புட்டு அழகாய் தெரிகிறது
அந்த மேகங்கூட்டங்கள்!

உன் வண்ண,வண்ண
தாவணிகளை
திருடிக் கொண்டதால்
பேரழகாய் இருக்கிறது
அந்த களவாணி வானவில்!

நீ மட்டுமல்ல என் நிழல் கூட
என்னிடம் இல்லை
நீ இல்லாமல் போனதால்!
கடைசியாய் ஒன்றே ஒன்று
சொல்லிக் கொள்கிறேன்
நீயின்றி அமையாது
எனதுலகு!

கருங் மேகங்கூட்டங்களுக்
கிடையே சூரியன்–உன்
கருங்கூந்தலுக்கிடையே
என் முகம் ஒரு சேர
அமைந்து போவது
வாழ்வின் அழகியல் தான்!

சூரியன் உதித்தும்
விடியாதவன் உன் விழி
காண அதிகாலையிலேயே
உதயமாகிறான்

காதலிக்காதவன்
கல் போன்றவன் தான்
காதலியே காதலித்து விடு
மனிதனாகி போகிறேன்!

பூக்களுக்கு உண்மையான
மரணம் அவள்
கூந்தல் விட்டு
பிரிந்த போது
தான்!



லி.நௌஷாத்
கான்

### தந்திரம்

இலக்குகள் கண்
காணா இடத்திலில்லை
கனவெல்லாம் கைக் கெட்டிய
தூரத்திலே நையாண்டி கேலி
நக்கலைப் புறக்கணிப்பீர்
இலட்சிய வரைபடத்தை
விட்டு விலகாதீர்

நற்கருத்துக்கள் கூற
நண்பர்கள் உள்ளனர்
ஆழ யோசிக்க திறனுள்ள
மூளை உண்டு

தோல்விகளைத் தாங்கும்
பக்குவமிருக்கு
கவலைகளைத் தாங்கி
இயங்கும் இதயம்

சீற்றத்தில் விழி சிவக்க
ஆவேசப்படாதீர்
குழப்பம் நிலவும்போது
முடிவெடுக்காதீர்

வெற்றி அரவணைக்க
பணிவோடிருப்பீர்
சீதேவி உமை
அகலாதிருக்கும்
சூட்சுமம்



பி. பழனி,
சென்னை.

### ஹைக்கூ !

அம்மாவிற்கு பிடிக்காத
தமிழ்ச்சொல் மருமகள் !

மனைவிக்கு பிடிக்காத
தமிழ்ச்சொல் மாமியார் !

வெண்மேகம்
கார்மேகமானது
கருப்பு வண்ணத்தால் !

இல்லை என்று சொல்
பொய் சொல்லப் பழக்கினர்
குழந்தையை !

ஊதிக் கெடுத்தார்
தந்தையே மகனை
வெண் சுருட்டு !

கெடவில்லை பொருட்கள்
குளிரூட்டப்பட்ட
அறையில்
மனிதர்கள்
மூளை ?



கவிஞர்
இரா .இரவி

### வேட்கை

ஆகாய தேவதையின்
நீண்டநாள் வேட்கை
சிதறிக்கிடக்கும் நட்சத்திர
வெள்ளிப்பாசிகளை மின்னல்
நரம்பில் தங்கநிலா
டாலரோடு கோர்த்து
கழுத்தில் மாலையாய்
அணியாமல் நெற்றியில்
மட்டும் சந்தனப்பொட்டை
வைத்துக்கொண்டாள்!

விபூதி துகள்களோ
சிந்திக்கிடக்கின்றன
ஆதவன் மேற்கில் மறையும்
அந்திப்பொழுதில்
குங்குமம் குவிந்து கிடப்பதும்
புலப்படவில்லையோ?!

ஆகாயத்தில் உருண்டை
வெல்லத்தை யார்
வைத்தது நட்சத்திர
எறும்புகள் கொஞ்சம்
கொஞ்சமாய்த்தின்று
தீர்த்ததைதான் பிறைமதி
என்கிறீர்களோ?!
தங்க உண்டியல் உடைந்து
வெள்ளிக்காசுகள்
சிதறிக்
கிடக்கின்றன!



கவிஞர்
த.அனந்தராமன்
துறையூர்



உனது கல்விக்கண்
கொண்டு
இவ்வுலகத்தைக்காண,
இவ்வுலகத்தில் திறம்பட
வாழ, நாட்டினர் போற்ற,
நாடு நலம் பெற,
மனிதாபிமானம் கொண்டு
சிந்தித்துச்செயல்பட,
இவ்வுலகில் என் வயிற்றில்
பிறந்து நீ தார்மீகப்
பொறுப்பேற்று, இவ்வுலகிற்கு
நாம் செய்யவேண்டிய
கடமைகளை உணர்ந்து,
இவ்வுலகில் வாழும்
ஏனையோருக்கும்
"வாழ்வித்து வாழ்விக்கும்"
அரிய செயல்களில் ஈடுபட்டு,
பகுத்தறிவு கொண்டு பல
நற்காரியங்களில் முன் நின்று
வழிநடத்தி, வீடு போற்ற,நாடு
போற்ற, உலகமே போற்ற
உன்னை வழிநடத்த, இன்று
முதல் உன்னை பள்ளிக்கு
அனுப்புகிறேன் என் செல்ல
மகனே ! உன் அறிவுக்கண்
கொண்டு அரிய பல
சாதனைகளைச்செய்து
இவ்வுலகிற்கு நீ
செய்யவேண்டிய
கடமைகளைச் செவ்வனே
சீர்தூக்கிச்
செயல்படுத்தி
வாழ்வாங்கு
வாழ விழையும்
உன் அன்பு
அம்மா !



உமா
வெங்கடேசன்

### கலந்துவிட்டால் ...

நீலமும் வானமும் கலந்து
விட்டால் அது மேகம்

காற்றும் மென்மையும்
கலந்துவிட்டால் அது
தென்றல்

முயற்சியும் நம்பிக்கையும்
கலந்துவிட்டால் அது வெற்றி

கணவனும் மனைவியும்
கலந்துவிட்டால்
அது மழலை

இதயமும்
இதயமும்
கலந்துவிட்டால்
அது காதல்



எஸ். சந்திரசேகரன்
அமுதா செஞ்சி கோட்டை



அம்மாவுக்கு கரித்தூளும்
நெல் உமியும்தான் பல்துலக்க!
காலைப்பொழுதின்
அவசரத்திற்கு கண்மாய்க்கரை
அப்பாவிற்கு!

இருள்விலகா
காலைப்பொழுதில்
வேலிக்காத்தான்
செடிகளுக்குப் பின்
ஒதுங்கினார்கள் அக்காவும்
தங்கையும்!

பெரும்பாலும் அம்மாவின்
பழைய சேலையே அக்காவின்
உதிரப்போக்கு நாட்களுக்கு
உதவியது.

அம்மா
தோட்டங்காடுகளுக்கும்
வயல் வேலைக்குமாய்
சென்றாள்.

அப்பா மில் வேலைக்கும் அது
அற்ற தினங்களில் கிடைத்த
வேலையையும் செய்தார்.

அக்காவும் தங்கையும்
பின் நானும் உள்ளூர்
அரசுப்பள்ளியில்தான்
படித்தோம்.

பள்ளிப்பாடங்களின்
நெருக்குதலற்ற
விடுப்பு தினங்களில்
மூவரும் அம்மாவுடன்
கூலிக்குச்சென்றோம்.

சீட்டுக்கட்டிய பணம்தான்
புதுத்துணியாகவும்
கட்டில்,பீரோ,
பாத்திரங்களாகவும்,
தீபாவளி பொங்கலாகவும்,
கோவில் திருவிழாவாகவும்
மாறியது.

வீட்டு வாசலில் பாம்படித்த
ஓர் இரவிலிருந்து
வெளியிலமர்ந்து
விளக்கொளியில்
படிப்பதும்நின்றுபோனது.

அக்காவிற்கு
திருமணமாகிய பின்
உடல் தவங்கிப்போன
அம்மாவும் அப்பாவும்
நான் மில் வேலைக்கு
சென்ற தினத்தில் ரகசிய
கண்ணீர் சிந்தினார்கள்.

கரைந்தோடிய
கண்ணீர்ச்சுவடுகளின் ஊடே
ஓர் நாள் தங்கைக்கும்
சுப முகூர்த்த ஓலை
எழுதப்பட்டது.

நாங்கள் ஐவரும் குடியிருந்த
அந்த ஒண்டுக்குடித்தன
வீடுதான் இப்பொழுது என்
குடியிருப்பாய்.

உடனிருந்த அம்மாவையும்
அப்பாவையும்
மூப்பைச்சொல்லி
அழைத்துக்கொள்கிறான்
காலன்.

அக்காவும்,தங்கையும்
அவர்களின் நினைவு நாளில்
வந்து போகிறார்கள் கணவன்
பிள்ளைகளுடன்.

நிலைமையில் சற்று
தென்றலடித்த முன்னேற்றம்.

ஒண்டுக்குடித்தன வீடு
எண்ணூறு சதுரங்களாய்
உருமாறியிருக்கிறது
ஒற்றை படுக்கையறையும்,
சமையலறையும்,
மைய அறையாகவும்!

மில் வேலையிலிருந்து
விடுபட்டு சொந்த தொழிலில்
காலூன்றி!

இன்று நெல் உமியும்
கரித்தூளும்,
கண்மாய்க்கரையும்,
வேலிக்காத்தான்
செடிகளுக்குப்பின்னான
இருளகலாப்பொழுதுகளும்
தேவையாய்
இருக்கவில்லை எனது
மனைவி, மக்களுக்கு!



விமலன்.

### காக்கிச்சட்டை

வீட்டுக்கு அருகாமையில்
உதித்த சூரியனை பார்க்க
நேரமில்லை... உதிரமும்
உறைந்திருந்தது உண்ண
நேரமும் இல்லை..
உயிர் மூச்சு விட நேரமும்
இல்லை... கரைந்து ஓடிய
வியர்வை துளிகளை
துடைக்க நேரமில்லை...
துரிதமாக செயல்பட்டது
விழிகள்... காக்கிச் சட்டையில்
படிந்த கறைகளை தினமும்
அகற்ற நேரமில்லை...
போதவில்லை நேரம் புரட்டி
எடுக்கின்றது வாழ்க்கையை...
கைத்தடியில் இருந்த
கவைக்கொல் ..
ரோட்டில் ஓரத்தில் உயிர்
மாய்த்து இருந்த ஒரு அற்ப
ஜீவனை அகற்றும் பணியில் ..
மூக்கின் நாசியை வாருடிய
கவிச்சி வாடை..
கண்டுகொள்ளாமல் வேலை
செய்து கொண்டிருந்தது
கைகள் ..துப்புரவு
பணியாளரின் துவளாத
நெஞ்சம்.. தினமும் ஒவ்வொரு
நாளையும் புதுமையாக்கிக்
கொண்டிருந்தது...
காக்கிச்சட்டை
கசங்கினாலும்
கண்ணியமாக
வேலை
செய்கின்றது..



கவிஞர்
நா.மோகன
செல்வி மனோகரன்
கோபிசெட்டிபாளையம்



### கடமையை செய்

கடமையை செய், உள்ளத்தில்
பிறக்கும் மெய் ஆதவனைப்
பார்த்து தினமும் கடமையை
செய்ய கற்று கொள்.
தைரிய தீபம் மனதில் ஏற்றி
கடமையை செய்துவிடு
பலன் தானே வரும் என்ற
நம்பிக்கையுடன் செய்து விடு
பெற்றோர்களுக்கு
பிள்ளை வளர்ப்பது
கடமையை
ஆசிரியர்களுக்கு
பாடம் சொல்லிக்
கொடுப்பது கடமை
பணியாளர்களுக்கு
பணியை செவ்வனே
செய்வது கடமை இப்படி தன்
கடமை உணர்ந்தால் சமூகம்
சீராகுமே.. எதற்கு அடுத்தவர்
பாராட்டு நமக்குத் தேவை நம்
கடமையை செய்வதே
நாளை விழிப்போம் என்ற
நம்பிக்கையுடன் நாம்
உறங்கும் போது கடமை
தானே நம்மை எழுப்பச்
செய்கிறது கடமையைச்
செய்வோம் தடங்கல்
இல்லா பாதையில்
வெற்றி நடை
போடுவோம்.



உஷா முத்து ராமன்

## நூல் விமர்சனம்:

**எப்போதும் போல் இல்லை எப்போதும் !**
நூல் ஆசிரியர் : கலைமாமணி
ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன்!
நூல் விமர்சனம் :
கவிஞர் இரா. இரவி
வெளியீடு : வானதி பதிப்பகம், 23,
தீனதயாளு தெரு, தியாகராயர் நகர்,
சென்னை–600 017. பக்கங்கள் : 208,
விலை : ரூ.250.
பேச : 044 24342810

*‘கவிதை உறவு’ மாத இதழின் ஆசிரியர் நாடறிந்த நல்ல மனிதர், சிறந்த கவிஞர், கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் ஏர்வாடியார் என்றால் இலக்கிய உலகம் நன்கு அறியும். கவிதை உறவு மாத இதழில் ஏழாம் பக்கத்தில் இடம்பெற்ற கவிதைகளின் தொகுப்பு மேலும் அமுதசுரபி, கலைமகள், ஓம்சக்தி, மங்கையர் மலர் போன்ற இதழ்களில் இடம்பெற்ற கவிதைகளையும், சென்னை வானொலியில் ஒளிபரப்பான கவிதைகளும் தொகுத்து கவிதை விருந்து வைத்துள்ளார்கள். 118 தலைப்புகளில் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. கவிதை உறவு மாத இதழ் வந்தவுடன் ஏழாம் பக்கத்தின் கவிதையை முதலில் படிக்கும் ரசிக்கும் ரசிகன் நான். நான் மட்டுமல்ல கவிதை உறவு வாசகர்கள் பலரும் இதையே வழிமொழிந்தனர். கவிதை உறவு இதழின் சிறப்புகளில் ஒன்று ஏழாம் பக்கம். சிந்திக்க வைக்கும் நல்ல கருத்துக்களை எளிமையான சொற்களின் மூலம் சிற்பி சிலை செதுக்கும் கவனத்துடன் சொற்களைச் செதுக்கி கவிச் சிற்பத்தை சிறப்பாக வழங்கி வருபவர் ஏர்வாடியார். இதழாசிரியர் கவிஞராக இருந்தால் இதழில் பக்கம் பக்கமாக அவர்கள் கவிதையே எழுதுவார்கள். ஆனால் ஏர்வாடியார் ஏழாம் பக்கம் தவிர வேறு எந்தப்பக்கத்திலும் அவர் கவிதையே எழுதுவதில்லை. இப்பண்பே சிறந்த பண்பாகும். திரைப்பட இயக்குனர் பிருந்தா சாரதி அவர்கள் நீண்ட நெடிய அணிந்துரையை 18 பக்கங்களில் வழங்கி உள்ளார். கவிஞர் தங்கம் மூர்த்தி அவர்கள் ‘பார்கூடிப் பாராட்டும் எங்கள் ஏர்வாடியார்’ என்று வாழ்த்துக் கவிதையை முத்தாய்ப்பாக வழங்கி உள்ளார். இந்த நூலை இலண்டன் கல்லூரியில் துணை முதல்வராகப் பணியாற்றும் இனிய நண்பர் கவிஞர் புதுயுகன் அவர்களுக்கு காணிக்கை ஆக்கி உள்ளார். சிறப்பு.*




*பதச்சோறாக நூலிலிருந்து சில வைர வரிகள் உங்கள் பார்வைக்கு. முத்தாய்ப்பான முதல் கவிதை. எழுத்தே வாழ்க்கையாய் ...*
*உழுத நிலம் என உளத்தை / மாற்று தற்கும் விழும் விதையாய் எழுத்தையதில் / விதைப்பதற்கும் எழுதுகிறேன் அன்றிவேறு / எண்ணமில்லை எழுத்தை விட எனக்கெதுவும் / சிறந்ததில்லை.*

*எழுத்தை தவமாகக் கொண்டு தொடர்ந்து எழுதி வருபவர். இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களான கவிதை, கதை, கட்டுரை, நாடகம் என எல்லாத் துறையிலும் முத்திரைப் பதித்தாலும் கவிதையில் மட்டும் தனக்கென தனி பாணி அமைத்து கவிதை வளர்த்து வருபவர் ஏர்வாடியார். ஏழாம் பக்கத்து கவிதைகளை மொத்தமாக நூலாகப் பார்த்தில் மட்டற்ற மகிழ்ச்சி, ஏர்வாடியாரிடம் பேசும்போது ஏழாம்பக்கக் கவிதைகளை நூலாக்குங்கள் என்று வேண்டுகோள் வைத்து இருக்கிறேன். வேண்டுகோளை நிறைவேற்றியதற்கு நன்றி அய்யா. புகழ்பெற்ற வானதி பதிப்பகம் மிக நேர்த்தியாக பதிப்பித்து உள்ளனர். ‘எப்போதும் போல் இல்லை எப்போதும்’ தலைப்பே சிந்திக்க வைத்தது உண்மை தான். இப்போது போல நாம் எப்போதும் முகமூடி அணிந்து இருந்தது இல்லை. இப்போது எப்போதும் போல் இல்லை என்பதை நன்கு உணர்த்தி உள்ளார். கொடிய கொரோனா காலத்திலும் ஓய்வின்றி உழைத்து நூலாக்கி விட்டார்கள். முதுமுனைவர் வெ.இறையன்பு இ.ஆ.ப. அவர்கள் குறிப்பிடுவது போல எப்போதும் இயங்கிக் கொண்டே இருக்கும். சுறுசுறுப்புத் தேனீ ஏர்வாடியார். அவரது நூல்கள் இந்த நூல் நல்ல மைல்கல்லாக மட்டுமல்ல சிறந்த கவிதைகள் மிக்க வைரவரிகள் உள்ள வைரக்கல்லாக ஒளிர்கின்றது. விநாயகர் சதுர்த்தி கொண்டாடி விட்டு விநாயகரைக் காப்பது போல் தேர்தலைக் கொண்டாடி விட்டு ஜனநாயகத்தைக் கரைத்து விடுகிறோம் நாட்டுநடப்பை குறைந்த சொற்களின் மூலம் படம்பிடித்துக் காட்டி வெற்றி பெறுகின்றார் ஏர்வாடியார். நாலாவது வீட்டில்! நல்ல விஷயங்களை/ நாள்தோறும் பேசுகிறோம் நம்மில் சிலர் / நன்றாகவும் எழுதுகிறோம் எங்கிருந்தோ/ எத்தனையோ / எடுத்துகாட்டுகளை எடுத்துக்காட்டுகிறோம் / ஆனால் / நாலாவது வீட்டிலிருக்கிற / நல்ல மனிதர் / நாராயண சாமி / மட்டும் / நமக்கு தெரிவதே இல்லை. உண்மை தான். அவரை, இவரை என்று எங்கு இருப்பவரை மேற்கொள் காட்டுவோம். ஆனால் நம் தெருவில் நம்மோடு வசிக்கும் நல்லவரை மேற்கோள் காட்டிட மனம் வருவதில்லை. இன்னும் சிலர் ‘லியோ டால்ஸ்டாயை’ மேற்கொள் காட்டுவார்கள். ஆனால் அவரே வழிகாட்டியாக நினைத்த நம் திருவள்ளுவரை மறந்து விடுவார்கள். முரண்பாடு ! காடுகளை அழித்து மரக் / கன்றுகளை நடுகிறோம்,*

*கொள்ளாதிரும் அடித்து விட்டு/ கொடைவள்ளல் ஆகிறோம், கொலைசெய்து பின்இரங்கல் / கூட்டங்கள் நடத்துவோம் வன்முறைகள் செய்துவிட்டு / வரைமுறைகள் பேசுவோம்! நாட்டில் நடக்கும் முரண்பாடுகளை கவிதைகளின் மூலம் உணர்த்தி நாட்டை சீர்படுத்த செய்திட்ட முயற்சி நன்று. சுழலும் காலச் சக்கர வேகத்தில் வாழ்க்கை என்பது / வெவ்வேறாவதால் எப்போதும் போல் இல்லை / எப்போதும் என்பது தான் உண்மை எப்போதும் இதுவே தான் / இவ்வுலகின் தன்மை. இவ்வுலகில் மாற்றம் ஒன்று தான் மாறாதது என்று மாறாத தத்துவத்தை கவிதையின் மூலம் உணர்த்தியது சிறப்பு. எல்லாப் பொருளிலும் பாடி உள்ளார். பாராட்டுக்கள்.*






## பூக்களை பறிக்காதீர்கள்

பூக்களை நான் எப்போதும்
பறிப்பதில்லை.
அதை ஒரு கொலை எனவே
நினைத்திருந்தேன்—
வேரிலிருந்து பிரித்து
தூக்கிவிடும்
ஒரு தலை வெட்டும்
பாவச்செயல் போல.

அழகை பிரித்து,
அன்பை பறித்து,
கண்ணுக்கு குளிர்ச்சி
வேண்டும் என்பதற்காக
ஒரு உயிரை தியாகம் செய்ய
வைத்ததை மன்னிக்க
முடியாமல் இருந்தேன்.

ஆனால்...

உன் கூந்தலில் அவை
சிறு குழந்தை போல
மழலை நகையுடன்
துள்ளித் துள்ளி
ஆடியதைப் பார்த்தபின்
என் நம்பிக்கை
மாறியது.

அவை உனக்காகவே
பூத்ததோ, உன் கூந்தலில் ஒரு
நாள் வாழ்ந்தாலே
பிறவி பயன் அடைகிறதோ
என்று தோன்றியது.

அப்போது உணர்ந்தேன்—
பூவும் சாகவில்லை;
அது ஒரு நாள்
உன் அழகின் ஓரமாக
உயிர்த்தெழுந்தது.

அதற்குப் பிறகு...
பூக்களை நான் ரசிக்கத்
தொடங்கினேன்.
உன்னை நினைக்கும்
அளவுக்கு ..

எனவே... பூக்களை
பறிக்காதீர்கள்.
அவை என்னவளின்
கூந்தலைத் தேடி
தவம் போல
காத்திருக்கின்றன.



விட்டு விடுங்கள்...
அவற்றின் வாழ்க்கை
விடியட்டும்; ஒருநாள்
அவள் புன்னகைக்கு
அருகில்
அவை தங்கள் பிறவி
பயனை காணட்டும்.

**ஜனனி அந்தோணி ராஜ்** திருச்சிராப்பள்ளி



### விருட்சம்

உன் புன்னகையை நீ
என்னுள் விதைத்த
வினாடியில்
என்னுள் விருட்சமாக
வளர்ந்து விட்டது
இந்தக் கா த ல்!

### பேச்சு

நாம் கா த லி க் க த்
தொடங்கிய பிறகு
உன் இ த ழ் க ளை விட
வி ழி க ளே
அதிகமாகப் பேசுகிறது!

### ரசனை

பேசிக் கொண்டே
இருக்கிறாய்!
வியந்த வண்ணம் விடாமல்
ரசித்துக் கொண்டே
இருக்கிறது என் கா த ல்!

### படம்

அடிக்கடி உதட்டைச் சுழித்து
முணுமுணுக்கிறாய்!
உன்னை அழகாகவும்
ஆசையாகவும் படம் பிடித்துக்
கொள்கிறது என்
க வி தை க ள்!

### வலை

வலை விரிக்கத்தான்
அடிக்கடி என்னைப்
பார்த்துப் புன்னகைக்கிறாய்!
ஆனால் உன்னைப்பார்த்த
என் முதல் புன்னகையே
கா த லு ட ன் தா ன்!

### அழகு

உன்னை
விரும்பியதால் தான்
என் கா த லு ம்
இத்தனை அழகானது
அன்பே!

### ஆசை

நீ சேலை முந்தானையை
சரி செய்கிறாய்! உன் அழகில்
ஆசையாய்க் குளிக்கத்
தொடங்குகிறது
என் கா த ல் மனம்!

### முத்து

முத்து உதிர்வது போல்
சிரிக்கிறாய் நீ!
உன் சிரிப்பைப் பார்க்கும்
போதெல்லாம் உதிர்ந்து தான்
போகிறேன் இந்த முத்து!

### துடிப்பு

எப்பொழுதும் லப் – டப் என்று
துடித்துக் கொண்டிருக்கும்
என் இ த ய ம் உன்னைப்
பார்க்கும் போதெல்லாம்
மட்டும் லவ் – டப் என்றே
துடிக்கிறது!

### வேட்டை

தொடர்ந்து என்னைப்பார்த்து
வித விதமாகப்
புன்னகைக்கிறாய்!
எனக்குத்தெரிந்து விட்டது
உன் வேட்டை தொடங்கப்
போகிறதென்று!

### வளர்ச்சி

இலங்கைக்குச் சென்று
இராவணனைச் சந்தித்த
அனுமனின் வால்
வளர்ந்து கொண்டே
சென்றதைப் போல் உன்
மீதிருக்கும் என்
கா த லு ம்
வினாடிக்கு வினாடி
வளர்ந்து கொண்டே
செல்கிறது!



**முத்து ஆனந்த்** வேலூர்

கொஞ்சிய வாழ்வில்
கெஞ்சியதெல்லாம்
கிடைத்ததில்லை எஞ்சியதே
எங்களுக்காக மிஞ்சியது.
கிதார் வாசிப்பது போன்று
எளிதானது அல்ல
எங்களை எங்களுக்கே
அடையாளம் தெரியாத
படியான ஆதார் அட்டை
போன்றது எங்கள் வாழ்வு.
முகமிருந்தும்
மறுக்கப்பட்டவர்கள்
இவர்கள் இப்படித் தான் என
லேபிள் குத்தப்பட்டவர்கள்.
எங்களை போன்ற
அடையாளமற்றவர்களின்
டைரிக்குறிப்புகளில்
கண்ணீர் துளிகள் மட்டுமே
சாட்சியங்களாய் இருக்கும்.

பலர் வார்த்தையை
விட்டு விடுகின்றனர்
ஏனோ வலிகளிலிருந்து
இன்னும் மீள முடியவில்லை.
மனித பட்சிகளிடமிருந்து
தூர விலகி அனாதையாக
வாழ பழகிக் கொள்
நரகமான தனிமை கூட
உங்களை புத்தனாக்கலாம்
சில நேரங்களில்
பித்தனாக்கலாம்!

அன்பு கூட வெறுப்பாய் மாறும்
அளவுக் கூடினால்...
எல்லையோடு உள்ள பாசத்தில்
வெட்ட வெளிச்சமாகாது
சுயரூபத்தின் நஞ்சு.
இங்கு மனிதன் மட்டுமல்ல
அவனை இயக்கும் மனசும்
சல்லித்தனமானது!

எனக்கு எப்போதுமே
உன் குழந்தைத்தனத்தை
ரொம்ப,ரொம்பப் பிடிக்கும்
உன் சேட்டைகளையும்,
குறும்புகளையும்
அணு, அணுவாய்
கண் கொட்டாமல்
இரசித்த நாட்களுண்டு.
இப்போதெல்லாம்
நிஜமாகவே குழந்தையாய்
மாறிய உன்னை என்ன
செய்வது?!


எதுவும் இங்கு சரியாக
போவதில்லை ஏமாந்தவன்
இருக்கும் வரை. காயப்பட்டே
பழகிக்கொண்டேன்



முதுகில் குத்தி விட்டு
யாதும் அறியாதது போல்
புன்னகைத்து கொண்டே
போவதற்கு பதில் நெஞ்சை
திறந்து காட்டுகிறேன்
எதிரியாய் எதிரே நின்று குத்தி
விட்டுப்போ விழுப்புண்ணோடு
மரணிக்கிறேன்!

காயப்படுத்த நினைத்த பின்
காரணங்கள் தேடாதே
உங்களுக்கு சிலுவையில்
அறைய ஒரு பலியாடு தேவை
அந்த பலியாடு நானாகவே
இருந்து விட்டு போகிறேன்.
கழுவேற்றியபிறகு
கலங்கப்படுத்த
நினைக்காதீர்கள்.
அவன் நீங்கள் வீசிய
வார்த்தைகளில் எப்போதோ
இறந்து விட்டான்.
இறந்த பிறகாவது அவனை
நிம்மதியாக உறங்கவிடுங்கள்.
ப்ரூடஸ்,எட்டப்பன்,யூதாஸ்
பட்டங்களை வேறு
யாருக்காவது கொடுத்து
மகிழுங்கள். இப்போதாவது
உங்களுக்குள் இருக்கும்
வன்மத்தை இறக்கி
வையுங்கள் நிம்மதியாக
இருங்கள் பெருமூச்சு
விடுங்கள் அவன் நிச்சயமாக
வரமாட்டான் அவன்
இறப்பு நூறு சதவிகிதம்
ஊர்ஜிதமானது. சாட்டை வீசும்
வார்த்தைகளை வேட்டையாட
சேமித்து வையுங்கள் அவனை
போல் இன்னொருவன்
வராமலா போகப் போறான்!

சிறு விதைக்குள்
ஒளிந்திருக்கும்
ஒரு பெருமரம்–
என் சின்னஞ்சிறு
மனசுக்குள்
மறைந்திருக்கும்
உன் மீதான பெருங்காதல்!



சூரியக்காந்தி பூக்களின்
தோட்டத்துக்குள்
நிலவு ஏனடி சென்றாய்.
தேனீக்கள் உன்னை
பார்ப்பதற்கு முன் விரைவாக
திரும்ப வந்து விடு!

பெண்களுடைய கண்கள் பற்றி
கவிதையெழுது என
நண்பன் கோபிநாத்
சொன்னான். பலமுறை
யோசித்தும் எதுவும்
தோன்றாததால் உன்
கண்களை பார்த்தேன்.
உன் கண்படுதலே
ஆசிர்வதிக்கப் பட்டதற்கு
சமம். உன் கண் என்னென்ன
செய்யும் என்பதை அதில்
விழுந்து புண்ணானவனுக்கே
வெளிச்சம்!

என் கண்கள் உன்னையே
பார்த்து, பார்த்து பூத்து
போகும் வரை உனக்கான
பேருந்து இப்போதைக்கு
வரக் கூடாதென
வேண்டிக் கொண்டது
என் வாலிப மனசு!

இரயில் பயணங்கள் எல்லாம்
இன்னும் பேரழகாவது
உன்னோடு பயணிக்கும்
போது மட்டும் தான்!

நீயில்லாமல் போனால்
என்ன செய்வாய் என
என்னிடமே கேட்கிறாய்?
உன்னுடனே இறந்து
போவேனா என்பது எனக்கு
தெரியாது –ஆனால்
என் சுயத்தை தொலைத்து
நானே நானாக இல்லாமல்
போவது உறுதி!

**லி.நௌஷாத் கான்**

### வீடுபேறு

நிலையிலா வாழ்வில் நிம்மதி
வேண்டும் தலையிலா
மெய்யும் தனித்தும்
இயங்குமோவிலையிலா
அன்பில் வாழ்ந்திடச் செய்யும்
கலையில் வல்லமை கனிந்திட
வேண்டும்..

தமிழின் மாண்பில்
தழைத்திடச் செய்யும்
அமிழ்தின் சொல்லில்
அழகியல் கவிதைகள்
சிமிழின் திறப்பாய்ச்
செய்திட வேண்டும்
தமிழின் மேன்மை
தணலிடக் கூடும்



பரிவும் பாசமும் பண்பட
ஒழுகிடல்பிரிவும் துயரும்
பக்குவம் எய்திடல்
நரிசெய் தந்திரம் நானிலம்
ஏற்றிடாத்தெரிவில் சீலமாய்த்
தெளிந்திட வேண்டும்.

உழைப்பும் உண்மையும்
உயர்ந்திடச் சிறப்பாம்
கழையில் கண்டிடும் கவினுறு
இசையாய்
இழைந்திடும் வாழ்வை
இயல்பாயப் பெற்றிட
விழைந்திடும் ஒழுக்கம்
வீடுபேறின் விளைவே.

**ஹரணி,**
தஞ்சாவூர்–2



### ஓட்டும்....வேட்டும்

வேடிக்கையான உலகமடா...
வேதனைகள் நிறைந்த
உலகமடா....

வாழ பொருக்கலியே....
வம்புகள் இல்லாமல் வாழ
முடியலியே....

பக்கத்து
வீட்டுக்காரன்
பகையாளியாய்
இருக்கின்றான்...
எதிர் வீட்டுக்காரன்
எமனாய்
தெரிகின்றான்...



அன்பாய் இருந்தாலும்..
வம்பாய் முடிகிறதே...
வாழ்க்கை என்னும்
வரம்புக்குள்ளே வாழ
பிடிக்கலியே....


நல்லவர்கள் வாழ்ந்த இந்த
பூமியிலே... நாசக்காரன்
வந்தது எப்படியோ...

குடி (சாராயம்) கூடி போச்சு...
குடித்தனம் கெட்டு போச்சு...
நாம் போட்ட ஓட்டு...
நமக்கு நாமே வச்சிகிட்ட
வேட்டு....!!

**பொன்.கருணா**
நவி மும்பை




நம் காதல் கோட்டையைக்
கட்ட முதல் செங்கல்லைத்
தேடுகிறேன்
.. நீ
முதல்
முத்தத்தில்
முந்தி
விடுகிறாய் !



**ரிஷபன்**

### கடலளவு!

பேராசைப் படாதே
பெருங்குழியில் விழாதே
போராட்டம் வேண்டாம்
புதைகுழியில் விழாதே!
ஆர்ப்பாட்டம் வேண்டாம்
அடைதுயரும் வேண்டாம்
சீரழிவும் வேண்டாம்
சுறுசுறுப்பே கொள்வாய்!

இருப்பதுதான் நிற்கும்
இல்லாமை போகும்
திருமைதானே ஓங்கும்
தெளிவுதானே தாங்கும்!
புரிகின்ற செயல்கள்
பூக்கட்டும்
நன்றாய்
விரைவாக
உழைப்பாய்
வீறுடனே
தழைப்பாய்!



**முனைவர் இராம.வேதநாயகம்.**

## அருணாசலேஸ்வர் கோவில் உண்டியல் காணிக்கை



திருவண்ணாமலை அருணாசலேஸ்வர் கோவில் உண்டியல்களை எண்ணியதில் ரூ. 3 கோடியே 47 லட்சத்து 56 ஆயிரத்து 689 காணிக்கை கிடைத்திருந்தது. மேலும், 104 கிராம் தங்கம், 2.690 கிலோ வெள்ளி ஆகியவையும் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தியிருந்தனர் என கோவிலில் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## 25வது தேசிய பாரா நீச்சல் போட்டியில் 3 தங்கப்பதக்கம் வென்ற அவினாசிலிங்கம் பாளையம் மாணவன் சபரி ஆனந்த்துக்கு கலெக்டர் வாழ்த்து



ஐதராபாத்தில் நடந்த 25வது தேசிய பாரா நீச்சல் போட்டியில் 3 தங்கப்பதக்கம் வென்ற அவினாசிலிங்கம் பாளையம் ஒன்றிய நடு நிலைப் பள்ளி மாணவன் சபரி ஆனந்துக்கு திருப்பூர் கலெக்டர் மணீஷ்நாரணவரே வாழ்த்து தெரிவித்தார்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான ஓவிய போட்டி



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட அளவிலான ஓவிய போட்டிகளை கலெக்டர் சிவசவுந்தரவல்லி துவக்கி வைத்து பார்வையிட்டார்.

## எஸ்ஐஆர் பணிகளை கலெக்டர் ஆய்வு செய்தார்



அணைக்கட்டு தொகுதியில் எஸ்ஐஆர் பணிகளை கலெக்டர் சுப்புலட்சுமிஆய்வு செய்தார்.

## விவசாயிகள் நூதன முறையில் பாக்கு தட்டை கையில் ஏந்தி பிச்சை எடுத்து போராட்டம்



வளையப்பட்டி பகுதியில் சிப்காட் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து, நாமக்கல் காந்தி சிலை முன் விவசாயிகள் நூதன முறையில் பாக்கு தட்டை கையில் ஏந்தி பிச்சை எடுத்து போராட்டம் நடத்தினர்.

## மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவி



சிவகங்கை மாவட்டத்தில், கூட்டுறவு வார விழாவில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவிகளை அமைச்சர் பெரிய கருப்பன் வழங்கினார்.

# வாசகர் கடிதம்

முகில் தினகரன் எழுதிய செல்ஃபி மோகம், இராணுவ வீரர்களின் தியாகத்தை மதிக்காவிட்டாலும் வமதிக்கக்கூடாதென உணர்த்தியது.

நலம் தரும் மருத்துவம் பகுதியில் சர்க்கரை நோய் பற்றிப் படித்து பல வருடங்களுக்கு முன் கேட்ட, படித்த 2 செய்திகள் என் நினைவிற்கு வந்தது

1. வானொலியில் கேட்டது :

"கஞ்சியை " சர்க்கரை நோயாளிகள் உணவிற்கு இடையே அருந்தலாமே ஒழிய அதையே உணவாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

2 கல்கி வார இதழில் படித்தது :

அம்மா- அப்பா இருவரில் யாரேனும் ஒருவருக்கு சர்க்கரை நோய் இருந்தால் உங்களுக்கு 70 சதவிகிதமும் இருவருக்குமே இந்நோய் இருந்தால் 100 சதவிகிதம் வருமாம்.



-ஸ்ரீகாந்த்
திருச்சி

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
tamilnaduepaper@gmail.com
தமிழகம் முழுவதும் மாவட்டம் தாலுக்கா வாரியாக
தேவை
நிருபர்கள்
புகைப்படக் கலைஞர்கள்
ஏஜெண்டுகள்
Call: 9337501889

மசோதாவை கிடப்பில் போட கவர்னருக்கு அதிகாரமில்லை#சுப்ரீம் கோர்ட்டு அதிரடி தீர்ப்பு
டாடா டெக்னாலஜீஸ் நிறுவனத்துடன் ரூ 2590 கோடியில் ஒப்பந்தம் கையெழுத்து#முதல்வர் ஸ்டாலின்
முட்டை விலை திடீர் ஏற்றத்திற்கு காரணம் என்ன?
ஆளும் கட்சிக்கும் ஆண்ட கட்சிக்கும் சவால் விடும் தேமுதிக#பிரேமலதா பிரகடனம்
பிளச் டி மாணவர்களின் செயல்முறை விளக்கத்தில் தமிழக ஆளுநர் பங்கேற்க வேண்டும்#அமைச்சர் அன்பில் மகேஸ்
அடுத்த ஆண்டு ஜூனில் கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டம் கொண்டு வரப்படுவது உறுதி#நயினார் நாகேந்திரன்=மெட்ரோ ரயில் திட்டம் பிரதமரிடம் ஈபிஎஸ் கோரிக்கை மனு
ரூஃப் டாப் சூரிய ஒளி மின் உற்பத்திக்கு தமிழகத்தில் மட்டும் நெட்வொர்க் கட்டணம் வசூலிப்பதால் பாதிப்பு
இன்று முதல் 6 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பு#வானிலை ஆய்வு மையம் தகவல்
புதுக் கவிதைகள் அபாரம் நூல் விமர்சனம் தூள் வாசகர் கடிதங்கள் பிரமாதம்
திமுக ஆட்சியில் தமிழக தொழில் துறை உன்னத வளர்ச்சி#அமைச்சர் டிஆர்பி ராஜா கருத்து
மெட்ரோ ரயில் திட்டம் ஆடம்பரமல்ல; அவசியம்#அமைச்சர் தங்கம் தென்னரசு
சென்னை: நிலம் கையகப்படுத்தியதில் பல கோடி ரூபாய் மோசடி#15 இடங்களில் அமலாக்கத் துறை சோதனை
சட்டவிரோத குவாரி நடத்துவோர் மீது குற்றவியல் நடவடிக்கை#மதுரை உயர்நீதி மன்றம் உத்தரவு
போலி ஆவணம் மூலம் 2 கோடி நிலம் அபகரிப்பு#சென்னையில் இரு சகோதரிகள் கைது
ஆவடி: பெண் மருத்துவர் தற்கொலை வழக்கில் மருத்துவ விஞ்ஞானியான கணவர் கைது
அமெரிக்க வரிகளால் ஏற்றுமதி சரிவு: நாட்டின் வர்த்தகம் பற்றாக்குறை 3.47 லட்சம் கோடியாக சரிந்தது
இந்தியா பாகிஸ்தான் சண்டையை நிறுத்தியதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறுபது முறை கூறிவிட்டார்#காங்கிரஸ் கிண்டல்
உலகக் கோப்பைக்கு தகுதி பெற்ற நாடு 1.50 லட்சம் மக்கள் தொகை கொண்ட மிகச் சிறிய நாடு
ஜி-20 உச்சி மாநாடு#பிரதமர் மோடி இன்று தென்னாப்பிரிக்கா பயணம்
உலகக் கோப்பை குத்துச் சண்டை #இந்திய வீராங்கனை இறுதிப் போட்டிக்கு முன்னேற்றம்
கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை நிராகரித்தது ஏன்#மத்திய அரசு விளக்கம்
மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்கும் விவகாரம்#சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்புக்கு திமுக வரவேற்பு
வெறி நாய் கடித்து இறந்த பசுமாட்டின் பாலைக் குடித்த கிராமத்தினருக்கு ரேபீஸ் தடுப்பூசி



-பி.சுரேகா
சென்னை

We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
- Minimum 5 years of experience in print media ad sales
- Proven experience in space selling
- Strong background in field sales and client acquisition
- Excellent communication and negotiation skills
- If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfollo to
padmamediapublications@gmail.com
Call: 9337501889

வணக்கம்.
21.11.25 அன்று தமிழ்நாடு இ பேப்பரில் முதல் பக்கத்தில் பதிவு மசோதாவில் கிடப்பில் போட கவர்னர் அவர்களுக்கு அதிகாரம் இல்லை என்ற சுப்ரீம் கோர்ட் அதிரடி தீர்ப்பை படித்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இது போன்ற நல்ல தகவல்களை முதல் பக்கத்தில் படிக்கும் போது ஆர்வமுடன் படிக்க வைக்கிறது. இன்றைய பஞ்சாங்கம் மிக நல்ல நாளாக அமைய எனக்கு உதவியது பாராட்டுக்கள்.
திருக்குறளை அதன் பொருளுடன் படித்து மகிழ்ந்தேன்.
கார்த்திகை மாத அமாவாசை முன்னிட்டு சிறப்பு அலங்காரத்தில் இருந்த பொள்ளாச்சி அம்மன் வாசவியை பார்த்ததும் மனநிறைவு வந்தது. பாராட்டுக்கள்.
நலம் தரும் மருத்துவம் பகுதியில் உணவே மருந்து என்று நாம் சாப்பிடும் உணவை பற்றி மிக அற்புதமாக சொன்னது பாராட்டுக்குரியது.
பிறக்கவிருக்கும் அடுத்த ஆண்டில் ஜூன் மாதத்தில் கோவை மதுரை மெட்ரோ ரயில் திட்டம் என்று நயினார் நாகேந்திரன் அவர்கள் உறுதிமொழி அளித்தது மிகவும் அற்புதமான தகவல் பாராட்டுக்கள்.
தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் தோண்டியா வாக் அவர்களின் வரலாறும் அந்த கருப்பு வெள்ளை புகைப்படமும் நல்ல நல்ல தகவல்களை மிக அற்புதமாக சொன்னது பாராட்டுக்குரியது.
பல்சுவை களஞ்சியம் பகுதியில் வந்த ராவ் பகதூர் தி. மா. ஜம்புலிங்கம் முதலியார் அவர்களைப் பற்றிய தகவல் மிகவும் அருமை. ஜோக்ஸ் மிகவும் அற்புதமாக இருந்ததால் படித்து சிரித்தேன்.
தெய்வீக அருள் தரும் ஆன்மிகம் என்ற பக்கத்தில் வந்த புலி மீது அமர்ந்த ஐயப்பனை பார்த்தவுடன் உடல் புல்லரித்து. சுவாமியே சரணம் ஐயப்பா என்று மகிழ்ச்சியுடன் சொன்னேன்.
நல்ல அற்புதமான தகவல்களை ஆன்மிக தகவல்களாக கொடுத்து பக்தியை அதிகரிக்கச் செய்யும் தங்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.
மத்திய அரசை கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நடந்த ஆர்ப்பாட்டம் என்ற தகவல் அரசியலை நன்றாக படம் பிடித்து காட்டியது.
சுற்றுலா செல்லும்போது மலைகளில் ரயிலில் பயணம் செய்தால் மிகவும் அற்புதமாக இருக்கும். சுற்றுலா பக்கத்தில் வந்த இந்தியாவில் அழகிய மலைப்பாதை ரயில்கள் என்று பட்டியலிட்டு சொன்னது மிகவும் அற்புதமான நல்ல பயனுள்ள தகவல் பாராட்டுக்கள்.
இன்று இந்தியா சர்வதேச திரைப்பட விழா 2025 வரலாற்று சிறப்புமிக்க பிரம்மாண்ட அணிவகுப்புடன் கேரளாவில் தொடங்கியது என்ற செய்தி என்னை கேரளாவுக்கே அழைத்துச் சென்றது.
கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை நிராகரித்தது ஏன் என்று மத்திய அரசு விளக்கம் சொன்னது அதில் உள்ள சந்தேகங்களை போக்கும் விதமாக அருமையான தகவலாக இருந்தது பாராட்டுக்கள்.
குடியிருப்பு கட்டிடங்களை குறிவைத்து தாக்கியதால் ரஷ்யாவில் நடந்த இந்த தாக்குதல் மூன்று குழந்தைகள் உட்பட 25 பேர் பலி என்று அதிர்ச்சியான செய்தி படிக்க வைத்தது. சீனாவில் ஜப்பான் கடல் உணவுக்கு தடை என்ற செய்தியும் அயல் நாட்டு செய்தியாக எண்ணி அங்கு நடப்பதை புரிந்து கொண்டு படிக்க முடிந்தது.
வெள்ளிக்கிழமை வெற்றியுடன் தொடங்க நல்ல அருமையான தகவல்களை எங்களுடைய அலைபேசியில் விடியலிலேயே வழங்க அருமையான பணியினை செய்யும் தமிழா இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.




-உஷா முத்துராமன்




Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 – Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

ADVERTISE WITH US!

Get Free Jobs Alert on Your WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


LOCATION - CHENNAI
WE ARE HIRING
TELECALLERS
VACANCIES - 50
QUALIFICATION - ANY DEGREE
FRESHERS ALSO CAN APPLY
TELECALLING EXPERIENCE IS PREFERABLE
9337501889
7789941009
qknewstv@gmail.com



PRODUCT PROMOTION
Rs.100 Only
5000+ Views
FB, INSTA, WEBSITE
Whatsapp
8122798599
vilambaram.com
விளம்பரம்


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
வழங்கும்
2026 மாத காலண்டர்
தெய்வீகப் படங்களுடன்
3 காலண்டர் 100 ரூபாய்
அனைத்து இல்லங்களிலும் இருக்கவேண்டிய அற்புத காலண்டர்
இது காலண்டர் அல்ல
மினி பஞ்சாங்கம்
Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar Chennai 600081
தொடர்பு கொள்ளவும்
9337501889


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய்
மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு
பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட
தன்னார்வலர்கள் (freelancer)
அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற,
மக்கள் தொடர்பு அதிகம் உள்ள
பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள்,
தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


MLM PERFECT
LIMITED OFFER HURRY UP!
Cryptocurrency
MLM Software
Development
RS.19999/-
Onetime, No hidden cost
Contact Us
Visite Our Website
www.mlmperfect.com
Call US
9853719337,7436914247


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756


WANTED
STORE HELPER
Boys only
Fresher / Experience
Venus Sorting Technologies Pvt Ltd
Ganapathy, Coimbatore
Ph: 97919 60482
E-Mail ID: hr@vvhitechhoses.in



CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


PADMA MEDIA HOUSE
Best Newspaper Advertising Agency
Matrimonial
Property
Recruitment
Business
Announcements
Obituary
Public Notices
Education
CONTACT : +91 81227 98599


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009


PADMA MEDIA HOUSE
BOOK NEWSPAPER ADS IN
Recruitment
Public Notice
Property
Business
Matrimony
Education
CONTACT : +91 81227 98599
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
ஆனந்த பாஸ்கர்
பேப்பர்பாய்
ADVERTISE WITH US!
Whatsapp 81228 36299


WORK FROM HOME
Extra Income
Part Time
Full Time
AN OPPORTUNITY THAT ROCKS!!!
BE YOUR OWN BOSS
Work 1-4 Hours / Day
Training / Support Provided
No Experience / No Qualification
Who Can Work - 18 Years & Above
Housewives
Retired Persons
Students
Professionals
Businessman
Employees
9337501889
7789941009

CREST THE BEST @ ANAKAPUTHUR
SPOT BOOKING OFFERS

1 BHK FLAT ₹.22.99 L*
2 BHK FLAT ₹.38.50 L*
3 BHK FLAT ₹.56.99 L*
Onwards
visit our site www.crest.homes
CREST HOMES PVT LTD
Elegant Affordable...
89399 65050

NR MAHINDRA WORLD CITY NXT TO VIKAS MANTRA SCHOOL
DTCP & RERA அங்கீகாரம் பெற்ற புதிய லேஅவுட் மனைகள்
1200-2400 சதுர அடி விற்பனைக்கு
ANUGRAHA
CONTACT 90477 34343

GPHOMES
NEXT TO PATTABIRAM (TIDEL PARK) NEAR SEVVAPET RLY. STN.,
DTCP APPROVED VILLA PLOTS ₹30* Lakhs onwards
INDIVIDUAL HOUSE ₹13.5* Lakhs onwards
MOGAPPAIR 2.0
NEAR AYANAMBAKKAM VELAMMAL SCHOOL
3 BHK INDIVIDUAL HOME
₹1.20* Cr.
6384 003 003


Launch Your Own Secure Crypto MLM Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com

பூமி விற்பனைக்கு
கள்ளப்பாளையம் பஸ் ஸ்டாப் அருகில்
3½ ஏக்கர்
ரெசிடென்சியல் பூமி விற்பனைக்கு
தொடர்புக்கு:
99434 53815
97863 99079

SITE FOR SALE
40X60
SOUTH FACING
40 FEET ROAD
AERIAL VIEW PROPERTY SOLUTION
PRR NAGAR
BEHIND-BIMETAL BEARINGS
P.N.PUDUR
COIMBATORE-641041
78717 63629

குடோன் வாடகைக்கு விடப்படும்
கோவை வடவள்ளி
IOB காலனியில்
3614 sq.ft with EB Service 150HP
CT: 88708 68595

GODOWN FOR RENT
NEW GRADE-A WAREHOUSE
20,000 sqft
Location: Salem
✤ 12th KM Salem - Chennai NH
✤ Ample Truck Parking
Dock Leveller
72000 51508

நிலம் விற்பனை
சேரன்மஹாதேவி அருகில், திருநெல்வேலி மாவட்டத்தில்,
30 ஏக்கர் நிலம் விற்பனைக்கு
Good Water, Clear Title
நியாயமான விலை
Rs.13 Lacs per ஏக்கர்
74832 05910

ADMIN EXECUTIVE
Salary: 18K to 20K
Experienced system knowledge
BILLING EXECUTIVE
Salary: 18K to 20K
Any / Preferred B.Pharm, D.Pharm
MARKETING EXECUTIVE
Salary: 30K to 35K
(Monthly. Inc + Allow) Min 3yrs Exp
Shri Kalki Speciality's (P) Ltd.,
D.No. 4/22, Ramakrishna St, T.Nagar.
Ph: 8925266127 / 8925713334

WANTED
FOUNDRY SUPERVISOR
SENIOR ACCOUNTANT
ACCOUNTS ASSISTANT
Sathy Road, Kovilpalayam
88700-04951 / 52

WANTED
Receptionist
FOR DENTAL CLINIC
(FEMALE CANDIDATE)
94432 43070
Peelamedu, Coimbatore

WANTED
○ Marketing / Sales Manager & Executives
○ Service Manager & Supervisor
○ Telecaller / CRO (F)
○ Store incharge(M)
SWASTIK REFRIGERATION TRADERSS
Airconditioner Spare parts Distributors
Kodambakkam & Porur
98410 42122

WANTED
Tour Marketing Executive
For reputed engineering company in Porur.
Location: South India (extensive travel)
Experience: 1-3 years in marketing/sales, preferably engineering sector. Good communication in English, telugu and hindi.
Send CV to: [workenquiry971@gmail.com]
CALL @ 89258 18582

PERMANENT JOB
➤ Plumbers ( பிளம்பர்கள் )
➤ Water Purification Service Technicians
MNC COMPANY
9003101308

WANTED
FEMALE / MALE STAFF
For Office at RS Puram
1. ADMIN / ADMIN ASSISTANT
2. ACCOUNTANT
3. OFFICE BOY
Min 3yrs Experience
email: haasyacom@gmail.com
93622 22222

WANTED
MARKETING HEAD REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
30 years old reputed engineering & manufacturing company requires
Mechanical CADD Draftsman
(DME - Exp : 2-3 Years only)
Office Assistant (Female Candidates only)
with computer knowledge & Tally
(Exp 1-2 years) for office @ valasaravakkam
Apply by mail vintechchennai@yahoo.co.in
*Preferences given to nearby candidates

REQUIRED
Bank & Finance
LOAN CONSULTANCY
TELECALLER (F)
Age Below 30 | Fresh/Exp 2Yrs
Qual: +2 or Any Degree
Sal: 12 to 18K + Inc
West CIT Nagar, T.Nagar-35.
ct: 97907 88886

RENTAL COMMERCIAL @ ROYAPURAM
No.247, Suryanarayana Chetty St, Royapuram, Ch-13
1st Floor 2830 Sq.ft, Lift Car Parking
Rent for Office, Bank, Etc.,
Ct: 94440 46328

Industrial / Warehouse FOR RENT
@ Malumichampatti, CBE
Brand New
18,000 sq.ft Buid up Area ✦ 34 feet center height ✦ Bore well with 10,000 Lts Sump ✦ Car parking ✦ Security, Power & Rest room ✦ Compound
99439 11012
93447 20747


கடை வாடகைக்கு
கோவை
பா.நா.பாளையம்
லட்சுமி மில்ஸ் அருகில்
● 60 அடி ரோட்டின் மேல்
● 1800 சதுரஅடி
● தரைத்தளத்தில்
● தண்ணீர் வசதியுடன்
Suitable for:
IT Office, Clinic, Laundry, Cloud Kitchen
CONTACT
+ 91 99650 90000

இடம் விற்பனைக்கு
கோவை சத்தி ரோடு
குன்னத்தூர் CRI Pump அருகில்
வடக்கு கிழக்கு பார்த்த கார்னர் சைட்
14.5 சென்ட்
இடம் விற்பனைக்கு.
பிரித்தும் வீடு கட்டி தரப்படும்.
97863-43827

அலுவலக இடம் வாடகைக்கு
நாகர்கோவிலில் 3500 சதுர அடி அலுவலகம் நடத்த வசதியான இடம் வாடகைக்கு உள்ளது.
2 கார் மற்றும் 20 இருசக்கர வாகனங்கள் பார்க்கிங் செய்யும் இட வசதி.
தொடர்புக்கு:
9841062644



# பல்சுவை களஞ்சியம்




## காதலின் இலக்கணம் அன்றில் பறவை



மனிதனின் மிக மெல்லிய உணர்வுகளில் காதலும் ஒன்று. இந்த உலகம் இன்னும் உயிர்ப்புடன் இருப்பதற்கு காதல் எனும் காந்தம் இன்னும் கரைந்து விடாமல் காற்றோடு கலந்திருப்பதும் ஒரு முக்கிய காரணம் என்றே சொல்லலாம். பொதுவாகவே காதலுக்கு எடுத்துக்காட்டாக பறவைகளை சொல்லும் போது புறாக்கள், லவ் பேர்ட்ஸ் இவற்றை மட்டுமே சொல்வோம். ஆனால் அதையும் தாண்டி காதலுக்கு, காதலின் இலக்கணத்துக்கு ஒரு மிகப்பெரிய உதாரணமாய் போற்றக்கூடிய பறவை என்றால் அது அன்றில் பறவையை தான் சொல்ல வேண்டும்.

நம்முடைய சங்க கால தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்ற இந்த அன்றில் பறவை காதலுக்கு ஒரு மிகச்சிறந்த இலக்கணமாய் திகழ்ந்தது. இதற்கு அத்தகைய வியக்க தகுந்த குண நலன்கள் உள்ளன.

இன்று காதல் திருமணத்தால் இணைந்த பல மனங்கள் இறுதிவரை அந்த காதலை உயிர்ப்புடன் வைத்திருப்பதில்லை. ஆனால் தன்னுடைய காதலை இறுதி வரை உயிர்ப்புடன் வைத்திருப்பதற்கு இத்தகைய அன்றில் பறவைகளே சாட்சி. அதனால்தான் நம் சங்க கால கவிஞர்கள் இதனை பல்வேறு விதமாக போற்றிப் பாடியுள்ளனர்.

அன்றில் பறவை தனது துணையுடன் ஒரு முறை இணை சேர்ந்து விட்டால் அதன்பின் வாழ்நாளில் எந்த பறவையுடனும் இணை சேராது. ஏதேனும் சந்தர்ப்பவசத்தால் தனது துணையை இழந்து விட்டால் உடனே அந்தப் பறவையும் கூடவே இறந்து விடும். இத்தகைய சிறப்பு வாய்ந்த அன்றில் பறவையானது தமிழ் இலக்கியங்களில் நளவெண்பா, குறுந்தொகை போன்ற நூல்களில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

அன்றில் பறவைக்கு உரிய சிறப்பு என்னவென்றால் இந்த பறவையானது சூழலுக்கு தகுந்தாற்போல் ஒலி எழுப்பும் தன்மை கொண்டது. இரை தேடும் போது தன்னுடைய துணையை தொலைத்து விட்டால் துணையைத் தேடுவதற்காக ஒரு வித ஓசையை எழுப்பும். இத்தகைய ஓசையை அகவல் என்று அழைப்பர். தன்னுடைய இணையுடன் சேரும்போது ஒரு விதமான ஓசையை எழுப்பும். இத்தகைய ஓசையை உளறல் என்பர். பெண் பறவை கருவுற்று இருக்கும்போது ஒருவித ஓசையை எழுப்பும். இத்தகைய ஓசையை நரலல் என்று அழைப்பர். இப்படி தன்னுடைய ஒவ்வொரு சூழலையும் வேறுபடுத்தி காட்டுவதற்கு பல்வேறு விதமான ஒலிகளை எழுப்பும் குணநலன்களை உடையது அன்றில் பறவை.

அன்றில் பறவையானது ஒரு வகை நீர்ப்பறவை ஆகும். கடலும் கடல் சார்ந்த இடங்களிலும் இந்த வகை பறவையானது அதிகமாக காணப்படும். சின்ன சின்ன மீன்கள், தவளை, புழுக்களை உணவாக உட்கொள்ளும். இது மரக்கிளைகளில் கூடு கட்டி இருக்கும் கொக்குகளோடு சேர்ந்தே முட்டையிடும்.

தமிழ்நாட்டில் கோடியக்கரை பகுதிகளில் அதிகமான அன்றில் பறவைகள் வாழ்ந்ததாக செய்திகள் கூறுகின்றன. இந்த அன்றில் பறவைக்கு பனங்கிளி, அரிவாள் மூக்கன் என்று வேறு பல பெயர்களும் உண்டு.

தான் எழுப்பும் குரல்களுக்கு ஏற்ப பல்வேறு விதமான சைகைகள் இருப்பது போலவே உடல் அமைப்பிலும் பல வேறுபாடுகளை கொண்டிருப்பவை இப்பறவைகள். பருவம் வந்த அன்றில் பறவைகள் செந்நிற உடலும் கரும்பச்சை இறக்கைகளையும் கொண்டிருக்கும். பருவம் வராத அன்றில் பறவைகள் பழுப்பு நிறத்தில் காணப்படும். இப்பறவைகள் பெரும்பாலும் கூட்டமாகவே வாழும். பறக்கும் போதும் வரிசையாகவே பறக்கும் இயல்பினை உடையவை.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அன்றில் பறவைகளை காதலின் சின்னமாக போற்றி புகழாத கவிஞர்களே இல்லை என்று சொல்லலாம். சங்க காலம் தொடங்கி இன்றைய நவீன கவிஞர்கள் வரை இந்த அன்றில் பறவையை தன்னுடைய பாடலில் சேர்த்து காதலினை மேன்மைப்படுத்தியுள்ளனர்.

திரிசூலம் படத்தில் கவிஞர் கண்ணதாசனும், ( ஆனந்தம் விளையாடும் வீடு என்ற பாடல்) சிறையில் பூத்த சின்ன மலர் படத்தில் கவிஞர் வாலியும், ஜீன்ஸ் படத்தில் கவிஞர் வைரமுத்துவும், பச்சைக்கிளி முத்துச்சரம் படத்தில் கவிஞர் தாமரையும், தாம் தூம் படத்தில் கவிஞர் நா. முத்துக்குமாரும் அன்றில் பறவையை காதலின் சின்னமாக வர்ணித்து தம்முடைய எழுத்துக்களால் போற்றி புகழ்ந்துள்ளனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அன்றில் பறவைகளின் எண்ணிக்கை இன்றைய காலகட்டங்களில் வெகுவாக குறைந்து வருகிறது. மாறிவரும் சூழலுக்கு ஏற்ப இயற்கையோடு சேர்த்து இத்தகைய பறவைகளையும் காப்பாற்ற வேண்டும் என்பது இயற்கை ஆர்வலர்களின் வேண்டுகோளாக உள்ளது.

## மீம்ஸ்







## 50 வயதைக் கடந்து 60 நோக்கி

50 வயதைக் கடந்து 60 நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஒருவரிடம் 'உங்களிடம் என்ன மாற்றங்களை உணர்கிறீர்கள் ?' என்று கேட்டேன். அவர் அனுப்பிய பதில் இதோ :

1) என் பெற்றோரை, என் உடன் பிறந்தவர்களை, என் மனைவியை, என் குழந்தைகளை, என் தோழர்களை நேசித்த பிறகு, இப்போது என்னை நேசிக்கத் துவங்கி உள்ளேன்.

2) நான் 'உலக வரைபடம்' அல்ல என்று உணர்ந்து கொண்டுள்ளேன். இந்த உலகத்தை என் தோள்களில் சுமப்பதில்லை.

3) காய்கறி விற்கும் தங்கச்சியிடம், பழம் விற்கும் தம்பியிடம் பேரம் பேசுவதை நிறுத்தி விட்டேன். பத்து ரூபாய் அதிகமாகக் கொடுத்து விட்டேனே என்று மண்டையை உடைத்துக் கொள்வதில்லை. அவர்கள் மகள்களின் படிப்புச் செலவுக்கு சேமிக்க இது உதவட்டுமே.

4) உணவகங்களில் கூடுதலாக டிப்ஸ் தருகிறேன். அன்றாட வாழ்க்கையை நடத்த, என்னை விட அதிகமாகப் போராடும் சர்வர் முகம் மலரலாம்.

5) 'எத்தனை தடவை இந்தக் கதையைச் சொல்லுவீங்க' என்று இப்போதெல்லாம் முதியவர்களிடம் சொல்வதில்லை. அவர்கள் இந்தக் கதைகளால், தமது பழைய நினைவுகளை அசை போடுகிறார்கள்; கடந்த காலத்திலிருந்து விடுபடுகிறார்கள்.

6) சில நேரங்களில் பிறர் சொல்வது தவறு என்று தெரிந்தாலும், அவர்களைத் திருத்தாமலிருக்கக் கற்றுக் கொண்டேன். எல்லோரையும் திருத்தும் பொறுப்பு என்னுடையது அல்ல. எல்லோரும் சரியாக இருக்க வேண்டும் என்பதை விட என் மன அமைதி எனக்கு முக்கியம்.

7) பெருந்தன்மையுடன், தாராளமாகப் பாராட்டுகிறேன். இது, பாராட்டுப் பெறுபவருக்கு மட்டுமல்ல, என்னுடைய மனதுக்கும் மகிழ்ச்சி அளிக்கிறது. சின்ன ஆலோசனை - ஒருவர் உங்களைப் பாராட்டும்போது, ஒருபோதும் மறுக்காதீர்கள், நன்றி சொல்லி முழுமையாக ஏற்றுக் கொள்ளுங்கள்

8) என்னுடைய ஆடையில் எண்ணெய்க் கறை பட்டு விட்டால் அலட்டிக் கொள்வதில்லை. தோற்றத்தை விட ஆளுமைதான் உரக்கப் பேசுகிறது.

9) என்னுடைய மதிப்பை உணராதவர்களிடம் இருந்து விலகிப் போகிறேன். அவர்கள் என் மதிப்பை அறியாமல் இருக்கலாம், நான் அறிவேன்.

10) யாராவது பந்தயத்தில் என்னை முந்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டு, மோசமாகச் செயல் பட்டாலும் நான் நிதானமாகவே இருக்கிறேன். நான் பந்தயத்தில் இல்லை. என் வாழ்க்கையை வாழ்கிறேன்.



11) என் உணர்வுகளை எண்ணி சங்கடப்படாமல் இருக்கக் கற்றுக் கொள்கிறேன். என்னை மனுசனாக்குபவை என் உணர்வுகள் மட்டும்தான்.

12) ஒரு உறவை முறித்துக் கொள்வதை விட, ஈகோ-வை விட்டு விடுவது நல்லது என்று அறிந்து கொண்டுள்ளேன். என் ஈகோ என்னைத் தனிமைப்படுத்தும்; உறவுகளால் நான் தனிமைப்பட்டுப் போக மாட்டேன்.

13) ஒவ்வொரு நாளையும், இறுதி நாளைப் போல வாழக் கற்றுக் கொண்டுள்ளேன். இது கடைசி நாளாகவும் இருக்கலாம்.

14) என்னை மகிழ்ச்சியாக வைத்திருப்பவற்றைச் செய்து கொண்டிருக்கிறேன். என்னுடைய சந்தோசத்திற்கு நான்தான் பொறுப்பு. மகிழ்ச்சி என்பது ஒரு தேர்வு. அதைத் தேர்ந்தெடுத்து எந்த நேரத்திலும் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

- *இப்பதிவில் சொன்ன பதில் எல்லா வயதினருக்கும் பொருத்தமானது என்று நினைக்கிறேன், இதைச் செயல்படுத்த 50, 60, 70 வயது வரை காத்திருக்க வேண்டுமா என்ன ? சிந்திப்போம்...




| | |
|---|---|
| கோழி ஏன் முட்டை போடுது? | ஏன்னா அதுக்கு ஒன்னு ரெண்டு மூணு போட தெரியாது சார். |
| கண்ணகி மதுரையை இழுத்தால் இது எந்த காலம்? | பயர் சர்வீஸ் இல்லாத காலம் சார். |
| வெற்றிலையுடன் சேராத பாக்கு எது? | மைசூர் பார்க்க. |
| நாம் எந்த எழுத்தை எழுத முடியாது? | நம் தலையெழுத்தை. |
| பத்து யானையில் 9 யானை பேருந்தில் ஏறிவிட்டனர் ஒரு யானை மட்டும் அந்த பேருந்தில் ஏற முடியவில்லை ஏன்? | அது ஆண் யானை வந்ததோ லேடீஸ் பஸ். |



## ஜோக்ஸ்



"தலைவர் ரொம்ப விளம்பர பிரியர்னு எப்படி சொல்றே?"

"தன்னோட கால் காயத்துக்கு கட்டின பேன்டேஜை ஓப்பன் செய்ய, ரிப்பன் வெட்டி விழா எடுக்கனும்னு அடம் பிடிக்கிறாரே !"

-----------------------------

--------------



"கட்சியை கலைச்சா நாலு பேர் நாலுவிதமா பேசுவாங்கன்னு தலைவர் சொல்றாரே...அதுக்கு என்ன அர்த்தம்?"

"கட்சியில் நாலு பேர்தான் மிஞ்சியிருக்காங்கன்னு அர்த்தம் !".

-----------------------------

--------------

"பேஷன்டை எதிரே வச்சுக்கிட்டு டாக்டர் எதற்கு நர்ஸ கையை பிடிச்சு இழுக்கறார்?"

"அவங்க கையில்தான் மருந்து பெயர்களை எழுதி வச்சுருக்கார்..அதை பார்த்துதான் மருந்து சீட்டு எழுதுவார் !"



-----------------------------

--------------

"பேஷன்ட் டிஸசார்ஜ் ஆகும் சமயத்தில், நர்ஸ் கிளிசரின் போட்டுக்கிட்டு அழுவது, ஆஸ்பத்திரியின் வியாபார தந்திரமா...எப்படி?"

"நர்ஸ கண் கலங்கறாங்கன்னு, பேஷன்ட் மேலும் கொஞ்ச நாள் தங்குவதற்கு முடிவு செய்துடுவாரே !"

-----------------------------



--------------

"உங்க வீட்டில் அடிக்கடி மேள தாளம் சத்தம் கேட்குதே...அடிக்கடி விசேஷமா?"

"ஹூம்...அடிக்கடி மாமியார் நாட்டுப்பெண் சண்டை நடக்கும்...அந்த சத்தம் வெளியே கேட்க கூடாதுன்னுட்டுதான் இந்த ஏற்பாடு !"

எஸ்.ராமன்
T.Nagar,
Chennai

-----------------------------

--------------



கல்யாண வீட்டுக்கு ஏன் மாட்டையும் கன்றுக்குட்டியையும் கூட்டிட்டு வரமாட்றாங்க?

ஏன்னா கல்யாணம் ஒரு ஆயிரம் காலத்து பயிர், மாடும் கன்றுக்குட்டியும் அத மேஞ்சிடும்

-----------------------------

--------------

இரண்டு பேர் ஒரு Hotel-க்கு போய் ஆலுக்கு நாலு நாலு இட்லி order பன்றாங்க இந்த இட்லிய சாப்பிட்டதும் Food poison ஆகிடுச்சு ஏன்›

ஏன்னா அது நாலு நாள் இட்லி

-----------------------------

--------------

ஒரு பையன் அவனோட 500 ரூபாய் நோட்டையும், 2000 ரூபாய் நோட்டையும் சாக்கடையில போட்டுடான் first எதை எடுப்பான்?

விடை: அவன் First வாந்தி எடுப்பான்.

# வாழ்வு தரும் ஆரோக்கியம்




## கோடீஸ்வரன்...



குடிசை..!
விறகு..!
அடுப்பு..!
நாட்டுக்கோழி..!
ஆடு..!
நாட்டுமாடு..!
மாட்டுவண்டி..!

தோட்டம்..!
வயல்..!
விவசாயம்..!
இவை அனைத்தும்
இருந்தால் நீங்களும்
கோடீஸ்வரனே...!

## தைராய்டு அளவு குறைவாக இருப்பவர்கள் சாப்பிட வேண்டிய உணவுகள்



மருத்துவ ரீதியாக தைராய்டு ஹார்மோன் குறைபாடு 'ஹைப்போ தைராய்டிசம்' எனப்படும். மனிதனின் கழுத்தில் உள்ள பட்டாம் பூச்சி வடிவ தைராய்டு சுரப்பியில் தைராய்டு ஹார்மோன் உற்பத்தி ஆகிறது. உடல் தனக்கு கிடைக்கும் ஆற்றலை பயன்படுத்தி கொள்வதற்கும், வளர்சிதை மாற்றத்திற்கும் இது உதவுகிறது. தைராய்டு சுரப்பி குறைபாடு (ஹைப்போ தைராய்டிசம்) இந்தியாவில் 10 பேரில் ஒருவருக்கு இருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இது ஆண்களை விட பெண்களிடையே அதிகம் காணப்படுகிறது.

**தைராய்டு சுரப்பி குறைபாடு உள்ளவர்கள் சாப்பிட கூடாத உணவுகள்**

முட்டைக்கோஸ், காலிபிளவர், புரோக்கோலி மற்றும் முள்ளங்கி. இதில் உள்ள காயிட்ரோஜன் தைராய்டு சுரப்பி உற்பத்தியை குறைக்கிறது. சோயாபீன்ஸ், சோயா பால், டோபு. இவற்றில் உள்ள காயிட்ரோஜன் மற்றும் பைட்டோ ஈஸ்ட்ரோஜன் தைராய்டு செயல்பாட்டை தடுக்கிறது. பதப்படுத்தப்பட்ட இறைச்சிகள் அல்லது உணவுகள், எண்ணெயில் பொரித்த உணவுகள், துரித உணவுகள், பாட்டில் குளிர்பானங்கள், காபி (இது தைராய்டு மாத்திரைகள் உட்கொண்ட பின்னர், அவை வயிற்றில் இருந்து ரத்தத்தில் உறிஞ்சப்படுவதை தடுத்து அதன் செயல்பாட்டை குறைக்கிறது), மது பானங்கள், செயற்கை இனிப்பூட்டிகள்.

**தைராய்டு சுரப்பி குறைபாடு உள்ளவர்கள் சாப்பிட வேண்டிய உணவுகள்**

உணவில் அயோடின் கலந்த உப்பு பயன்படுத்த வேண்டும். மீன், இறால், பால் பொருட்கள், முட்டை, செலீனியம் நிறைந்த உணவுகள் (கடல் உணவுகள், கோழி, காளான், பூண்டு), ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் நிறைந்த உணவுகள் (சால்மன், மத்தி, கானாங்கெளுத்தி போன்ற மீன்கள், ஆளி விதைகள், அக்ரூட்), முழு தானியங்கள் (பழுப்பு அரிசி, ஓட்ஸ் மற்றும் முழு கோதுமை), மெலிந்த புரதங்கள், காய்கறிகள் மற்றும் பெக்டின்கள் நிறைந்த பெர்ரி, ஆப்பிள், பேரிக்காய், பிளம்ஸ், சாத்துக்குடி, ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற பழங்கள்.

சர்க்கரை நோயாளிகளுக்கு செய்யப்படும் எச்.பி.ஏ1சி (HbA1c) ரத்த பரிசோதனையில் ஒரு பொய்யான உயர்வை ஹைப்போ தைராய்டிசம் ஏற்படுத்தக் கூடும். மேலும் இது சர்க்கரை நோயாளிகளுக்கு நரம்பியல் மற்றும் சிறுநீரக பாதிப்பு ஏற்படும் வாய்ப்பை அதிகரிப்பதாக ஆராய்ச்சிகளில் கண்டறியப்பட்டுள்ளது.

## மனசு சஞ்சலப்படுகிறதா...?

ஒருமுறை புத்தர் தன்னுடைய சீடர்களுடன் பயணப் பட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு ஏரியை எதிர் கொண்டபோது, அங்கிருந்த பெரிய ஆலமர நிழலில் அனைவரு...ம் சற்று ஓய்வெடுக்கும் எண்ணத்துடன் தங்கினார்கள்.

புத்தர் தன்னுடைய சீடர்களில் ஒருவரை அனுப்பி ஏரியில் இருந்து குடிப்பதற்கு நீர்கொண்டு வரச் சொன்னார்.

சீடரும் தங்களிடம் இருந்த பானை ஒன்றை எடுத்துக்கொண்டு நீர்நிலையை நோக்கி நடந்தார்.

அந்த நேரத்தில், மாட்டு வண்டிக்காரர் ஒருவர், ஏரிக்குள் இறங்கி ஏறியைக் கடந்து சென்றார்.

ஏறி கலங்கி விட்டது. அத்துடன் ஏரியின் கீழ்ப் பகுதியில் இருந்த சேறும் சகதியும் மேலே வந்து நீரை அசுத்தப் படுத்தி பார்ப்பதற்கே உபயோகமற்றதாகக் காட்சியளித்தது.

இந்தக் கலங்கிய நீர் எப்படிக் குடிப்பதற்குப் பயன்படும்? இதை எப்படிக் குருவிற்குக் கொண்டுபோய்க் கொடுப்பது? என்று தண்ணீரில்லாமல் திரும்பிவிட்டார்.

அத்துடன் தன் குருவிடமும் அதைத் தெரிவித்தார்.



ஒரு மணி நேரம் சென்ற பிறகு,

புத்தர் தன்னுடைய சீடரை மீண்டும் ஏரிக்குச் சென்றுவரப் பணித்தார்

நீர்நிலையருகே சென்று சீடன் பார்த்தான். இப்போது நீர் தெளிந்திருந்தது . சகதி நீரின் அடியிற்சென்று பதிந்திருந்தது.

ஒரு பானையின் தண்ணீரை முகர்ந்து கொண்டு சீடன் புத்தரிடம் திரும்பினான்.

புத்தர் தண்ணீரைப் பார்த்தார். சீடனையும் பார்த்தார். பிறகு மெல்லிய குரலில் சொல்லலானார்.

தண்ணீர் சுத்தமாவதற்கு என்ன செய்தாய்..?

நான் ஒன்றும் செய்யவில்லை சுவாமி! அதை அப்படியே விட்டுவிட்டு வந்தேன். அது தானாகவே சுத்தமாயிற்று!

நீ அதை அதன் போக்கிலேயே விட்டாய்.

அது தானாகவே சுத்தமாயிற்று.

அத்துடன் உனக்கு தெளிந்த நீரும் கிடைத்தது இல்லையா?

ஆமாம் சுவாமி!

நம் மனமும் அப்படிப்பட்டதுதான்..

மனம் குழப்பத்தில் இருக்கும்போது நாம் ஒன்றும் செய்ய வேண்டாம்.

அதை அப்படியே விட்டு விட வேண்டும். சிறிது கால அவகாசம் கொடுக்க வேண்டும். அது தனக்குத்தானே சரியாகிவிடும்.

நாம் எந்தவித முயற்சியும் செய்ய வேண்டாம்.

மனதை சமாதானப் படுத்தும் விதத்தைப் பற்றி சிந்திக்கவும் வேண்டாம்.,

அது அமைதியாகிவிடும் .

அது தன்னிச்சையாக நடக்கும்.

அத்துடன் நம்முடைய முயற்சியின்றி அது நடக்கும்.

மன அமைதி என்பது இயலாத செயல் அல்ல!

இயலும் செயலே!

அதற்கு நம் பங்கு எதுவும் தேவை இல்லை! குறைவாகக் காண்க

## முதுகு வலி நிவாரணத்திற்கான உடற்பயிற்சிகள்

முதுகு வலி என்பது இன்றைக்கு ஏறக்குறைய அனைவரையும் பாதிப்படையச் செய்கிறது. முதுகு வலிக்கான காரணங்கள் வருமாறு:

முதுகுத்தசை அல்லது தசைநார்களில் ஏற்படும் பிடிப்புகள், அதிக எடை தூக்குதல் அல்லது மேடு பள்ளமான படுக்கைகளில் படுப்பது, முதுகுத் தண்டுவட வட்டுகளில் ஏற்படும் வீக்கம், அல்லது வட்டுகள் விலகுதல் காரணமாக வட்டுக்குள் இருக்கும் மென்மையான பொருள் வீங்கி அல்லது உடைந்து தண்டுவட நரம்பில் அழுத்தும்போது முதுகு வலி ஏற்படும்.

கீல்வாத நோய்களிலும் முதுகு வலி ஏற்படும். முதுகுத்தண்டுவட வட்டுகள், எலும்புகள் சுருங்குவது (முதுகெலும்பு ஸ்டெனோசிஸ்), எலும்புகளின் வலிமை இழப்பு (ஆஸ்டியோபோரோசிஸ்), முதுகெலும்பில் ஏற்படும் அழற்சி நோய் (அன்கிலோசிங் ஸ்பான்டைலைடிஸ்)








## நாளைய விடியல் நமக்கானது என்று வாழ்வோம்

நாம் இறந்த அடுத்த நொடியே நம்முடைய உயிர் ஆத்மாவாக மாறி

வெளியே நின்றபடி நம்மை வேடிக்கை பார்க்க ஆரம்பித்துவிடும்.

கொஞ்ச நேரத்தில் எப்படியாவது நாம் இறந்த செய்தி நம் வீட்டுக்கு போய்விடும்,

எல்லோரும் கதறியழுது காத்திருப்பார்கள்,

நம்மை வேடிக்கை பார்க்க ஊரே திரண்டு நிற்கும்,

உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் உடனே தகவல் சென்றுவிடும்,

இவ்வளவு நாள் நேராக வீட்டுக்குள் சென்ற நம்மை இன்று வாசலிலேயே வைத்துவிடுவார்கள்,

இத்தனைக்கும் அந்த வீட்டை நாம்தான் பார்த்து பார்த்து கட்டியிருப்போம்,

எல்லாம் நேரம்!

ஆளுக்கொரு பக்கம் மார்பிலும் தலையிலும் அடித்துக்கொண்டு அழுவார்கள், வருகின்ற நண்பர்களையும் உறவினர்களையும்கூட கட்டிக்கொண்டு அழுவார்கள், நமக்கு ஒன்றுமே புரியாது,

அவர்கள் அழுவதை பார்த்து கஷ்டமாக இருந்தாலும் உள்ளுக்குள் சந்தோஷமாக இருக்கும் நம்மீது இவ்வளவு பாசம் வைத்திருக்கிறார்களே என்று!

உங்களைவிட்டு எங்கும் போகமாட்டேன் எப்போதும் உங்களுடன் இருப்பேன் என்று ஆறுதல் சொல்லி கண்ணீரை துடைக்கவேண்டும் என்று துடியாய் துடிப்போம்.

ஆனால் எதுவுமே முடியாது. அதுதான் மரணத்தின் மிகமோசமான துயரம்!

பாவம் எல்லோரும் tired ஆகி tired ஆகி அழுதுகொண்டே இருக்கிறார்கள் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது!

இதோ நாம் எதிர்பார்த்த அந்த freezer box வந்துவிட்டது, கோடைவெயிலுக்கு சும்மா குளுகுளு என்று இருக்கும்.


ஆனால் நம்மால் தான் உணரமுடியாது, ஒருவழியாக உள்ளே தள்ளி அடைத்துவிட்டார்கள், இருட்டிக்கொண்டதால் வெளியே campfire ம் போட்டுவிட்டார்கள்.

விடியவிடிய விழித்திருந்து உறங்கலாம் என்று நினைக்கும்போது தாரைதப்பட்டையுடன் ஒரு குரூப் வந்துவிட்டது,

சொந்தபந்தங்கள் எல்லாம் வரத்தொடங்கிவிட்டன பாவிமக்கள் இந்த பாசத்தையெல்லாம் எங்கு வைத்திருந்தார்களோ தெரியவில்லை

அழுதுகொண்டே ஓடிவருகிறார்கள், இவ்வளவு நேரத்திற்கு பிறகு தமிழில் நமக்கு பிடிக்காத அந்த வார்த்தையை ஒருவன் சொன்னான்,

'பொணத்தை ' கொஞ்சம் தள்ளிவைங்க பந்தல்போடனும்,



நம்ம அப்பா எவ்வளவு அழகா பெயர் வச்சிருந்தாலும் செத்தபின்னாடி பத்துகாசுக்கு தேறாது!

கூட்டம் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது, நம் பகையாளிகள் கூட நம்மை ரொம்ப நல்லவன் என்று certificate தருகிறார்கள்,

ஒருபக்கம் தாரை தப்பட்டை

இன்னொரு பக்கம்

மக்கள் வெள்ளத்தில் மாலை மரியாதைகள் இன்னொரு பக்கம் பட்டாசுசத்தம், எல்லாம் இருந்தும் என்ன பிரயோஜனம்!?

அத்தனைபேரு முன்னாடி அரைகுறை dress சோட நம்மை குளிக்கவச்சி மானத்தை வாங்கிட்டாங்களே!!

என்ன பண்றது பொணமா பொறந்தாலே இப்படிதான்!

ஒருவழியாக எரிப்பதற்கோ புதைப்பதற்கோ எடுத்துசெல்கிறார்கள்

இவ்வளவு நாள் நாம் போட்ட ஆட்டத்தையெல்லாம் சேர்த்து நாலுபேர் ஆடிக்கொண்டு இருக்கிறார்கள்!

கடைசியில் நம்மை எரித்தேவிட்டார்கள்!

இனி எங்காவது நாய் ஊளையிட்டால் கூட நாம்தான் வந்திருக்கிறோம் என்று புலுக ஆரம்பித்துவிடுவார்கள்!

அடுத்த நாள் வீட்டுக்கு சென்று பார்த்தால்

அழுகை குறைந்து விசும்பலாகிவிட்டிருக்கும்

அதற்கு அடுத்த நாள் விசும்பலும் குறைந்திருக்கும்.

இப்படி நாளாக நாளாக நம்மை கொஞ்சம் கொஞ்சமாய் மறந்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிவிடுவார்கள்!

இதில் இன்னொரு சிறப்பு செய்தி என்னன்னா

நாம் இறந்ததை யாரோ Facebook ல் போட மொத்தம் 4000 likes(விருப்பங்கள்)

அடப்பாவிகளா,

அப்போ அத்தனைபேரும் எப்போ போவான்னு wait பண்ணிட்டே இருந்தீங்களா?!

ஒவ்வொரு இறப்பின் போதும் எத்தனையோ கனவுகளும் ஆசைகளும்

சேர்ந்தே புதைந்து போகின்றன!

இப்படி ஒவ்வொரு நாளும் சராசரியா உலகம் முழுவதும் 70,000 பேர் உயிர்துறக்கிறார்கள்!

நாளைய விடியல் நமக்கானது என்கின்ற

எந்த உத்திரவாதமும் இல்லாதபோது

நாம் ஏன் பொய்யோடும், பொறாமையோடும், பகையோடும், பாவத்தோடும் நம் வாழ்க்கையை வாழவேண்டும்?

அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்வோம்

## பூம்புகார் விற்பனையகத்தில் விளக்கு கண்காட்சி விற்பனை



கார்த்திகை தீபத்தை முன்னிட்டு, சென்னை அண்ணா சாலை பூம்புகார் விற்பனையகத்தில் விளக்கு கண்காட்சி, விற்பனை நடக்கிறது.

## ரெசிடென்ஸி டவரில் நகை கண்காட்சி



கோவை அவினாசி சாலை ரெசிடென்ஸி டவரில் நகை கண்காட்சி நேற்று துவங்கியது.

## சாரண சாரணியர் இயக்கத்தின் 50 வது ஆண்டு பொன்விழா




உசிலம்பட்டி நாடார் சரஸ்வதி மேல்நிலைப்பள்ளியில் சாரண சாரணியர் இயக்கத்தின் 50 வது ஆண்டு பொன்விழாவில் அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மூர்த்தி, பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் கண்ணப்பன், சப் கலெக்டர் உட்கர்ஷ்குமார், தங்க தமிழ்ச்செல்வன்எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் பூமிநாதன், வெங்கடேசன், அய்யப்பன் மற்றும் திமுக மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மணிமாறன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## தேசிய நூலக வார விழா



தூத்துக்குடி மாவட்ட மைய நூலகத்தில் தேசிய நூலக வார விழாவில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய உதவி இயக்குநர் பேச்சியம்மாள் பேசினார்.

## வாக்காளர்களுக்கு துண்டுபிரசுரங்கள்



எஸ்ஐஆர் பணிகள் குறித்து சேலத்தில் வாக்காளர்களுக்கு துண்டுபிரசுரங்கள் வினியோகிக்கப்பட்டன.




## பெண்கள் சுய தொழில் புரிந்திட ரூ. 14 லட்சம் மானியம்



நாமக்கல் மாவட்டத்தில் தொழிலாளர் நல வாரியம் மூலம் 14 பெண்கள் ஆட்டோ மற்றும் டாக்சி வாங்கி சுய தொழில் புரிந்திட ரூ. 14 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

# எஸ்ஐஆர் விழிப்புணர்வு கோலம்



கோவையில் எஸ்ஐஆர் விழிப்புணர்வு கோலங்களை கலெக்டர் பவன்குமார் பார்வையிட்டார்.

## "மாபெரும் தமிழ்க் கனவு" நிகழ்ச்சி



கொங்கு பொறியியல் கல்லூரியில் "மாபெரும் தமிழ்க் கனவு" நிகழ்ச்சியில் தமிழ் பெருமித உரை வாசிப்பு மற்றும் சிறப்பாக பேசிய மாணவ மாணவியர்களுக்கு மாவட்டவருவாய் அலுவலர் பாராட்டுச்சான்றிதழ்கள் வழங்கினார்.

## புதிய அடுக்குமாடி குடியிருப்பு



சென்னை ஹாரிங்டன் சாலை அருகே தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், வேம்புலி அம்மன் கோயில் மற்றும் சீனிவாசபுரம் ஆகிய இரண்டு திட்டப் பகுதிகளில் ரூ.89.70 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 584 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை துணைமுதல்வர் உதயநிதி நேற்று திறந்து வைத்து, பயனாளிகளுக்கு அதற்கான ஆணைகளை வழங்கினார். அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், சேகர்பாபு, மேயர் பிரியா, தமிழச்சி எம்.பி., எம்எல்ஏக்கள் வேலு, பரந்தாமன் உடன் இருந்தனர்.

## 85 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுமானப் பணி



சென்னை துறைமுகம் தொகுதி எல்லீஸ்புரம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ரூ.15.29 கோடியில் நடக்கும் 85 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுமானப் பணிகளை துணை முதல்வர் உதயநிதி ஆய்வு செய்தார்.உடன் , அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், சேகர்பாபு, மேயர் பிரியா, கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லாஉஷா உள்ளனர்.

## எஸ்ஐஆர் பணிகள் குறித்து ஆய்வு



கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர் ஆகிய பகுதிகளில் எஸ்ஐஆர் பணிகள் குறித்து அமைச்சர் தங்கம்தென்னரசு ஆய்வு மேற்கொண்டார். உடன் கம்பம் ராமகிருஷ்ணன் எம்எல்ஏ உள்ளார்.

## நயினார் நாகேந்திரனுக்கு வரவேற்பு



தென்காசியில் பாஜக மாநிலத்தலைவர் நயினார் நாகேந்திரனுக்கு மாவட்டத்தலைவர் ஆனந்தன் தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

## புதிய வளர்ச்சி திட்டப் பணிகளுக்கு அருண் நேரு எம்.பி. அடிக்கல் நாட்டினார்



பெரம்பலூர் வாலிகண்டபுரத்தில் புதிய வளர்ச்சி திட்டப் பணிகளுக்கு அருண் நேரு எம்.பி. நேற்று அடிக்கல் நாட்டினார். கலெக்டர் மிருணாளினி, பிரபாகரன் எம்எல்ஏ உடன் உள்ளனர்.

## +1 மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டி



நாகர்கோவில் வடசேரி அரசு மேல்நிலைப் பள்ளியில் +1 மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை மேயர் மகேஷ் வழங்கினார்.

## 119 மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டி



தூத்துக்குடி - புனித இன்னாசியார் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 119 மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்.

## செ.நாச்சிப்பட்டு கூட்டுறவு கடன் சங்கத்துக்கு விருது



திருவண்ணாமலையில் 72-வது கூட்டுறவு வார விழாவில் , 24 ஆண்டுகளாக சிறந்த கூட்டுறவு சங்கமாக செயல்பட்டு வரும் செ.நாச்சிப்பட்டு கூட்டுறவு கடன் சங்கத்துக்கு விருதை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார். துணைசபாநாயகர் பிச்சாண்டி,கலெக்டர் தர்ப்பகராஜ் உடன் உள்ளனர்.

## 2 அடுக்குகள் கொண்ட 8 வகுப்பறை கட்டிடத்தின் பணி மதுரவாயல் கணபதி எம்எல்ஏ பூமி பூஜை



வளசரவாக்கம் மண்டலம் 143 வது வார்டு முகப்பேர் மேற்கு சிவன் கோயில் எதிரில் உள்ள மாநகராட்சி தொடக்க பள்ளியில் 2.01 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட உள்ள 2 அடுக்குகள் கொண்ட 8 வகுப்பறை கட்டிடத்தின் பணியை மதுரவாயல் கணபதி எம்எல்ஏ பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான ஓவியப் போட்டி



ராமநாதபுரத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஓவியப் போட்டியை கலெக்டர் சிம்ரன்ஜீத் காலோன் பார்வையிட்டார்.

## ரூ.14 கோடியில் புதிதாக கட்டப்பட்ட கட்டிடம் திறப்பு



வடலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.14 கோடியில் புதிதாக கட்டப்பட்ட கட்டிடத்தை முதல்வர் காணொளி காட்சி வாயிலாக நேற்று திறந்து வைத்தார். அங்குஅமைச்சர் எம்ஆர்கே பன்னீர்செல்வம் குத்து விளக்கேற்றினார். கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார்,விஷ்ணுபிரசாத் எம்.பி., கல்லூரி கல்வி மண்டல இணை இயக்குநர் மலர், வடலூர் அரசு கலைக் கல்லூரி முதல்வர் வண்ணமுத்து மற்றும் பலர் பங்கேற்றனர்.

## கிறிஸ்துமஸ் கேக் கலவை தயாரிக்கும் நிகழ்ச்சி



கோவை காந்திபுரம் பகுதியில் உள்ள பார்க் எலன்சா நட்சத்திர விடுதியில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் கேக் கலவை தயாரிக்கும் நிகழ்ச்சியில் திரளான பெண்கள் கலந்து கொண்டனர்.

## 275 வது நாளாக அறுசுவை சிற்றுண்டி



சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் 275 வது நாளாக நேற்று காலை அறுசுவை சிற்றுண்டிகளை அமைச்சர்கள் நேரு, சேகர்பாபு வழங்கினர்.

# சுற்றுலா: இந்தியாவின் மிகவும் ஆபத்தான சுற்றுலா தளங்கள்!

இந்தியாவில் அழகான இடங்களை போலவே ஆபத்தான இடங்களும் உள்ளன. அப்படி இந்தியாவின் மிகவும் ஆபத்தான சுற்றுலா தளங்களை பற்றிய பட்டியலை இந்த பதிவில் காணலாம்.

சுற்றுலா தளம் என்றாலே பெரும்பாலும் மகிழ்ச்சிகரமாக இருப்பதற்கே மக்கள் செல்கிறார்கள். ஆனால் இந்த மகிழ்ச்சிகரமான பயணங்கள் ஆபத்தான பயணமாக இருந்தால் உங்களுக்கு சம்மதமா?. அப்படி ஆபத்தான சுற்றுலா தளங்கள் இந்தியாவில் உள்ளன. இந்த இடங்களுக்கு ஒருத்ரில் மற்றும் தைரியம் வேண்டும் என்று விரும்பும் சுற்றுலா பயணிகள் மட்டுமே செல்வார்கள். முக்கியமாக இந்த சுற்றுலா தளங்களுக்கு குடும்பத்தை அழைத்துச்செல்வது தவறானது. இந்த இடங்களை தற்போது இந்த பட்டியலில் காணலாம்.



1.DUMAS BEACH (குஜராத்)

இந்த அரபிக் கடலில் உள்ள DUMAS BEACH பார்ப்பதற்கு சாதாரண கடற்கரை போலவே இருக்கும்.ஆனால்இந்தஇடம்என்பது முந்தய காலத்தில் ஹிந்துக்களின் சுடுகாடாக இருந்துள்ளது. இங்கு பலரை எரித்துளார்கள். இங்கு கடற்கரை மணல் கருப்பு நிறத்தில் உள்ளது. இந்த இடத்தை பகலில் மட்டுமே நாம் காணமுடியும். இங்கு இரவுநேரங்களில் செல்வதற்கு அரசு தடை விதித்துள்ளது.

2.PAMBAN BRIDGE (தமிழ்நாடு)

தமிழகத்தில் உள்ள ராமேஸ்வரத்தில் இந்த பாம்பன் அமைந்துள்ளது.இந்த பாலம் 2.065 கிலோமீட்டர் நீளம் உள்ளது. இந்த பாம்பன் பாலம் வெள்ளையர்களால் கட்டப்பட்டது. இந்த ரயில் பாலம் செல்வதற்கு மிகவும் அழகாக இருந்தாலும் மிகவும் ஆபத்தான பாலங்களில் ஒன்றாகும்.

சிறியதவறுநிகழ்ந்தாலும்மொத்த ரயில் கடலுக்குள் சென்றுவிடும். இதன் காரணமாகவே மிகவும் குறைந்தவேகத்தில் இந்தபாலத்தை ரயில் கடக்கும். உலகின் ஆபத்தான பயணங்களில் இதுவும் ஒன்று.



3.SIJU (மேகாலயா)

வவ்வால் குகை என்று அழைக்கப்படும் இந்த இடம் மேகாலயா மாநிலத்தில் உள்ளது. இந்த குகை பூமிக்கு அடியில் 4 கிலோமீட்டர் தூரம் ஆழம் கொண்டது. இந்த குகையில் இன்னும் பல இடங்களுக்கு மனிதர்கள் செல்லவில்லை.

4.KULDHARA (ராஜஸ்தான்)

இந்த பழமையான ஒரு நகரம் ஒரு காலத்தில் மக்களால் நிரம்பியிருந்துள்ளது. ஆனால் ஒரு கட்டத்தில் ஒரே இரவில் அனைவரும் வெளியேறிவிட்டனர் என்றும் அவர்கள் அதன் பிறகு திரும்பவில்லை என்றும் கூறப்படுகிறது.

5.அந்தமான் தீவுகள்

இந்த தீவுகள் இந்தியாவிற்கு வெளியே வங்காள விரிகுடாவில் உள்ளது. இந்த தீவுகளில் மனிதர்கள் வசித்தாலும் இன்னும் சில தீவுகள் மனிதர்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. இங்கு வசிக்கும் ஆதிவாசிகள் மனிதர்களை வெறுக்கிறார்கள்.

6.HEMIS NATIONAL PARK (லடாக்)

இங்கு பனி சிறுத்தைகள் அதிகம் உள்ளன. இங்கு எலும்பை நொறுக்கும் குளிர் உள்ளது. இது -20டிகிரி வரை செல்லும். இந்த இடம் இந்தியாவின் தனித்துவமான பணிசிறுத்தைகளின் தலைநகராக உள்ளது. அனல் இங்கு செல்வது மிகவும் ஆபத்தானது.

# வேலைவாய்ப்பு கார்னர்

## சுங்கத்துறையில் வேலை



கேரளாவின் கொச்சியில் உள்ள மத்திய சுங்கத்துறை அலுவலகத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மாலுமி 11, டிரேட்ஸ்மேன் 3, கிரீசர் 4, சீனியர் ஸ்டோர்கீப்பர் 1 என மொத்தம் 19 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு / ஐ.டி.ஐ.,

வயது: 18 - 25, 18 - 30 (15.12.2025ன் படி)

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, ஸ்கில் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு, இணையதளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

Office of the commissioner of customs (Preventive), 5th floor, Catholic centre, Broadway, Cochin -- 682 031.

கடைசிநாள்: 15.12.2025

விவரங்களுக்கு: cenexcisekochi.gov.in

## எம்.பி.ஏ., முடித்தவருக்கு வேலை

மத்திய அரசின் 'மெட்டல் ஸ்கிராப் வர்த்தக நிறுவனத்தில்' காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'மேனேஜ்மெண்ட் டிரைனி' பிரிவில் பைனான்ஸ், அக்கவுன்ட்ஸ் 23, சிஸ்டம் 7, ஆப்பரேஷன்ஸ் 4, அட்மின் 2, சட்டம் 1 என மொத்தம் 37 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்., / எம்.பி.ஏ., / எம்.சி.ஏ.,

வயது: 18-28 (30.11.2025ன் படி)

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, குழு விவாதம், நேர்முகத்தேர்வு. விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 600. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை. கடைசிநாள்: 30.11.2025

விவரங்களுக்கு: ms tcindia.co.in

# பாரம்பரிய உணவுகளுடன் உணவுத் திருவிழா: இன்று தொடக்கம்!

**மதுரை, நவ.22:**

இந்தியாவின் பல்வேறு மாநில சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் மதி கண்காட்சி (சாராஸ் மேளா) மற்றும் உணவுத் திருவிழாவினை துணை முதல்வர் உதயநிதி இன்று (நவ, 22) மதுரை, தமுக்கம் திடலில் துவக்கி வைக்கிறார்.

மத்திய அரசின் ஊரக வளர்ச்சித்துறையானது கிராமப்புற கைவினைக் கலைஞர்கள் தங்களின் தயாரிப்புப் பொருள்களை காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் ஏதுவாக பல்வேறு மாநில அரசுகளுடன் இணைந்து 'சாராஸ்' (SARAS) எனப்படும் விற்பனைக் கண்காட்சிகளை நடத்தி வருகிறது.

துணை முதல்வர் உதயநிதி நாளை மதுரை, தமுக்கம் திடலில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள மதி கண்காட்சி (சாராஸ் மேளா) மற்றும் உணவுத் திருவிழாவினை துவக்கி வைக்கிறார்.

மதி கண்காட்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருள்களான மூலிகைப் பொருட்கள், சணல் பொருள்கள், துணிப்பைகள், ஐம்பொன் நகைகள், சுடுமண் பொம்மைகள், செயற்கைப் பூக்கள், நூல் வளையல்கள், மரச் சிற்பங்கள், பட்டுப் புடவைகள், எம்ப்ராய்டரி ஆடைகள், கைத்தறி துண்டுகள், கைவினைப் பொருள்கள், கண்ணாடி ஓவியங்கள், கைத்தறிப் புடவைகள், உலர் மீன்கள், மிளகு, உல்லன் ஆடைகள், மணி மலைகள், மரச்செக்கு எண்ணை, பருத்தி ஆடைகள், சங்குகள் மற்றும் சிப்பி நகைகள், ஆயத்த ஆடைகள், வெட்டிவேர் பொருள்கள், பிரம்பு பொருள்கள், தலையாட்டி பொம்மைகள், சணல் பைகள், பத்தமடை பாய்கள், தோல் பைகள், பருத்தி ஆயத்த ஆடைகள், செயற்கை ஆபரணங்கள், அழகு சாதனப் பொருள்கள், மூலிகை சாம்பிராணி, பனை பொருள்கள், செயற்கை பூ மாலைகள், கலம்காரி பைகள், கண்ணாடி மாலைகள் போன்ற பொருட்களை விற்பனை செய்திட 171 அரங்குகளும், இந்தியாவின் பிற மாநிலங்களான குஜராத்தின் அகர் பத்திகள் மற்றும் வாசனை திரவியங்கள், கைவினைப் பொருள்கள் போன்றவற்றை விற்பனை செய்திட 29 அரங்குகளும் என 200 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

# வரலாறு காணாத மோசமான நவம்பர் மாதம் !

**சென்னை, நவ.22:**

தமிழ்நாடு அண்மைக் காலமாக சந்தித்திராத அளவுக்கு நாம் கடந்துகொண்டிருக்கும் நவம்பர் மாதம் மிக மோசமான மாதமாக இருக்கப் போகிறது என்றும், அதில் சந்தேகமேயில்லை எனவும் தமிழ்நாடு வெதர்மேன் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், தமிழ்நாட்டின் நவம்பர் மாதத்தில் பெய்ய வேண்டிய இயல்பான மழை அளவு 181.7 மி.மீ. ஆகும். ஆனால் இதுவரை 50 மி.மீ. மழைதான் பதிவாகியிருப்பதாக அவர் கவலை தெரிவித்திருக்கிறார்.

அதாவது, இதுவரை நவம்பர் மாதத்தில் பெய்திருக்கும் மழை அளவுகளின் தரவுகளின்படி பார்த்தால், நவம்பர் மாதத்தில் நல்ல மழை பெய்யும்போதெல்லாம், ஒட்டுமொத்த வடகிழக்கு பருவமழை பொய்த்துப் போவதில்லை. உதாரணமாக, 2021 ஒரு வரலாற்று நவம்பர் மாதமாகும், ஒரு மாதத்தில் 400 மி.மீ. மழைப்பொழிவு கூட இருந்துள்ளது.



அதுபோல, நவம்பர் மாதத்தில் மழை இல்லை என்றால், வடகிழக்குப் பருவமழை எப்போதும் இயல்பை விடவும் குறைவாகவே பதிவாகியிருக்கும். டிசம்பரில் இந்த நிலை பெரிய அளவில் மாறிவிடாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டுகளில் நவம்பரில் பதிவான மழை அளவு

2018 - 159.1 மி.மீ.

2019 - 125.8 மி.மீ.

2020 - 203.3 மி.மீ.

2021 - 425.3 மி.மீ.

2022 - 178.5 மி.மீ.

2023 - 233 மி.மீ.

2024 - 140.2 மி.மீ.

2025 - 50.9 மி.மீ. (20.11.2025 வரை)

இதனைப் பார்த்தால், கடந்த காலங்களில் இல்லாத வகையில், ஒரு மோசமான நவம்பர் மாதத்தை தமிழகம் சந்திக்கப் போகிறது என்றும் அதில் சந்தேகமேயில்லை என்றும் அவர் பதவிட்டுள்ளார்.

நவம்பர் மாத இறுதியில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்பிருந்தாலும், அது சென்னைக்கு மழையை தருமா என்பது இதுவரை உறுதி செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இளையராஜா பெயர், படத்தை வணிக நோக்கத்துடன் பயன்படுத்த இடைக்காலத் தடை!

**சென்னை, நவ.22:**

திரைப்பட இசையமைப்பாளர் இளையராஜாவின் புகைப்படத்தை, வணிக நோக்கத்துடன் பயன்படுத்த சமூக வலைத்தளங்களுக்குத் தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

யூடியூப் சேனல்கள், சோனி உள்ளிட்ட இசை நிறுவனங்கள், சமூக வலைத்தளங்களுக்கு எதிராக இளையராஜா தொடர்ந்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் நேற்று இந்த இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது.



அந்த மனுவில், தன்னை அடையாளப்படுத்தும் வகையில் தனது புகைப்படம், பெயர், இசைஞானி என்ற பட்டப் பெயர், குரல் என எதையும் பயன்படுத்தக் கூடாது எனவும், சமூக வலைதளங்களில் ஏற்கனவே பதிவிடப்பட்ட புகைப்படங்களை நீக்க வேண்டும். அனுமதியின்றி தனது புகைப்படத்தை பயன்படுத்தியதன் மூலம் கிடைத்த வருமான விவரங்களை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, நீதிபதி என். செந்தில்குமார் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, இளையராஜா தரப்பில் ஆஜரான மூத்த வழக்குறைஞர் பிரபாகரன் மற்றும் சரவணன் ஆகியோர், இசையமைப்பாளர் இளையராஜாவின் புகைப்படத்தை மார்ஃபிங் செய்தும், ஏ ஐ தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மாற்றியும் பயன்படுத்தி வருவாய் ஈட்டுவதாக குற்றம் சாட்டினர்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி, பெயரை, புகைப்படங்களை பயன்படுத்துவதால் இளையராஜாவுக்கு என்ன பாதிப்பு ஏற்படுகிறது எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த இளையராஜா தரப்பு மூத்த வழக்கறிஞர், தனது புகைப்படத்தையோ, பெயரையோ வணிக ரீதியாக பயன்படுத்தி வருவாய் ஈட்டுகின்றனர். இது தனது தனிப்பட்ட உரிமையை பாதிக்கும் செயல் என்பதால், யூடியூப், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைதளங்களில் ரீல்ஸ், மீம்ஸ்களில் அனுமதி இன்றி இளையராஜா புகைப்படத்தை பயன்படுத்துவதாகவும், சில நேரங்களில் அவதூறான கருத்துகளும் பதிவிடப்படுவதாகவும் வாதிடப்பட்டது.

இளையராஜா தரப்பு வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதி, சமூக வலைதளங்களில் இளையராஜாவின் புகைப்படத்தை அனுமதி இன்றி பயன்படுத்த இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டார்.

மேலும் மனுவுக்கு பதில் அளிக்கும்படி யூடியூப் சேனல்களுக்கும் நீதிபதி உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்துள்ளார்.

# சென்னையில் 2 மாதங்களுக்குள் வருகிறது டபுள் டெக்கர் பேருந்து?

**சென்னை, நவ.22:**

தமிழ்நாடு முழுவதும் பொதுப் போக்குவரத்தை அதிகரிக்கும் நோக்கில், தமிழக அரசு, பேருந்து சேவையை மேம்படுத்தி வருகிறது.

குறிப்பாக சென்னை மாநகர், புறநகர்ப் பகுதிகளில் பயணிகளின் தேவைக்கேற்ப அரசுப் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், சென்னையில் டபுள் டெக்கர் பேருந்துகள் மீண்டும் வலம் வரப்போவதாக தகவல் வெளியாகியுள்ளன. இதற்கான முயற்சிகள் கடந்த 2023 முதலே மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், நிகழாண்டு இறுதிக்குள் மின்சாரத்தால் இயக்கப்படும் புதிய மின்சார டபுள் டெக்கர் பேருந்துகளை வாங்க, சென்னை மாநகரப் போக்குவரத்து கழகம் முடிவு செய்துள்ளது.



இதையடுத்து, சென்னையில் டபுள் டெக்கர் பேருந்துகள் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அதற்கான ஒப்புதல் பெறுவதற்காக, தமிழ்நாடு அரசுக்கு சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் பரிந்துரையை அனுப்பியுள்ளது.

இந்தப் பரிந்துரைக்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளிக்கும் நிலையில், பேருந்தை இயக்குவதற்கான நடைமுறைகள் தொடங்கும் என போக்குவரத்துக் கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, தாம்பரம் - பிராட்வே இடையே 18ஏ என்ற எண்ணில் டபுள் டெக்கர் பேருந்து இயக்கப்பட்டு வந்தது.

ஆனால், போக்குவரத்து நெரிசல் மற்றும் மேம்பாலங்கள் கட்டுமானப் பணிகள் காரணமாக 2008 ஆம் ஆண்டு இந்த சேவை நிறுத்தப்பட்டது.

தற்போது, தனியார் நிறுவனம் சார்பில் டபுள் டெக்கர் சோதனைப் பேருந்துகள் பல்வேறு வழித்தடங்களில் இயக்கி பரிசோதிக்கப்பட்டு, பிறகு, மாநகரப் போக்குவரத்துக் கழகம் சார்பில் பேருந்துகள் வாங்கி இயக்கப்படவிருக்கிறது.

இதன் மூலம் சென்னைப் பொதுப் போக்குவரத்தில் மிக முக்கிய மாற்றம் ஏற்படுகிறது.

# காசி தமிழ் சங்கமம்: தமிழகத்தில் இருந்து சிறப்பு ரயில்கள் இயக்கம்

**கோவா, நவ. 22:**

காசி தமிழ் சங்கமம் 4.0-ஐ முன்னிட்டு, கூட்ட நெரிசலை தவிர்க்க தமிழகத்தில் இருந்து பனாரசுக்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

இது தொடர்பாக, தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கன்னியாகுமரி - பனாரஸ் இடையே சிறப்பு ரயில் (வண்டி எண்கள் 06001/06002) இயக்கப்படுகிறது. கன்னியாகுமரியில் இருந்து வரும் 29-ந் தேதி பகல் 11.45 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் அடுத்த 3-வது நாள் இரவு 11.15 மணிக்கு பனாரசை சென்றடைகிறது. மறுமார்க்கத்தில் பனாரசில் இருந்து டிசம்பர் 5-ந் தேதி இரவு 11 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில், அடுத்த 4-வது நாள் பகல் 11.30 மணிக்கு கன்னியாகுமரியை சென்றடைகிறது.



இதேபோல், சென்னை சென்டிரலில் இருந்து டிசம்பர் 2-ந் தேதி காலை 4.15 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06003) மறுநாள் இரவு 11.15 மணிக்கு பனாரசை சென்றடைகிறது. மறுமார்க்கத்தில், பனாரசில் இருந்து டிசம்பர் 7-ந் தேதி இரவு 11 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06004), 3-வது நாள் இரவு 11.30 மணிக்கு சென்னை சென்டிரலை வந்தடைகிறது.

மேலும், கோவையில் இருந்து டிசம்பர் 3-ந் தேதி மாலை 6 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06005), 3-வது நாள் இரவு 11.15 மணிக்கு பனாரசை சென்றடைகிறது.

மறுமார்க்கத்தில், பனாரசில் இருந்து டிசம்பர் 9-ந் தேதி இரவு 11 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06006), 4-வது நாள் காலை 8.30 மணிக்கு கோவையை சென்றடைகிறது.

இதேபோல், சென்னை சென்டிரலில் இருந்து டிசம்பர் 6-ந் தேதி காலை 4.15 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06007) மறுநாள் இரவு 11.15 மணிக்கு பனாரசை சென்றடைகிறது.

மறுமார்க்கத்தில், பனாரசில் இருந்து டிசம்பர் 11-ந் தேதி இரவு 11 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06008) அடுத்த 3-வது நாள் இரவு 11.30 மணிக்கு சென்னை சென்டிரலை வந்தடைகிறது.

மேலும், கன்னியாகுமரியில் இருந்து டிசம்பர் 7-ந் தேதி பகல் 11.45 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06009) 3-வது நாள் இரவு 11.15 மணிக்கு பனாரசை சென்றடைகிறது. மறுமார்க்கத்தில், பனாரசில் இருந்து டிசம்பர் 13-ந் தேதி இரவு 11 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06010) 3-வது நாள் பகல் 11.30 மணிக்கு கன்னியாகுமரியை சென்றடைகிறது.

அதேபோல், கோவையில் இருந்து டிசம்பர் 9-ந் தேதி மாலை 6 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06013) 3-வது நாள் இரவு 11.15 மணிக்கு பனாரசை சென்றடைகிறது. மறுமார்க்கத்தில், பனாரசில் இருந்து டிசம்பர் 15-ந் தேதி இரவு 11 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06014) 4-வது நாள் காலை 8 மணிக்கு கோவையை சென்றடைகிறது.

மேலும், சென்னை சென்டிரலில் இருந்து டிசம்பர் 12-ந் தேதி காலை 4.15 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06015) மறுநாள் இரவு 11.15 மணிக்கு பனாரசை சென்றடைகிறது.

மறுமார்க்கத்தில், பனாரசில் இருந்து டிசம்பர் 17-ந் தேதி இரவு 11 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06016) 3-வது நாள் இரவு 11.30 மணிக்கு சென்னை சென்டிரலை வந்தடைகிறது.

இந்த சிறப்பு ரயில்களுக்கான முன்பதிவு நாளை (சனிக்கிழமை) காலை 8 மணிக்கு தொடங்குகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொழில்நுட்ப /அறிவியல் செய்திகள்

# ஒரு மணி நேரத்தில் உலகின் மறுபக்கம் போகலாம்!



ஒலியின் வேகத்தை மிஞ்சி விமானங்கள் பறப்பதற்குத் தடையாக, காற்றியக்கவியலில் ஒரு புதிர் இருக்கிறது. அந்தப் புதிரை அமெரிக்காவிலுள்ள ஸ்டீவன்ஸ் தொழில்நுட்பக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள், விடுவித்துள்ளனர். மாதிரி ஹைப்பர்சோனிக் விமானங்களை 'காற்றுச் சுரங்க' சோதனைகளை அவர்கள் செய்து பார்த்தனர். ஒலியின் வேகத்தை விட ஆறு மடங்கு வேகமான 'மாக் 6' வேகத்தில் நடத்திய சோதனைகளில், காற்றின் படபடப்பு (turbulence) தாறுமாறாக இல்லாமல், மிகவும் கணிக்கக்கூடிய விதத்தில் தான் இருக்கிறது என்று ஸ்டீவன்ஸ் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

அதிவேகமாக எதிர்வரும் காற்றும், குறைவான வேகத்தில் பயணிக்கும் விமானங்கள் எதிர்கொள்ளும் காற்றும், காற்றியக்கவியலின் அடிப்படை விதிகளையே பின்பற்றுகின்றன என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

காற்றுப் படபடப்பின் பின்னால் உள்ள இயற்பியலை மறுபடியும் ஆராய வேண்டியதில்லை என்றால், விமான வடிவமைப்பாளர்கள், பிற சவால்களில் கவனம் செலுத்தலாம். உதாரணமாக, உந்தும் காற்றழுத்தம், எகிறும் வெப்பம், உடையும் பொருட்கள் போன்ற, சூப்பர்சோனிக் விமான வடிவமைப்பில் உள்ள பிற சவால்களில் கவனம் செலுத்தலாம். இந்தச் சவால்கள் தீர்க்கப்பட்டால், விமானங்கள் ஒருநாள் 'மாக் 10' வேகத்தில் பயணிக்க முடியும். சிட்னியில் இருந்து லாஸ் ஏஞ்சல்ஸ் வரையிலான பயணம் 15 மணி நேரத்திற்குப் பதிலாக ஒரு மணி நேரமாகக் குறையலாம்.

ஆக, காற்றியக்கவியலில் இருந்த ஒரு புதிர் விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு, சூப்பர்சோனிக் விமானப் பயணம், பூமியின் தாழ் சுற்றுப் பாதையில் பயணம் போன்றவற்றுக்கு திறவுகோலை வழங்கியிருக்கிறது.

# சீரான நீர்வரத்து: குற்றால அருவிகளில் குளிக்க அனுமதி

**தென்காசி, நவ.22:**

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து வரும் நிலையில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது. தென்காசி மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி அமைந்துள்ள குற்றால அருவிகளான மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம், சிற்றருவி, புலி அருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் குளிப்பதற்காக சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து காணப்படுகிறது. கார்த்திகை மாதம் பிறந்துள்ள நிலையில் சபரிமலை கோவிலுக்கு மாலை அணிந்து செல்லும் பக்தர்கள், குற்றாலம் வந்து அருவிகளில் நீராடி விட்டு செல்கின்றனர். இதனால் குற்றாலம் அருவிகளில் கூட்டம் நிரம்பி காணப்பட்டு வருகிறது.

இதற்கிடையே, நெல்லை மற்றும் தென்காசி மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் கடந்த நில நாட்களாக கனமழை பெய்து வரும் நிலையில் குற்றாலம் அருவிகளுக்கு வரும் நீர்வரத்து அதிகரித்தது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குற்றாலம் மெயின் அருவியில் குளிக்க கடந்த 3 நாட்களாக தடை விதிக்கப்பட்டது.

தற்போது மழை சற்று குறைந்த நிலையில், அருவிக்கு சீராக தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. இதையடுத்து, குற்றால அருவிகளில் குளிக்க தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சபரிமலை சீசன் காரணமாக அருவிக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

# கர்நாடகா முதலமைச்சர் பதவியை டி.கே. சிவகுமாருக்கு வழங்க கோரிக்கை

**புதுடெல்லி, நவ.22:**

கர்நாடக சட்டசபைக்கு கடந்த 2023-ம் ஆண்டு நடந்த தேர்தலில் தனிப்பெரும்பான்மையுடன் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சியை பிடித்தது. அப்போது முதல்-மந்திரி பதவிக்கு சித்தராமையா, மாநில காங்கிரஸ் தலைவர் டி.கே. சிவக்குமார் இடையே கடும் போட்டி ஏற்பட்டது. இறுதியில் சித்தராமையா முதலமைச்சராக அறிவிக்கப்பட்டார். டி.கே. சிவக்குமார் துணை முதலமைச்சர் ஆக்கப்பட்டார். மேலும் முதலமைச்சர் பதவி ஆளுக்கு 2½ஆண்டுகள் என்று காங்கிரஸ் மேலிடம் ரகசிய ஒப்பந்தம் செய்ததாக கூறப்படுகிறது.

ஆனால் இந்த ஒப்பந்தம் குறித்து இதுவரை வெளிப்படையாக எதுவும் கூறவில்லை. கூட்டுறவுத்துறை அமைச்சராக இருந்த கே.என். ராஜண்ணா, நவம்பரில் அரசியல் புரட்சி ஏற்படும் என்று கூறி முதலமைச்சர் சித்தராமையா மாற்றப்பட உள்ளதாக மறைமுகமாக கூறினார். அவரது பேச்சால் சித்தராமையா மாற்றம் குறித்து அடிக்கடி பேசி வருகிறார்கள். இதை மறுத்த சித்தராமையா 5 ஆண்டுகளும் நானே முதலமைச்சராக நீடிப்பேன் என்று கூறினார். மேலும் அடுத்தாண்டும் தானே பட்ஜெட் தாக்கல் செய்வேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் முதலமைச்சர் சித்தராமையா ஆட்சியில் அமர்ந்து 2½ஆண்டுகள் நேற்றுடன் நிறைவடைந்துவிட்டது.

இந்த நிலையில் முதலமைச்சர் சித்தராமையாவுக்கு எதிராக ஆளும் காங்கிரசில் திடீரென்று போர்க்கொடி எழுந்துள்ளது. அதாவது துணை முதலமைச்சர் டி.கே.சிவக்குமாரின் ஆதரவு மந்திரிகள் 2 பேர், 9 எம்.எல்.ஏ.க்கள், ஒரு எம்.எல்.சி. என மொத்தம் 12 பேர் திடீரென்று நேற்று டெல்லி பயணம் மேற்கொண்டனர். அங்கு காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவை சந்தித்து பேசியுள்ளனர். கர்நாடகா காங்கிரஸ் அரசின் எஞ்சிய 2½ஆண்டு முதல்வர் பதவியை டிகே சிவகுமாருக்கு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

இதனைக் கேட்ட கார்கே, 'தலைவர் பொறுப்பு, அமைச்சரவை மாற்றம் உள்ளிட்ட விவகாரத்தில் ராகுல் தான் முடிவெடுப்பார்.

இந்த கோரிக்கையுடன் டெல்லி வருவதை முதலில் தவிர்க்க வேண்டும். ஏனெனில், ஊடகங்கள் இந்த விவகாரத்தை வேறு மாதிரி கொண்டு சென்று விடுவார்கள்,' என்று காங்கிரஸ் எம்எல்ஏக்களிடம் அறிவுறுத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது.

காங்கிரஸ் தேசிய தலைவர் கார்கே பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக, நாளை கர்நாடகாவுக்கு செல்ல இருக்கிறார். இந்தப் பயணத்தின் போது, டிகே சிவகுமாரின் ஆதரவாளர்கள் மேலும் பலர் கார்கேவை சந்தித்து இதே கோரிக்கையை முன்வைக்க இருப்பதாக சொல்லப்படுகிறது.

# ஏடிஎம் வேனில் ரூ.7.11 கோடி கொள்ளை வழக்கில் குற்றவாளிகளை நெருங்கிய பெங்களூரு போலீஸார்

**பெங்களூரு, நவ.22:**

ஏடிஎம் பணம் நிரப்பும் வேனில் இருந்து ரூ.7.11 கோடி கொள்ளையடித்த மர்ம நபர்களை தனிப்படை போலீஸார் நெருங்கி உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பெங்களூருவில் உள்ள ஜே.பி. நகரில் எச்டிஎஃப்சி வங்கி கிளையில் இருந்து நேற்று முன் தினம் பணம் ஏற்றிக்கொண்டு சிஎம்எஸ் நிறுவனத்தின் வேன் ஜெயநகர் அசோகா தூண் அருகே சென்றது. அப்போது இன்னோவா வாகனத்தில் வந்த மர்ம நபர்கள் அதனை வழிமறித்து ரிசர்வ் வங்கி அதிகாரிகளை போல நடித்து ரூ.7.11 கோடியை கொள்ளையடித்து சென்றனர்.

இதுகுறித்து சித்தாபுரா போலீஸார் வழக்குப்பதிவு செய்து, 4 தனிப்படைகளை அமைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த கொள்ளையில் நன்கு விஷயம் அறிந்த உள்வட்ட ஆட்கள் ஈடுபட்டுள்ளார்களா? எதற்காக கொள்ளையடிக்கப்பட்ட விஷயத்தை போலீஸில் தாமதமாக புகார் அளித்தார்கள்? வேனில் இருந்த துப்பாக்கி ஏந்திய பாது காவலர் கொள்ளை சம்பவத்தின் போது ஏன் ஆயுதத்தை பயன்படுத்தவில்லை? வெளிமாநிலத்துக்கு கொள்ளையர்கள் தப்பி ஓடி விட்டனரா என்பன உள்ளிட்ட கோணங்களில் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

4 பேரிடம் விசாரணை: பணம் கொள்ளையடிக்கப்பட்டபோது சிஎம்எஸ் வேனில் இருந்த வங்கி ஊழியர் தம்மையா, துப்பாக்கி ஏந்திய பாது காவலர் ராஜண்ணா, ஓட்டுநர் வினோத், காவலர் அஃப்தாப் ஆகிய 4 பேரிடமும் தனிப்படை போலீஸார் தனித்தனியாக விசாரணை நடத்தினர்.

மேலும் நால்வரின் சமூக வலைதள கணக்குகள், செல்போன், கணினி ஆகியவற்றை




ஆராய்ந்து வருகின்றனர். செல்போன் எண்களுக்கு வந்த அழைப்புகள், குறுஞ்செய்திகள், புகைப்படங்கள், வாட்ஸ் அப்பில் பகிரப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆராய்ந்தனர்.

இதுதவிர ஜே.பி. நகரில் இருந்து டைரி சர்க்கிள் வரையிலான சாலையில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளையும் போலீஸார் ஆராய்ந்தனர்.

குறிப்பாக சம்பவம் நிகழ்வதற்கு ஒரு மாதத்துக்கு முன்பிருந்து கொள்ளை அடிப்பதற்கான திட்டமிடல் ஏதேனும் நிகழ்த்தப்பட்டிருக்கிறதா என ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின்போது சந்தேகத்துக்குரிய 4 பேர், குறிப்பிட்ட சாலையில் அடிக்கடி வந்து சென்றது தெரியவந்துள்ளது. அவர்கள் சம்பந்தமான சிசிடிவி கேமரா பதிவுகளை வைத்து வங்கி மற்றும் ஏடிஎம் பணம் நிரப்பும் வேனின் ஊழியர்களிடம் போலீஸார் விசாரணை நடத்தினர். அந்த நால்வரையும் போலீஸார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

இதுகுறித்து கர்நாடக உள்துறை அமைச்சர் பரமேஷ்வரா கூறுகையில், "போலீஸாருக்கு குற்றவாளிகள் தொடர்பான முக்கிய துப்புகள் கிடைத்துள்ளன.

அதனை வைத்து குற்றவாளிகளை விரைவில் கைது செய்ய போலீஸார் முயன்று வருகின்றனர்.

பெங்களூரு முழுவதும் தீவிர வாகன தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கர்நாடகா மட்டுமல்லாமல் ஆந்திரா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலும் தேடுதல் வேட்டை நடந்து வருகிறது" என்று தெரிவித்தார்.

## க்ரைம் கார்னர்

### மகாராஷ்டிராவில் ஆன்லைன் பங்கு வர்த்தக மோசடி: ரூ.6.44 கோடியை இழந்த 70 வயது முதியவர்

**தானே, நவ.22:**

மகாராஷ்டிர மாநிலம் தானேவைச் சேர்ந்த 70 வயது முதியவரை வாட்ஸ்-அப் மூலம் ஆத்விகா சர்மா மற்றும் ராகேஷ் ஜெயின் ஆகியோர் தொடர்பு கொண்டுள்ளனர். பங்குகளில் முதலீடு செய்தால் அதிக லாபம் ஈட்டலாம் என்று கூறி முதியவரிடம் ஆசையை தூண்டியுள்ளனர்.

இதற்காக அந்த முதியவருக்கு டிரேடிங் அக்கவுண்டை ஆரம்பித்து அதில் முதலீடு செய்ய அறிவுறுத்தியுள்ளனர். அதன் பின்னர் பங்கு வர்த்தகத்தில் செய்த முதலீடு மற்றும் அதற்காக கிடைத்த லாபம் ரூ.6.44 கோடியை முதியவருக்கு தெரியாமல் அவரது கணக்கில் இருந்து ராகேஷ் ஜெயின் மற்றும் ஆத்விகா சர்மா ஆகியோர் மோசடி செய்துள்ளனர்.

இந்த மோசடி சம்பவம் தொடர்பாக அவர்கள் இருவர் மீதும் பிஎன்எஸ் 318 (4) மோசடி, தகவல் தொழில்நுட்ப பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மோசடி செய்த பணத்தை அவர்கள் எந்தெந்த வங்கி கணக்குகளின் மூலம் பரிமாற்றம் செய்துள்ளனர் என்பது குறித்து போலீஸார் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

### சென்னையில் போதை விருந்து: 'சிம்பு' பட இணைத் தயாரிப்பாளர் உள்பட 3 பேர் கைது

**சென்னை, நவ. 22**

சென்னை எல்டாமஸ் சாலையில் உள்ள ஒரு வீட்டில் போதை விருந்து நடப்பதாக சென்னை போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து போலீசார் அங்கு விரைந்து சென்று சோதனை நடத்தினர். அப்போது அங்கு போதைப் பொருள் பயன்படுத்தியது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து அங்கிருந்த சர்புதீன், சீனிவாசன், சரத் என்ற 3 பேரை போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீசார் கைது செய்துள்ளனர். இதில் கைதான சர்புதீன் நடிகர் சிம்புவின் 'ஈஸ்வரன்' பட இணை தயாரிப்பாளராக இருந்துள்ளார்.

எல்டாமஸ் சாலையில் உள்ள சர்புதீன் வீட்டில் ஒவ்வொரு வாரமும் போதை விருந்து நடந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும் கைதான சர்புதீனிடம் இருந்து ரூ.27 லட்சம் ரொக்க பணமும், ஒரு சொகுசு காரும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட ரூ.27 லட்சம் குறித்து போலீசார் விசாரணை நடத்தியதில், ஒரு கட்சியின் தேர்தல் வியூக நிறுவனத்துடன் சர்புதீன் தொடர்பில் இருப்பதும், அந்நிறுவனத்தின் பணம் தான் என சர்புதீன் தெரிவித்த போலீசார் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.மேலும் சர்புதீன் நடத்திய போதை விருந்தில் சினிமா பிரபலங்களும் பங்கேற்றார்களா? என்ற கோணத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### போலி வாட்ஸ்அப் குழு ஆரம்பித்து பெண்கள் குறித்து அவதூறு பரப்பிய 2 பேர் கைது

**சென்னை, நவ.22:**

சென்னை எழும்பூர் பாந்தியன் சாலையில் நெல்லை தூத்துக்குடி நாடார் மகமை பரிபாலன சங்கம் செயல்படுகிறது. இந்த சங்கத்தில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டில் வசிக்கும் 21 ஆயிரம்பேர் ஆயுட்கால உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்நிலையில், இந்த சங்கத்தின் பெயரில் போலியான வாட்ஸ்அப் குழு ஆரம்பிக்கப்பட்டு அதில் சங்கத் தலைவர் ஆனந்தராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் அவர்களின் மனைவிகள், மகள்கள் தொடர்பாக தொடர்ந்து அவதூறு கருத்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, இந்த விவகாரம் தொடர்பாக எழும்பூர் போலீஸார் வழக்குப் பதிந்து சங்கம் பெயரில் போலி வாட்ஸ்அப் குழு தொடங்கி, அவதூறு கருத்துகளைப் பதிவிட்டு வந்த போரூரைச் சேர்ந்த செல்வராஜ், சுரேஷ் ஆகியோரை நேற்று கைது செய்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது.

### காஞ்சிபுரம் தாய்-மகள் கொலை வழக்கில் 3 பேருக்கு 6 ஆயுள் சிறை தண்டனை விதிப்பு

**காஞ்சிபுரம், நவ.22:**

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் இரண்டாம் கட்டளை, அக்னீஸ்வரர் கோயில் தெருவில் வசித்து வந்தவர்கள் மூதாட்டி வசந்தா (65), அவரது மகள் தேன்மொழி (35).இவர்கள் இருவரும் கடந்த 2016-ம் ஆண்டு நவம்பர் 28-ம் தேதி மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு கிடந்தனர். வீட்டில் இருந்த நகை மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்டு இருந்தது.

இதுகுறித்து, குன்றத்தூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில், வீட்டில் வேலைக்காரியாக இருந்த சத்யா (25), அவரது தோழி தவ்லத்பேகம் (28), மற்றும் சத்யாவின் ஆண் நண்பர் ஜெயக்குமார் (30) ஆகிய மூவர் சதித் திட்டம் தீட்டி, நகை மற்றும் பணத்தைக் கொள்ளையடிக்கும் நோக்கில் இந்தக் கொலையைச் செய்தது தெரியவந்தது.

முதலில், மூவரும் வீட்டில் இருந்த வசந்தாவைக் கொலை செய்துள்ளனர். பின்னர், வேலை முடிந்து வீட்டுக்கு வந்த தேன்மொழியின் கழுத்தை நெரித்துக் கொன்றனர். இந்தக் கொலைச் சம்பவத்தின்போது, தேன்மொழியின் 7 வயது மகள் சுரபிஸ்ரீயையும், 8 மாதப் பெண் குழந்தையையும் கொலை செய்ய முயன்றதாகவும், தாக்கியதாவும் போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது. இந்தக் கொலைச் சம்பவத்தை சுரபி, தனது அக்கம்பக்கத்தினரிடம் தெரிவித்தார். இதையடுத்து, அவர்கள் போலீஸாருக்கு தகவல் தெரிவித்தனர். இதன் அடிப்படையில் குற்றவாளிகள் மூவரும் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கு, காஞ்சிபுரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கில், கொலை, கொள்ளை, கொலை முயற்சி உள்ளிட்ட குற்றங்கள் நிரூபிக்கப்பட்ட நிலையில், குற்றவாளிகள் மூவருக்கும் தலா 6 ஆயுள் தண்டனையும், இதனை ஏககாலத்தில் அனுபவிக்கவும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

# காற்று மாசு காரணமாக டெல்லி பள்ளிகளில் வகுப்பறைக்கு வெளியிலான நிகழ்வுகளுக்கு அரசு தடை!




**புதுடெல்லி, நவ.22:**

காற்று மாசு அதிகரித்துள்ளதால் டெல்லியில் பள்ளிகளில் வகுப்பறைக்கு வெளியிலான நிகழ்வுகளுக்கு அரசு தடை விதித்துள்ளது. காற்று மாசு நாளுக்குநாள் கடுமையாகி வரும் நிலையில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் டெல்லி பள்ளிகள் மைதானத்தில் மாணாக்கரை விளையாட அனுமதிப்பதைத் தடுப்பதைப் பரிசீலிக்கும்படி உச்ச நீதிமன்றம் பரிந்துரைத்திருந்த நிலையில் டெல்லி அரசு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

டெல்லியில் காற்று மாசு அதிகம். அதுவும் குறிப்பாக குளிர் காலங்களில் டெல்லியில் காற்று மாசும், பனி மூட்டமும் சேர்ந்து மக்களுக்கு கடுமையான சுவாசக் கோளாறுகளை ஏற்படுத்துகிறது. இதற்கு வாகனப் புகை மற்றும் அண்டை மாநிலங்களில் பயிர்க் கழிவுகள் எரிப்பதனால் ஏற்படும் புகை காரணம் எனக் கூறப்படுகிறது. இந்நிலையில் டெல்லியில் காற்று மாசைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது.

அதன்படி, டெல்லியில் பள்ளிகளில் வகுப்பறைக்கு வெளியிலான நிகழ்வுகளுக்கு அரசு தடை விதித்துள்ளது.

மருத்துவர்கள் பலரும், காற்று மாசுபாடு காரணமாக பெரியவர்களைவிட குழந்தைகள் அதிகளவில் பாதிக்கப்படுகிறார்கள் என்று தெரிவிக்கின்றனர். குழந்தைகளின் நுரையீரல் முழுமையாக வளர்ச்சி பெறும் முன்னர் அவர்கள் காற்று மாசு காரணமாக உடலில் நச்சை அதிகளவில் வாங்கிக் கொள்கின்றனர். இது அவர்களின் நுரையீரல் தாங்கும் திறனை வெகுவாகக் குறைத்து மூச்சுத் திணறல், ஆஸ்துமா போன்ற உபாதைகளை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கின்றனர்.

டெல்லி உகளவில் மிக மோசமான காற்று மாசைக் கொண்ட நாடாக உள்ளது. டெல்லி வாழ் மக்களுக்கு ஆஸ்துமா, இருமல் பாதிப்பு எல்லாம் சாதாரணமாகி விட்டது.

பலரும் இன்ஹேலர் உபயோகிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நவம்பர் பிறந்த பின்னர் தங்களிடம் சிகிச்சைக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை 30 முதல் 40% வரை அதிகரித்துள்ளதாக சிறார் நுரையீரல் மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

டெல்லியில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் சுத்தமான காற்று எங்கள் உரிமை என்ற பதாகை ஏந்தியபடி மக்கள் போராட்டம் வெடித்தது நினைவுகூரத்தக்கது.

## இந்தியாவுக்கு 5-ம் தலைமுறை போர் விமானங்கள்: ரஷ்ய பாதுகாப்பு நிறுவன தலைமை செயல் அதிகாரி தகவல்

**புதுடெல்லி, நவ.22:**

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் அடுத்த மாதம் இந்தியாவுக்கு வரவுள்ள நிலையில், 5-ம் தலைமுறை எஸ்யு-57 போர் விமானங்களை வழங்கும் திட்டத்தை ரஷ்யா முன்மொழிந்துள்ளது.

இதுகுறித்து ரஷ்ய அரசின் பாதுகாப்பு நிறுவனமான ரோஸ்டெக்கின் தலைமை செயல் அதிகாரி செர்கே செமெசோவ் கூறியதாவது: 5-ம் தலைமுறை போர் விமானங்களுக்கான தொழில்நுட்பங்களை இந்தியாவுக்கு வழங்க ரஷ்யா தயாராக உள்ளது. இந்த திட்டத்தின் முதல்கட்டமாக, ரஷ்யாவில் தயாரிக்கப்படும் எஸ்யு-57 போர் விமானங்கள் இந்தியாவுக்கு வழங்கப்படும்.

அடுத்தடுத்த கட்டங்களில் எஸ்யு-57 விமான தயாரிப்பு பணிகள் இந்தியாவுக்கு முழுமையாக மாற்றப்படும். இதில், இன்ஜின்கள், சென்சார்கள், போர்விமான உதிரி பாகங்கள் தயாரிப்புகளும் அடங்கும். பல தசாப்தங்களாக எந்தவொரு நெருக்கடியான காலக்கட்டங்களிலும் இருநாடுகளுக்கும் இடையிலான உறவு சுமுகமாவே தொடர்ந்து வருகிறது. எனவே, இந்தியா தொழில்நுட்பம் தொடர்பாக கேட்கும் எந்தவொரு கோரிக்கையும் ரஷ்யாவால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படும். இந்தியா மீது தடைகள் இருந்தபோதிலும் அதன் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு தேவையான ஆயுதங்களை நாங்கள் முன்பே வழங்கினோம். முந்தைய ஆண்டுகளைப் போலவே தற்போதும் அதனை தொடர்கிறோம்.

இந்தியாவுக்கு தேவையான அனைத்து ராணுவ உபகரணங்களையும் வழங்குவோம். எஸ்-400 அல்லது எஸ்யு-57 என இந்தியாவுக்கு என்ன நவீன தொழில்நுட்பம் தேவை என்றாலும் நாங்கள் அதனை ஆதரிக்க தயாராக இருக்கிறோம். இவ்வாறு செர்கே தெரிவித்தார்.

இந்தியாவுக்கு ரஷ்யா வழங்கும் நவீன தலைமுறை போர் விமானங்களில் ஒற்றை இன்ஜினை கொண்ட எஸ்யு-75 செக்மேட் போர் விமானமும் அடங்கும். எஸ்யு-75 தயாரிப்பு ஆலையை நட்பு நாட்டில் அமைக்க ரஷ்யா ஆர்வம் காட்டி வருகிறது. அதற்கு இந்தியா மிகவும் தர்கரீதியான தேர்வாக இருக்கும்.

வருவாய் அதிகரிக்கும்: இது நடைமுறைக்கு வந்தால் பிரம்மோஸைப் போல இந்தியாவுக்கு பல பில்லியன் டாலர் ஏற்றுமதி வருவாயை உருவாக்கும் என்று இந்திய விமானப்படை தலைவரும், பாதுகாப்பு ஆய்வாளருமான விஜயந்தர் கே.தாக்கூர் தெரிவித்துள்ளார்.

## உலகின் சிறந்த நகரங்களில் பெங்களூரு, மும்பைக்கு இடம்!

**புதுடெல்லி, நவ.22:**

கனடாவை சேர்ந்த ரெசோனன்ஸ் கன்சல்டன்சி என்ற சர்வதேச ஆய்வு நிறுவனம் ஆண்டுதோறும் உலகின் பல்வேறு நகரங்களை ஆய்வு செய்து தலைசிறந்த நகரங்களின் பட்டியலை வெளியிட்டு வருகிறது.

இதன்படி இந்த ஆண்டு உலகம் முழுவதும் 270 நகரங்களில் ரெசோனன்ஸ் ஆய்வு செய்தது. அப்போது நகரங்களின் கல்வி கட்டமைப்பு, கலாச்சாரம், சுகாதார கட்டமைப்பு, போக்குவரத்து, இரவு வாழ்க்கை, பாதுகாப்பு, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

இதன் அடிப்படையில் உலகின் தலைச் சிறந்த 100 நகரங்களின் பட்டியலை ரெசோனன்ஸ் கன்சல்டன்சி அண்மையில் வெளியிட்டது. இந்த பட்டியலில் இங்கிலாந்து தலைநகர் லண்டன் முதலிடத்தைப் பிடித்துள்ளது. அமெரிக்காவின் நியூயார்க் 2-வது இடத்தையும், பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் 3-வது இடத்தையும் பிடித்தன.

இந்த பட்டியலில் இந்தியாவின் கர்நாடக மாநில தலைநகர் பெங்களூரு 29-வது இடத்தைப் பிடித்தது. மகாராஷ்டிர தலைநகர் மும்பை 40-வது இடத்தையும், இந்திய தலைநகர் டெல்லி 54-வது இடத்தையும் பிடித்தன. தெலங்கானா தலைநகர் ஹைதராபாத் 82-வது இடத்தைப் பெற்றது. வேறு எந்த இந்திய நகரங்களும் பட்டியலில் இடம்பெறவில்லை.

## நிலக்கரி மாஃபியா வழக்கு: மேற்கு வங்கம், ஜார்க்கண்டில் 40 இடங்களில் அமலாக்கத் துறை சோதனை



**புதுடெல்லி, நவ.22:**

நிலக்கரி மாஃபியா மற்றும் சுரங்க முறைகேடு வழக்குகள் தொடர்பாக மேற்கு வங்கம் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் 40-க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத் துறை சோதனை நடத்தி வருகிறது.

நிலக்கரி திருட்டு மற்றும் சுரங்க முறைகேடுகளில் தொடர்புடைய 'நிலக்கரி மாஃபியா' கும்பல்களுக்கு எதிரான நடவடிக்கைகளின் கீழ் மேற்கு வங்கம் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் கொல்கத்தா, ராஞ்சி மண்டல அமலாக்கத் துறை அதிகாரிகள் நேற்று காலை 6 மணி முதல் சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜார்க்கண்டில் நிலக்கரி திருட்டு மற்றும் நிலக்கரி கடத்தல் தொடர்பான விசாரணையின் ஒரு பகுதியாக அமலாக்கத் துறை சுமார் 18 இடங்களில் சோதனை நடத்துகிறது. ஜார்க்கண்டில் அனில் கோயல், சஞ்சய் உத்யோக், எல்.பி. சிங் மற்றும் அமர் மண்டல் ஆகியோர் தொடர்புடைய நிறுவனங்களில் சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

மேற்கு வங்கத்தின் துர்காபூர், புருலியா, ஹவுரா மற்றும் கொல்கத்தா மாவட்டங்களில் சட்டவிரோத சுரங்கம், சட்டவிரோத நிலக்கரி போக்குவரத்து மற்றும் நிலக்கரி சேமிப்பு வழக்கில் சுமார் 24 இடங்களில் அமலாக்கத் துறை சோதனை நடத்தி வருகிறது.

மேற்கு வங்கத்தில் நரேந்திர கார்கா, யுதிஷ்டார் கோஷ், கிருஷ்ணா முராரி கயல், சின்மயி மொண்டல், ராஜ்கிஷோர் யாதவ் மற்றும் பலர் தொடர்புடைய இடங்களில் இந்த சோதனைகள் நடைபெற்று வருகிறது. இரு மாநிலங்களிலும் 100க்கும் மேற்பட்ட அமலாத் துறை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் இந்தச் சோதனைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## இந்தியாவில் 24.8 கோடி பேர் வறுமையிலிருந்து மீண்டனர்: யுனிசெப் அமைப்பு பாராட்டு



**புதுடெல்லி, நவ.22:**

உலக குழந்தைகள் தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டு யுனிசெப் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தேசிய பன்முக வறுமைக் குறியீட்டின்படி, 201314 முதல் 202223 வரையிலான காலத்தில் குழந்தைகள் உட்பட 24.8 கோடி மக்கள் வறுமையிலிருந்து மீள இந்தியா உதவி செய்துள்ளது. இதனால் நாட்டின் பன்முக வறுமை விகிதம் 29.2%ல் இருந்து 11.3% ஆகக் குறைந்துள்ளது.

சமூகத் துறை முதலீடுகள் மூலம், இந்தியாவின் வறுமைக் குறைப்பில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. போஷான் அபியான், சமக்ர ஷிக்ஷா, பிஎம் கிசான், மதிய உணவு திட்டம், பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைக்கு கல்வி அளிப்போம், தூய்மை இந்தியா, ஜல் ஜீவன் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் இந்தியாவின் வறுமையை ஒழிக்க உதவி உள்ளது.

உலக அளவில் முன்னிலை வகிக்கும் இந்தியாவின் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பானது, ஊட்டச்சத்து, கல்வி, வருமான ஆதரவு, சுகாதாரம், அனைவருக்கும் வங்கிக் கணக்கு வசதி ஆகியவற்றை மிகப்பெரிய அளவில் வழங்க உதவி உள்ளது. அதேநேரம் இந்தியாவில் உள்ள 20.6 கோடி குழந்தைகளுக்கு, வீடு, சுகாதாரம், குடிநீர், ஊட்டச்சத்து, கல்வி, சுகாதாரம் ஆகிய 6-ல் குறைந்தது ஒரு வசதி கிடைக்காத நிலை இன்னும் நீடிக்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

### ஜூனியர் கால்பந்து போட்டி: தமிழ்நாடு அணி வெற்றி

**லக்அனந்தபூர், நவ.22:**

ஆந்திர மாநிலம் அனந்தபூரில் ஜூனியர் மகளிர் தேசிய கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் தமிழ்நாடு அணி தனது முதல் ஆட்டத்தில் ஆந்திராவை 12-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியிருந்தது.

இந்நிலையில் தமிழ்நாடு அணி தனது 2-வது ஆட்டத்தில் நேற்று ராஜஸ்தான் அணியை எதிர்த்து விளையாடியது. இதில் தமிழ்நாடு அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தமிழ்நாடு அணி தரப்பில் 40-வது நிமிடத்தில் எஸ். தர்ஷினியும், 55-வது நிமிடத்தில் அன்விதா ரகுராமனும் கோல் அடித்து அசத்தினர். தமிழ்நாடு அணி தனது அடுத்த ஆட்டத்தில் (22ம் தேதி) அருணாச்சலபிரதேச அணியுடன் மோதுகிறது.

### ஆயுஷ் ஷெட்டி, லக்ஷயா கால் இறுதிக்கு முன்னேற்றம்

**சிட்னி, நவ.22:**

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் ஆஸ்திரேலிய ஓபன் பாட்மிண்டன் தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவு 2-வது சுற்றில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி 21-17, 21-16 என்ற செட் கணக்கில் 9-ம் நிலை வீரரான ஜப்பானின் கோடை நரோகாவையும், லக்ஷயா சென் 21-17, 13-21, 21-13 என்ற செட் கணக்கில் சீன தைபேவின் ஷியு ஜென்னையும் வீழ்த்தி கால் இறுதி சுற்றுக்கு முன்னேறினர்.

அதேவேளையில் ஹெச்.எஸ்.பிரனாய் 19-21, 10-21 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் ஃபர்ஹான் ஆல்வியிடமும், கிடாம்பி ஸ்ரீகாந்த் 20-22, 16-21 என்ற செட் கணக்கில் ஜப்பானின் ஷோகோ ஒகாவாவிடமும் தோல்வி அடைந்தனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாட்விக் சாய்ராஜ் ராங்கிரெட்டி, ஷிராக் ஷெட்டி ஜோடி 21-18, 21-11 என்ற செட் கணக்கில் சீன தைபேவின் சு சிங் ஹெங், வூ குவான் சுன் ஜோடியை வீழ்த்தி கால் இறுதிக்கு முன்னேறியது.

### டெஃப் ஒலிம்பிக்ஸ் போட்டியில் தங்கம் வென்றார் திக்ஷா தாகர்

**டோக்கியோ, நவ.22:**

டெஃப் ஒலிம்பிக்ஸ் போட்டி ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிருக்கான கோஃல்ப் போட்டியில் இந்தியாவின் திக்ஷா தாகர் தங்கப் பதக்கம் வென்றார்.

2017ம் ஆண்டு டெஃப் ஒலிம்பிக்ஸில் அறிமுகம் செய்யப்பட்ட இந்த போட்டியின் போது வெள்ளிப் பதக்கம் வென்றிருந்த திக்ஷா தற்போது தங்கம் வென்று அசத்தியுள்ளார்.

மகளிருக்கான 50 மீட்டர் புரோன் ரைபிள் பிரிவில் இந்தியாவின் மஹித் சாந்து 246.1 புள்ளிகளை குவித்து 2-வது இடம் பிடித்து வெள்ளிப்பதக்கம் வென்றார். செக் குடியரசின் எலிஸ்கா ஸ்வோபோடோவா 247.2 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து தங்கம் வென்றார். நடப்பு டெஃப்ஒலிம்பிக்ஸ் தொடரில் இந்தியா இதுவரை துப்பாக்கி சுடுதலில் மட்டும் 12 பதக்கங்கள் வென்றுள்ளது.

இதில் மஹித் சாந்து வென்ற 3 பதக்கங்களும் அடங்கும். அவர், 10 மீட்டர் கலப்பு அணிகள் பிரிவில் தங்கமும், 10 மீட்டர் தனி நபர் பிரிவில் வெள்ளிப் பதக்கமும் வென்றிருந்தார்.

### உலக குத்துச்சண்டை போட்டி: இந்திய வீராங்கனைகள் 'தங்க வேட்டை'

**கிரேட்டர் நொய்டா, நவ.22:**

உத்தரபிரதேச மாநிலம் கிரேட்டர் நொய்டாவில் உலக குத்துச்சண்டை போட்டி நடைபெற்று வந்தது. இதன் கடைசி நாளான நேற்று முன்தினம் மகளிருக்கான 48 கிலோ எடைப் பிரிவு இறுதி போட்டியில் இந்தியாவின் மீனாக்ஷி 5-0 என்ற கணக்கில் உஸ்பெகிஸ்தானின் ஃபர்சோனா ஃபோசிலோவாவை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றார்.

54 கிலோ எடைப் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் பிரீத்தி 5-0 என்ற கணக்கில் இத்தாலியின் சிரின் சர்ராபியை தோற்கடித்து தங்கம் வென்றார்.

70 கிலோ எடைப் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் அருந்ததி சவுத்ரி 5-0 என்ற கணக்கில் உஸ்பெகிஸ்தானின் அசிசா ஜோகிரோவாவை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றார்.

80+ கிலோ எடைப் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் நூர்புர் 3-2 என்ற கணக்கில் உஸ்பெகிஸ்தானின் சோடிம்போவாவை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றார்.

ஆடவருக்கான 50 கிலோ எடைப் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் ஐதுமணி சிங் 1-4 என்ற கணக்கில் உஸ்பெகிஸ்தானின் அசில்பெக் ஜலிலோவிடம் தோல்வி அடைந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

55 கிலோ எடைப் பிரிவில் பவன் பார்த்வால், 65 கிலோ எடைப் பிரிவில் அபினேஷ் ஜாம்வால், 80 கிலோ எடைப் பிரிவில் அங்குஷ் பங்கால் ஆகியோரும் இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்து வெள்ளிப் பதக்கம் வென்றனர்.

# வங்கதேசத்தில் கலவரங்களை ஏற்படுத்த முந்தைய அமெரிக்க அரசு நிதி அளித்தது

## ஷேக் ஹசீனா மகன் குற்றச்சாட்டு



**வர்ஜீனியா, நவ.22:**

வங்கதேசத்தில் கலவரங்களை ஏற்படுத்த ஜோ பைடன் தலைமையிலான முந்தைய அமெரிக்க அரசு நிதி அளித்தது என்று வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் மகன் சஜீப் வசீத் குற்றம்சாட்டியுள்ளார்.

வங்கதேசத்தில் கடந்த ஆண்டு அரசுக்கு எதிராக நிகழ்ந்த கலவரங்களை தொடர்ந்து அந்நாட்டு பிரதமர் ஷேக் ஹசீனா நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சம் அடைந்தார். கலவரத்தை ஒடுக்கியபோது ஏற்பட்ட வன்முறை மற்றும் உயிரிழப்பு குற்றங்களுக்காக அவருக்கு அந்நாட்டு நீதிமன்றம் அண்மையில் மரண தண்டனை விதித்தது.

பொருளாதார நிபுணர் முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசின் ஆட்சியில் இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஷேக் ஹசீனாவை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என இந்தியாவிடம் யூனுஸ் அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவில் வசித்து வரும் ஷேக் ஹசீனாவின் மகன் சஜீப் வசீத் கூறியதாவது: வங்கதேசத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்த ஜோ பைடன் தலைமையிலான முந்தைய அமெரிக்க அரசு மில்லியன் கணக்கில் டாலர்களை செலவிட்டுள்ளது. இதை இப்போதைய அதிபர் டொனால்டு ட்ரம்ப் ஒப்புக் கொண்டுள்ளார்.

ஆனால் ட்ரம்ப் ஆட்சியில் வங்கதேசம் தொடர்பான அமெரிக்க அரசின் அணுகுமுறை மாறிவிட்டது. வங்கதேசத்தில் தீவிரவாத அச்சுறுத்தல் மற்றும் இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் எழுச்சி குறித்து அதிபர் ட்ரம்ப் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார். கடந்த ஆண்டு வங்கதேசத்தில் எதிர்க்கட்சிகளால் புறக்கணிக்கப்பட்ட பொதுத் தேர்தலுக்கு பிறகு, ஜோ பைடன் அரசு எதிர்மறையான கருத்துகளை தெரிவித்தது.

இந்தியா எப்போதும் நல்ல நண்பராக இருந்து வருகிறது. என் தாயின் உயிரை இந்தியா காப்பாற்றியுள்ளது. அவர் வங்கதேசத்தை விட்டு வெளியேறவில்லை என்றால் தீவிரவாதிகள் அவரை கொன்றிருப்பார்கள். என் தாயின் உயிரை காப்பாற்றியதற்காக பிரதமர் மோடி அரசுக்கு நான் என்றென்றும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத சட்டவிரோத அரசு வங்கதேசத்தில் உள்ளது. எனது தாய்க்கு மரண தண்டனை விதித்தபோது நீதிமன்ற நடைமுறைகளை அந்த அரசு பின்பற்றவில்லை. விசாரணையை விரைவுபடுத்த சட்டங்களை திருத்தினர். வழக்கறிஞர்கள் வைத்துக்கொள்ள எனது தாயார் அனுமதிக்கப்படவில்லை.

விசாரணைக்கு முன் 17 நீதிபதிகள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். அனுபவம் இல்லாத அரசியல் தொடர்புடையவர்கள் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டனர். இவ்வாறு அவர் கூறினார்.

# நேபாளத்தில் மீண்டும் போராட்டம்: ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பு



**காத்மாண்டு, நவ.22:**

நேபாளத்தில் சமூக வலைதளங்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை எதிர்த்து ஜென்-ஸீ இளைஞர்கள் கடந்த செப்டம்பரில் வீதியில் இறங்கி போராட்டங்களை நடத்தினர். பின்னர் இந்த போராட்டம் வேலையின்மை மற்றும் ஊழலுக்கு எதிராக திரும்பியது.

இளைஞர்களின் போராட்டத்தை எதிர்கொள்ள இயலாமல் நேபாள பிரதமர் சர்மா ஒலி தனது பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து, நேபாளத்தின் இடைக்கால அரசு முன்னாள் தலைமை நீதிபதி சுஷிலா கார்க்கி தலைமையில் அமைக்கப்பட்டது.

கடந்த இரண்டு மாதங்களாக அமைதி திரும்பிய நிலையில், கடந்த இரு நாட்களாக ஜென்-ஸீ இளைஞர்களுக்கும், சர்மா ஒலி ஆதரவாளர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் வன்முறை சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. இதையடுத்து, பதற்றத்தை கட்டுப்படுத்த பாரா, சிமாரா பகுதிகளில் இரண்டாவது நாளாக மதியம் 1 மணியிலிருந்து இரவு 8 மணி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இடைக்கால அரசின் பிரதமர் சுஷிலா கார்க்கி கூறுகையில், "மார்ச் 25, 2026-ல் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால் ஜனநாயக நடைமுறைகள் மீது இளைஞர்கள் நம்பிக்கை வைக்க வேண்டும். நாட்டை நிர்வாகம் செய்ய புதிய தலைமுறையினரிடம் ஆட்சியை ஒப்படைக்க விரும்புகிறோம்" என்றார்.

# சுற்றுலா பயணிகளால் சீன கோயில் தீயில் சாம்பல்





**நியூயார்க், நவ.22:**

சீனாவின் ஜியான்சு மாகாணத்தில் பென்குவாங் மலை உள்ளது. இங்கு சீனாவின் பாரம்பரிய கோயில்கள் உள்ளன. இந்நிலையில், அங்குள்ள வென்சாங் பெவிலியனில் உள்ள கோயில் கடந்த 12-ம் தேதி புதன்கிழமை தீயில் எரிந்து சாம்பலானது.

இதுதொடர்பான புகைப்படங்களும் வீடியோக்களும் சமூக வலைதளங்களில் வைரலாயின. இந்த கோயில் கடந்த 2009-ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.

சீன இலக்கியம், கலாச்சாரம், பாரம்பரியம் கொண்டு அந்தக் கோயில் கலை வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்டது. இக்கோயிலுக்கு தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

அப்போது கோயிலுக்குள் மெழுகுவர்த்தி, ஊதுபத்திகளை கொளுத்தி வைப்பது வழக்கம். அதுபோல் சுற்றுலா பயணிகள் கடந்த 12-ம் தேதி மெழுகுவர்த்தி, ஊதுபத்திகளை கொளுத்தி வைத்துள்ளனர். எளிதில் தீப்பற்றும் இடத்தில் அவற்றை ஏற்றி வைத்ததால் கோயில் தீப்பிடித்ததாக முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# ரூ.824 கோடி மதிப்பிலான ஆயுதங்களை இந்தியாவுக்கு விற்க அமெரிக்கா ஒப்புதல்

**வாஷிங்டன், நவ.22:**

ரூ.824 கோடி மதிப்பிலான ஆயுதங்களை இந்தியாவுக்கு விற்க அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது. அமெரிக்காவின் பாதுகாப்பு ஒத்துழைப்பு அமைப்பு (டிஎஸ்சிஏ) நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: மொத்தம் ரூ.824 கோடி மதிப்பிலான வெளிநாட்டு (இந்தியா) ஆயுத விற்பனை தொடர்பான 2 திட்டங்களுக்கு வெளியுறவுத் துறை ஒப்புதல் அளித்துள்ளது.

இதில், ரூ.418 கோடி மதிப்பிலான எக்ஸ்காலிபர் ஏவுகணை மற்றும் ரூ.406 கோடி மதிப்பிலான ஈட்டி ஏவுகணை அமைப்பு ஆகியவை அடங்கும். இது அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் தேசிய பாதுகாப்பு இலக்குகளை ஆதரிக்கும்.

மேலும் அமெரிக்கா, இந்தியா இடையிலான ராஜதந்திர உறவை வலுப்படுத்தவும் இது உதவும். மேலும் இந்தோ-பசிபிக் மற்றும் தெற்கு ஆசிய பிராந்தியத்தில் அரசியல் நிலைத்தன்மை, அமைதி, பொருளாதார முன்னேற்றத்துக்கான முக்கிய சக்தியாக திகழும் ஒரு முக்கிய கூட்டாளியின் (இந்தியா) பாதுகாப்பை மேம்படுத்தவும் உதவும்.

இந்திய பாதுகாப்புத்துறைக்கு இது மிகப்பெரிய ஊக்கமாக இருக்கும். குறிப்பாக, துல்லியமான தாக்குதல் திறன் கொண்ட உபகரணங்களை வழங்குவதன் மூலம் இந்தியாவின் தற்போதைய மற்றும் எதிர்கால பிராந்திய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் திறன் மேம்படும். மேலும் இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பை வலுப்படுத்தவும் இது உதவும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கடந்த அக்டோபர் 31-ம் தேதி மலேசியாவின் கோலாலம்பூரில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத்தை சந்தித்தார்.

அப்போது இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு உறவை மேலும் பலப்படுத்துவது தொடர்பான 10 ஆண்டு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் தொடர்ச்சியாக ரூ.824 கோடி மதிப்பிலான ஆயுதங்களை இந்தியாவுக்கு விற்க அமெரிக்கா ஒப்புதல் வழங்கி உள்ளது.

# ஒரே இரவில் 470 ட்ரோன், 48 ஏவுகணை வீசி உக்ரைன் மீதான ரஷ்யா தாக்குதலில் 9 பேர் உயிரிழப்பு: ஜெலன்ஸ்கி கண்டனம்

**மாஸ்கோ, நவ.22:**

உக்ரைன் மீது ஒரே இரவில் 470 ட்ரோன்கள், 48 ஏவுகணைகளை வீசி ரஷ்யா கடுமையான தாக்குதலை நடத்தியது. அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையில் சேர உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி விரும்பினார். இதற்கு ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்தது.

அதை ஜெலன்ஸ்கி நிராகரித்ததால், கடந்த 2022ம் ஆண்டு பிப்ரவரி 24ம் தேதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடங்கியது. போரை நிறுத்த சர்வதேச அளவில் எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வி அடைந்தன. இதற்கிடையில் இரு தரப்பும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்நிலையில், உக்ரைன் மீது நேற்று முன்தினம் இரவு 470 ட்ரோன்கள், 48 ஏவுகணைகளை வீசி ரஷ்யா கடுமையான தாக்குதலை நடத்தியது. தாக்குதலுக்குப் பிறகு பற்றி எரியும் கட்டிடங்கள், சேதம் அடைந்த இடங்களின் வீடியோவை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி நேற்று வெளியிட்டு கண்டனம் தெரிவித்தார்.

இதுகுறித்து ஜெலன்ஸ்கி கூறியதாவது: ரஷ்யா தாக்குதலில் டெர்னோபில் பகுதியில் 9 மாடி குடியிருப்பு கட்டிடம் தரைமட்டமாகி உள்ளது. இதில் 9 பேர் உயிரிழந்தனர். 12-க்கும் மேற்பட்டர்கள் காயம் அடைந்தனர். கட்டிட இடிபாடுகளில் சிக்கி உள்ளவர்களை மீட்கும் பணியும் பற்றி எரியும் கட்டிடங்களில் தீயை அணைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

# நிழல் உலக தாதா அன்மோல் பிஷ்னோய் உட்பட 200 இந்தியர்களை நாடு கடத்தியது அமெரிக்கா

**வாஷிங்டன், நவ.22:**

அமெரிக்க அதிபராக டொனால்டு ட்ரம்ப் பொறுப்பேற்ற பிறகு அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியிருப்பவர்களை நாடு கடத்தும் நடவடிக்கையை தீவிரப்படுத்த உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து அங்கு சட்டவிரோதமாக வசித்து வந்த இந்தியர்கள் ஆயிரக்கணக்கானோர் இதுவரை நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இந்தியாவில் தேடப்படும் நிழல் உலக தாதாவான அன்மோல் பிஷ்னோய் உள்பட 200 இந்தியர்களை அமெரிக்கா நாடுகடத்தியுள்ளது. இவர்கள் அனைவரும் நேற்று டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். நிழல் உலக தாதாவான லாரன்ஸ் பிஷ்னோயின் சகோதரர்தான் அன்மோல் பிஷ்னோய் என்பது குறிப்பிடத்தக்கது.

தாதா லாரன்ஸ் மீது மகாராஷ்டிரா அமைச்சர் பாபா சித்திக்கியை கொலை செய்த வழக்கு, நடிகர் சல்மான் கான் வீட்டுக்கு வெளியே துப்பாக்கிச் சூடு நடத்திய வழக்கு உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவருடைய சகோதரரான அன்மோல் பிஷ்னோய் போலி ஆவணங்கள் மூலம் அமெரிக்கா, கனடா உள்ளிட்ட நாடுகளுக்கு மாறி மாறி பயணம் செய்தது போலீஸாருக்கு தெரியவந்தது. பாபா சித்திக்கி கொலை வழக்கில் அன்மோல் பிஷ்னோய்க்கும் தொடர்பிருப்பதை போலீஸார் உறுதி செய்துள்ளனர். இந்நிலையில்தான் அன்மோல், கடந்த ஆண்டு கலிபோர்னியாவில் கைது செய்யப்பட்டார். அதன் பின்னர் அவருக்கு போலீஸார் ஆங்க்கிள் மானிட்டர் எனப்படும் கண்காணிப்புக் கருவியை பொருத்தினர். இது ஜிபிஎஸ் பொருத்தப்பட்ட கருவியாகும். இதன்மூலம் கைதான நபர்கள், ஜாமீனில் வெளிவந்தாலும் கூட அவர்கள் செல்லும் இடங்களை போலீஸாரால் கண்காணிக்க இயலும். இது கருப்பு நிறப் பட்டையாக இருக்கும். இதனை, உடலில் இருந்து அவ்வளவு எளிதாக அகற்ற இயலாது.

அண்மையில் அன்மோல் பிஷ்னோயை பிடிப்பதற்காக மகாராஷ்டிர போலீஸார் ரெட் கார்னர் நோட்டீஸை வெளியிட்டிருந்தனர். இந்நிலையில்தான் அவர் தற்போது அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார். அன்மோலின் சகோதரர் லாரன்ஸ் பிஷ்னோய் தற்போது அகமதாபாத் சபர்மதி மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய அரசியலமைப்புக்கான பணிகள் 2026 இல் துவங்கும் : திஸாநாயக்க

**மாஸ்கோ, நவ.22:**

இலங்கையின் தேசியப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு கொடுப்பதாக அநுர குமார திஸாநாயக்க தேர்தல் வாக்குறுதி கொடுத்திருந்தார். அதன் ஒருபகுதியாக தற்போதைய இலங்கை ஜனாதிபதி திஸாநாயக்க வாக்குறுதியளிக்கப்பட்ட புதிய அரசியலமைப்புக்கான பேச்சுவார்த்தைகளை 2026 ஜனவரி மாதம் தொடங்குவதாக உறுதியளித்துள்ளார். மேலும், மாகாண சபைத் தேர்தல்களை தாமதமின்றி நடத்தப் போவதாகவும் கூறியுள்ளார். தமிழ்த் தேசியக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைவர்கள் திஸா நாயக்கவை சந்தித்து பேசிய போது இதனை அவர் தெரிவித்துள்ளார்.

# கனமழையால் மோசமடையும் பாலஸ்தீனர்களின் வாழ்க்கை

**காசா, நவ.22:**

பாலஸ்தீனர்களுக்கு மிக அதிகளவில் உள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமான நிவாரணப்பொருட்களை இஸ்ரேல் அனுமதிக்க மறுத்து வருகிறது. போதிய தங்குமிடங்கள் குளிரில் இருந்து தற்காத்துக் கொள்ளும் போர்வை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் இல்லாத காரணத்தால் கடந்த வாரம் பெய்த மழை மக்களின் வாழ்நிலையை மேலும் மோசமாக்கியுள்ளது. சுமார் 18,600-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கானோர் மீண்டும் தங்கள் இடத்தை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர் என ஐ.நா. மனிதாபிமான அமைப்பு தெரிவித்துள்ளது.

# கவனமாக இருக்க வேண்டும்: ஜப்பானுக்கு ரஷ்யா எச்சரிக்கை

**பெய்ஜிங், நவ.22:**

தைவான் குறித்து ஜப்பான் பிரதமர் ஆபத்தான கருத்துக்களைத் தெரிவிப்பதைத் தவிர்க்க வரலாற்றில் இருந்து பாடம் கற்க வேண்டும். ஜப்பானின் ராணுவவாதம் எப்படி முடிவுக்கு வந்தது என்பது எங்களுக்குத் தெரியும். ஜப்பானை ஆளும் அந்த அரசியல்வாதிகள் இதை நினைவில் வைத்திருப்பது, பொறுப்பற்ற அறிக்கைகள் எங்கு இட்டுச் செல்லும் என்பதைப் புரிந்துகொள்வது மற்றும் அவற்றைத் தவிர்ப்பது நல்லது என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் மரியா சக்கரோவா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# இந்தியர்கள் மீதான தாக்குதலை தடுக்க சிறப்புக் குழுக்கள்

**நியூயார்க், நவ.22:**

சமீப காலமாக அயர்லாந்தின் முக்கிய நகரங்களில் வசிக்கும் இந்தியர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இந்தத்தாக்குதல்கள் அனைத்திற்கும் அயர்லாந்து அரசு கண்டனம் தெரிவித்துள்ளதாகவும், இந்திய மாணவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு அயர்லாந்து இனிமையான இடம் எனவும் இந்தியாவுக்கான அயர்லாந்தின் தூதர் கெவின் கெல்லி கூறியுள்ளார். மேலும் அந்நாட்டில் இந்தியர்கள் மீதான தாக்குதல்களுக்கு எதிராக காவல் துறையின் சிறப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

# பிரிட்டன் பிரதமர் ஸ்டார்மர் பதவியை இழக்கலாம்



**நியூயார்க், நவ.22:**

பிரிட்டன் பிரதமராக உள்ள ஸ்டார்மர் தனது பதவியை இழக்கும் நிலை உருவாகியுள்ளது. ஸ்டார்மர் லேபர் கட்சியை கைப்பற்றி வலதுசாரிப் பாதையில் திருப்பிய பிறகு 2024 ஜூலை மாதம் நடந்த தேர்தலில் வெற்றி பெற்று பிரதமரானார். பதவியேற்ற பிறகு ராணுவத்திற்கான செலவுகளை அதிகரிப்பது, மக்கள் நலத்திட்ட உதவிகளை வெட்டுவது என மக்கள் விரோதப்போக்கை தொடரும் நிலையில் இவரது செல்வாக்கு வீழ்ந்துள்ளது. இந்நிலையில் இவர் தனது பதவியை இழக்கலாம் என செய்திகள் வெளியாகியுள்ளன.